Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

Tilko Jaffna City Hotel
❖ Banquet Hall
❖ Conference Hall
❖ Restaurant ❖ Luxurious rooms
❖ Swimming Pool
❖ Gymnasium/Spa
70/6, K.K.S Road, Jaffna.
E.Mail - tilkojaffna@gmail.com
Web - www.Cityhoteljaffna.com
T.P - 0212225969
Hotline: 0212229497
(C/3110)

முரசு - 04 திருவள்ளுவர் ஆண்டு 2044 ஐப்பசி 04 திங்கட்கிழமை (21.10.2013) பக்கங்கள் 20 ஓசை - 021

06 ROAD ACCIDENT துரிதம்

08 முன்னேற்றம்

18 UBS தயாரில்லை



## திருமண சேவையில் ஈடுபட்ட பேருந்து மோதி குடும்பஸ்தர் பலி

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகர் பிரதான வீதியில் மூன்றாம் குறுக்குத் தெருச் சந்தியில் நேற்றுக்காலை இடம்பெற்ற வீதி விபத்தில் ஐந்து பிள்ளைகளின் தந்தை ஒருவர் பலியானார்.

சங்கரத்தை துணைவி வட்டுக்கோட்டையைச் சேர்ந்த சூசைப்பிள்ளை யாக்கோ (வயது - 56) என்ற குடும்பஸ்தரே பலியானவராவார்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதாவது,

நேற்றுக்காலை வட்டுக்கோட்டையில் இருந்து துவிச்சக்கர வண்டியில் யாழ்.நகருக்கு வேலைக்காக 19 ஆம் பக்கம் பார்க்க

## அழுத்தத்தால் துரிதப்படுத்தப்படாத குர்ஹாம்சாக்கீ வழக்கு விசாரணை

### என்கிறார் சட்டமா அதிபர்

(கொழும்பு)

அழுத்தங்கள் காரணமாக குர்ஹாம் சாக்கீ வழக்கு விசாரணை துரிதப்படுத்தப்படவில்லை என சட்ட மா அதிபர் பாலித பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். பிரித்தானிய தன்னார்வத் தொண்டர் குர்ஹாம் சாக்கீ படுகொலை தொடர்பான வழக்கு விசாரணைகள் சர்வதேச அழுத்தம் காரணமாக துரிதப் படுத்தப்படவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

2011 ஆம் ஆண்டு நத்தார் பண்டிகையன்று குர் ஹாம் சாக்கீயும் அவரது ரஷ்ய காதலி விக்டோரியாவும் மோசமாகத் தாக்கப்பட்டனர். தாக்குதலில் விக்டோரியா பாலியல் ரீதியாக துன்புறுத்தப்பட்டு படுகாயமடைந்திருந்ததுடன், குர்ஹாம் சாக்கீ உயிரிழந்தார்.

சட்ட ரீதியான விவகாரம் என்பதனால் எவரின் அழுத்தங் 19 ஆம் பக்கம் பார்க்க

## முழங்காவில் பொன்னாவெளியில் மண்வள ஆய்வே இடம்பெற்றது

(முழங்காவில்)

முழங்காவில் பொன்னா வெளிப் பிரதேசத்தில் சிமெந்து உற்பத்திக்காக கல் அகழப்படவில்லை என்றும், அங்கே மண் வள ஆய்வு மட்டுமே மேற்கொள்ளப்பட்டது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

பொன்னாவெளிப் பிரதேசத்தில் அரசாங்கத்தின் ஏற்பாட்டில் சிமெந்து உற்பத்திக்குத் தேவையான கற்களை 50 வருட காலத்திற்கு அகழ்ந்தெடுக்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக ஊடகங்களில் வெளியாகிய செய்தி தொடர்பாக மண்வள ஆய்வு நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களிடம் கேட்டபோதே அவர்கள் இந்தச் செய்தி தவறானது என்று தெரிவித்தனர். 19 ஆம் பக்கம் பார்க்க

## கடற்றொழிலாளர்களுக்கு பாதுகாப்பு அங்கிகள் கட்டாயம்

### தவறின் சட்ட நடவடிக்கை

(கொழும்பு)

அடுத்தவருடம் முதல் பாதுகாப்பு அங்கிகளை அணிந்தே கடற்றொழிலில் மீனவர்கள் ஈடுபடவேண்டுமெனவும், தவறின் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் கடற்றொழில் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக கடற்றொழில் திணைக்களத்தின் பணிப்பாளர் நிமல் ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளதாவது,

இலங்கையில் ஒரு இலட்சத்து 85 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் கடற்றொழிலில் ஈடுபட்டுள்ளனர்.

இவர்கள் அனைவரும் பாதுகாப்பு அங்கிகளை அணிவது கட்டாயமானதாகும். கடந்த 19 ஆம் பக்கம் பார்க்க

# இந்திய மீனவரின் அத்துமீறல்;

# யாழ்ப்பாணத்தில் விசேட கூட்டம்



### ஜனாதிபதி பணிப்பு

(கொழும்பு)

இலங்கைக் கடற்பரப்பில் அண்மைக்காலமாக அதிகரித்து வரும் இந்திய மீனவர்களின் அத்துமீறல் குறித்து பொதுவான நிலைப்பாட்டை எட்டும் வகையில் இந்த விடயம் தொடர்பாக சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரும் பங்கேற்கும் கூட்டமொன்றை யாழ்ப்பாணத்தில் உடனடியாகக் கூட்டுமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சர் ராஜித சேனாரட்னவிற்கு உத்தரவிட்டுள்ளார்.

வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், அமைச்சுப் பதவிகளுக்காக கடந்த வியாழக்கிழமை ஜனாதிபதி செயலகத்தில் பதவியேற்றுக் கொண்ட பின்னரேயே ஜனாதிபதி அமைச்சர் ராஜிதவிற்கு மேற்கண்டவாறு உத்தரவைப் பிறப்பித்தார்.

முதற்கட்டமாக கடற்றொழில் அமைச்சர் ராஜித சேனாரட்ன தலைமையில் இந்தக் கூட்டத்தைக் கூட்டுமாறும், வடமாகாண முதல்வரையும் இந்தக் கூட்டத்தில் பங்கேற்குமாறும் ஜனாதிபதி அழைப்பு விடுத்தார்.

அத்துடன் இந்தக் கூட்டத்தில் பங்கேற்கும் வகையில் அமைச் 19 ஆம் பக்கம் பார்க்க

## இராஜதந்திர வழிமுறை மூலம் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு

### இந்தியா தெரிவிப்பு

இராஜதந்திர வழிமுறைகளின் ஊடாக இலங்கை தமிழர் பிரச்சினைகளுக்கு தீர்வு பெற்றுக் கொடுக்கப்படும் என இந்திய அரசாங்கம் அறிவித்துள்ளது.

இலங்கை வாழ் தமிழ் மக்களின் பிரச்சினைகளை இந்திய மத்திய அரசாங்கம் நன்றாகப் புரிந்து கொண்டுள்ளதாக காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம். கிருஸ்ணசுவாமி தெரிவித்துள்ளார்.



இலங்கைத் தமிழர் பிரச்சினை மற்றும் இந்திய மீனவர் பிரச்சினை குறித்து காத்திரமான தீர்வுத் திட்டமொன்று முன் வைக்கப்பட உள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறெனினும், நடுக்கடலில் இந்திய மீனவர்கள் மீது நடத்தப்படும் துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களின் எண்ணிக்கையில் பாரியளவில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். 19 ஆம் பக்கம் பார்க்க

## பொதுநலவாய மாநாட்டால் மக்களுக்கு நன்மை இல்லை

### கூறுகிறார் ரவிகருணாநாயக்க



(கொழும்பு)

அரசாங்கம் சர்வாதிகாரப் போக்கில் பயணித்துக் கொண்டிருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகருணாநாயக்க குற்றஞ்சாட்டியுள்ளார்.

நாட்டு மக்களையும் சர்வதேசத்தையும் ஏமாற்றித் தமது அரசியல் சுயலாபங்களை கருத்திற் கொண்டு பொதுநல வாய மாநாட்டை இலங்கையில் நடத்தவுள்ளது.

அந்த மாநாட்டினால் நாட்டிற்கோ, நாட்டு மக்களுக்கோ எவ்வித பயனும் கிடைக்கப் போவதில்லை இது வெறும் நாடகமாகும்.

அத்துடன் சர்வாதிகாரப் போக்கில் பயணித்துக் கொண்டிருக்கும் இந்த அரசாங்கம், தனது இந்தப் பயணத்தை மாற்றியமைத்து சுயாதீன ஆணைக் குழுக்களை அமைத்து நாட்டின் ஜனநாயகத்தை உறுதிப்படுத்த வேண்டும்.

அவ்வாறு செய்யாமல் இது போன்ற மாநாடுகளை மாத்திரம் நடத்துவது அர்த்தமற்ற ஒன்றாகும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பொதுநலவாய மாநாட்டை இலங்கையில் நடத்துவதற்கு நாம் எதிரானவர்கள் அல்ல. ஆனால், அதன் மூலம் நாட்டு 19 ஆம் பக்கம் பார்க்க

## பிரதமரின் பங்குபற்றுதல்; உரிய நேரத்தில் முடிவு

### நாராயணசாமி தெரிவிப்பு

(சென்னை)

இலங்கையில் நடைபெறும் பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாட்டில் இந்தியப் பிரதமர் பங்கேற்பது குறித்து உரிய நேரத்தில் முடிவெடுக்கப்படும் என இந்தியப் பிரதமர் அலுவலக இணை அமைச்சர் நாராயணசாமி தெரிவித்துள்ளார்.

சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களுக்கு வழங்கிய செவ்வியின் போது அவர் 19 ஆம் பக்கம் பார்க்க

விடுதலைப் புலிகளை அழித்த ஊடகங்கள்... 5 ஆம் பக்கத்தில்

# சமூகவிரோத செயல்கள் எரிக்கப்பட்டன பற்றைகள்



(அல்லைப்பிட்டி)

அல்லைப்பிட்டியில் முன்னர் அமைந்திருந்த, அலுமினியம் தொழிற்சாலைக்கு கிழக்குப் பக்கமாக ஊர்மனைக்குச் செல்லும் வீதிக்கு வடகிழக்காக அமைந்துள்ள பற்றைகளின் ஒதுக்குப் புறங்களில் வந்து ஒன்று கூடும் வெளியிடங்களைச் சேர்ந்த இனந்தெரியாத நபர்கள் சமூக சீரழிவு நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகவும், இவர்கள் மதுப் போத்தல்களுடனும் மங்கைகளுடனும் காணப்படுவதனால் இப்பகுதி ஊடாகச் செல்லும் பெண்கள், மாணவர்கள் அச்சம் கொள்வதாக தொடர்ந்து தெரிவித்து வந்ததையடுத்து இத் தகவல் பொதுமக்களினால் அல்லைப்பிட்டி கிராம சேவையாளரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டது.

இந்த விசமிகளை இப்பகுதியில் இருந்து அப்புறப்படுத்தும் நோக்கோடு, கிராமசேவையாளர் இரட்ணேஸ்வரனும், இப்பகுதியைச் சேர்ந்த இளைஞர்கள் பலரும் இணைந்து இப்பகுதியில் காணப்பட்ட ஒதுக்குப்புறமான பற்றைகள் அனைத்தையும் தீவைத்து அழித்துள்ளனர்.

# சித்தியடைந்த கிளிநொச்சி மாணவரை கௌரவித்தது கல்வி அபிவிருத்திக் குழு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட கல்வி அபிவிருத்தி குழுவினால் மாவட்டத்தில் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.



நேற்றுக் காலை பத்து மணிக்கு கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் மாவட்ட கல்வி அபிவிருத்தி குழுவின் தலைவர் ஓய்வுபெற்ற உதவிக்கல்விப் பணிப்பாளர் பத்மநாதன் தலைமையில் கௌரவிக்கும் நிகழ்வு இடம்பெற்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் 2013 இல் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் 159 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர். அத்தோடு 70 புள்ளிகளுக்கு மேல் 1600 மாணவர்கள் பெற்றுள்ளனர். இந்த நிலையில் சித்தியடைந்த 159 மாணவர்களுக்கும் சான்றிதழ்களும் சம்பத் வங்கியில் 4000 ரூபா வைப்பிலிடப்பட்டு வங்கிப் புத்தகமும் கையளிக்கப்பட்டது. இதில் நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமாரினால் 3000 ரூபாவும் சம்பத் வங்கியினால் 1000 ரூபாவும் வைப்பிலிடப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித்தலைவருமான முருகேசு சந்திரகுமார், கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன், கிளிநொச்சி வலயக்கல்விப்பணிப்பாளர் முருகவேல், வடக்கு மாகாண சபை உறுப்பினர் தவநாதன், மாவட்ட செயலக உதவித்திட்டப்பணிப்பாளர் கேதீஸ்வரன், கிளிநொச்சி வலய ஆரம்ப பிரிவு உதவிக் கல்விப்பணிப்பாளர் கணேசலிங்கம், சம்பத் வங்கியின் பிராந்திய முகாமையாளர் சங்கர் பஞ்சலிங்கம், ஓய்வுபெற்ற [illegible]விக் கல்விப்பணிப்பாளர் வைரமுத்து, பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் மாயழகு, மற்றும் பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# முதியோர் அமைப்பின் பொதுக்கூட்டம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி சந்திரபுரம் கிராமிய முதியோர் அமைப்பின் பொதுக்கூட்டம் இன்று காலை 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

சந்திரபுரம் பொது நோக்கு மண்டபத்தில் இடம் பெறும் இக்கூட்டத்திற்கு சந்திரபுரம் ஜே/315 கிராம அலுவலர் பிரிவில் வசிக்கும் 60 வயது பூர்த்தியடைந்த (ஆண்,பெண்) அங்கத்தவர் அனைவரையும் தவறாது பங்கு பற்றுமாறும், இப்பொதுக் கூட்டத்தின் போது புதிய ஆண்டுக்கான நிர்வாக சபைத் தெரிவும் இடம்பெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# நிறைவடையும் நிலையில் காலையடி அபிவிருத்திப் பணி

பண்டத்தரிப்பு - காலையடி. கிராமத்தின் அபிவிருத்தியில் பங்களிப்பாற்றி வருகின்ற மறுமலர்ச்சி மன்றத்தின் வளர்ச்சிப் பாதையில் பெரும் மைல்கல்லாக அமைகின்ற அபிவிருத்தித் திட்டத்தின் முதற்கட்டப் பணிகளான நவீன வசதிகளுடன் கூடிய பாலர் பாடசாலை, உள்ளக அரங்கு (கேட்போர் கூடம் என்பவற்றின் கட்டுமானப் பணிகள் இம்மாதத்துடன் நிறைவு பெறவுள்ளன.



கடந்த 28 ஆம் திகதி கட்டட ஒப்பந்தகாரருக்கும் மன்ற நிர்வாகிகளுக்கும் இடையில் இடம் பெற்ற கலந்துரையாடலில் இவ்விடயம் உறுதிப்படுத்தப்பட்டதுடன், இரண்டாவது கட்ட கட்டுமானப் பணிகளான திறந்த வெளி அரங்கு, சிறுவர் விளையாட்டுத்திடல், ஆலயம், தண்ணீர் தாங்கி, களஞ்சியம் தொடர்பாகவும் கட்டட ஒப்பந்தகாரருடன் கலந்துரையாடப்பட்டது.

இவற்றில் திறந்த வெளி அரங்கு, சிறுவர் விளையாட்டுத்திடல் ஆகியவற்றின் கட்டுமானப் பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், திறந்த வெளி அரங்கு பூர்த்தியாகும் நிலையில் இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

ஏனைய கட்டுமானங்களுக்குத் தேவையான நிதி தொடர்பான மதிப்பீடுகள் கட்டட ஒப்பந்தகாரரால் இச் சந்திப்பின் போது வழங்கப்பட்டன.

அவற்றின்படி ஆலயக் கட்டுமானத்திற்கான மொத்த செலவாக 3,162,700 ரூபாவும், தண்ணீர்த் தாங்கி, களஞ்சியத்திற்கான மொத்த செலவாக 1,278,050 ரூபாவும் மதிப்பிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆலயக் கட்டுமானப் பணிகளைத் தை மாதமளவில் நிறைவு செய்ய எண்ணியிருப்பதுடன், எதிர்வரும் 2014 ஆம் ஆண்டின் நடுப்பகுதியளவில் மறுமலர்ச்சி மன்றத்தின் 42 ஆவது ஆண்டு விழாவை வெகு விமரிசையாகக் கொண்டாடவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## அங்கிகள் திருட்டு

யாழ். கல்வியங்காடு முக்குறுணிப் பிள்ளையார் கோவிலின் மூலஸ்தான விக்கிரகத்தின் அங்கிகள் நேற்று முன்தினம் இரவு திருடப்பட்டுள்ளன.

மேற்படி ஆலயத்தின் கூரையைப் பிரித்துக்கொண்டு உள்நுழைந்த திருடர்கள், 2[illegible] இலட்சம் ரூபா பெறுமதியா[illegible] அங்கிகளை திருடியுள்ளனர்.


# சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2471 திகதி 19-10-2013

ஆங்கில எழுத்து: T

வெற்றி எண்கள்: 10 13 51 56

போனஸ் இல: 04

ஜக்பொட் பரிசு ரூ.35,091,475/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
| --- | --- | --- | --- |
| 1 இல | 256445 | 20/- | 5,128,900/- |
| 2 இல | 18220 | 100/- | 1,822,000/- |
| 3 இல | 376 | 1,000/- | 376,000/- |
| 4 இல | 02 | 1,000,000/- | 2,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 10192 | 40/- | 407,680/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 708 | 1,000/- | 708,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 15 | 10,000/- | 150,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 35,091,475/- | - |
| 1 இல + போனஸ் இல | 12212 | 100/- | 1,221,200/- |
| 2 இல + போனஸ் இல | 577 | 500/- | 288,500/- |
| 3 இல + போனஸ் இல | 06 | 100,000/- | 600,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 458 | 200/- | 91,600/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 22 | 1,500/- | 33,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 299233 | | 12,826,880/- |

ஊதா நிற டிக்கட்டுகள் 2013.10.23 ஆம் திகதி புதன்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு ரூ. 35,790,800/-

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை

356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02 தொ.பே: 2333546/7

(C/3105)


# திடீர் சுகயீனம்; தொழிலாளி உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

கட்டடத் தொழிலாளி ஒருவர் திடீர் சுகயீனமுற்ற நிலையில் தெல்லிப்பழையில் அனுமதிக்கப்பட்ட போதும் அங்கு சிகிச்சை பலனின்றி மரணமானார்.

நேற்று முன்தினம் பிற்பகல் இடம் பெற்ற இந்தச் சம்பவத்தில் அராலி கிழக்கு ஐயனார் கோயிலடியைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையாகிய பாலச்சந்திரன் கனகசபாபதி (வயது - 55) என்ற கட்டடத்தொழிலாளியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சம்பவ நேரம் வீடு ஒன்றில் பூச்சு வேலையில் ஈடுபட்டிருந்த அவர் நெஞ்சுக்குள் ஏதோ செய்வதாக அருகில் இருந்த பணியாளரிடம் தெரிவித்திருக்கிறார்.

இதனையடுத்து சக பணியாளர்கள் அவரைச் தெல்லிப்பழை வைத்திய சாலைக்கு கொண்டுசென்று அனுமதித்ததாகவும், இருந்தும் அங்கு 15 நிமிடத்தின் பின்னர் அவர் மரணமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து சட்ட வைத்திய அதிகாரியின் பரிசோதனைக்காக சடலம் நேற்று முற்பகல் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டதாக அவ்வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (பா)



மருதனார்மடம் - உடுவில் வீதியில் நேற்று நண்பகல் டிப்பர் வாகனமொன்று தேக்குமரம் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளாகியது. பட உதவி: செந்தில்

# வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்தின் வாசிப்பு மாத போட்டி நிகழ்வுகள்

(வடமராட்சி)

வல்வெட்டித்துறை நகராட்சி மனறத்தினால் வாசிப்பு மாதத்தை முன்னிட்டு மாணவர்களின தும், பொது மக்களினதும் வாசிப புத்திறன் மற்றும் நூலகப் பயன்பாட்டை மேம்படுத்தும் நோக்கில் முன்பள்ளி ஆசிரியர்கள், பாடசாலை மாணவர்கள், மற்றும் பொதுமக்களுக்கான பின்வரும் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்தின் எல்லைக்குட்பட்ட பாடசாலைகள், சனசமூக நிலையங்கள் மற்றும் முன்பள்ளிகளின் ஆசிரியர்கள் கலந்து கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பாடசாலை மாணவர்களுக்கிடையே பின்வரும் போட்டிகள் நடத்தப்படவுள்ளன

கீழ்ப்பிரிவு : தரம் 3 - 5 வரையான மாணவர்களுக்கு "எனது கிராமம்" என்ற தலைப்பிலான சித்திரப் போட்டிகள்.

மத்திய பிரிவு : தரம் 6 - 9 வரையான மாணவர்களுக்கு மாதிரி சுவரொட்டி தயாரித்தல்

மேற்பிரிவு : தரம் 10 - 11, ஆகிய மாணவர்களுக்கு பொது அறிவுப் போட்டியும், தரம் 12,13 மாணவர்களுக்கு குறுக்கெழுத்துப் போட்டியும் நடத்தப்படவுள்ளன.

சனசமூக நிலையங்களினூடாக பொதுமக்களுக்கு, தொலைக்காட்சிப் பாவனை இன்றைய மனித வாழ்வில் ஏற்படுத்தும் தாக்கம் என்ற தலைபபிலான சிறுகதைப் போட்டியும் நடத்தப்படவுள்ளது.

மேற்படி போட்டிகள் யாவும் எதிர்வரும் 22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நகராட்சி மன்றத்தின் புதிய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. பாடசாலை அதிபர்கள் ஒவ்வொரு பிரிவில் இருந்தும் தெரிவு செய்யப்பட்ட இருமாணவர்களையும், சனசமூக நிலையங்கள் ஒவ்வொன்றில் தலா இருவர் வீதமும் மேற்படி போட்டிகள் நடைபெறும் நாளன்று தவறாது அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப படுகின்றனர்.

அதேவேளை முன்பள்ளி மாணவர்களுக்கான கதை சொலலும் நேரம் நிகழ்வுகளில் கலநது கொள்ளும் முன்பள்ளிகள் ஒவ்வொன்றும் தமது முன்பள்ளிகளில் இருந்து தலா ஐந்து மாணவர்கள் வீதம் அழைத்து வருமாறு கேட்டுக் கொள்ளப் படுகின்றனர்.

இவை தொடர்பான அறிவித்தல்கள் சகல பாடசாலைகளுக்கும் ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளதால் தமது மாணவர்களின் வாசிக்கும் ஆற்றலை மேம்படுத்துவதற்காக குறித்த பிரிவு மாணவர்களைத் தவறாது அனுப்பி வைக்குமாறு வல்வெட்டித்துறை நகர பிதா நடராஜா அனந்தராஜ் சகல அதிபர்களையும் கேட்டுக் கொள்கின்றார்.

கடந்த வருடமும், இவ்வருடமும் நடைபெற்ற போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கான பரிசுகளும் சான்றிதழ்களும் நிறைவு நாளன்று நடைபெறும் விழாவில் வழங்கப்படவுள்ளன.

# பெரும்போகம் அமோகம்

(யாழ். நிருபர்)

பருவமழை பெய்ய ஆரம்பித்துள்ளமையைத் தொடர்ந்து காரைநகர் பிரதேச விவசாயிகள் தமது வயல்களில் பெரும்போக நெல் விதைப்பு நடவடிக்கையில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

விதைப்பு தொடங்கியுள்ளதால் இதுவரை காலமும் கட்டாககாலிகளாக வயல் நிலங்களில் மேய்ந்து வந்த ஆடு மாடுகளை வயல் நிலங்களுக்குச் செல்லவிடாது அவற்றைத் தமது வீடுகளில் கட்டி வளர்க்குமாறு காரைநகர் விவசாய சம்மேளனத்தினர் கால்நடைச் சொந்தக்காரர்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இம்முறை வயல் நிலங்களில் அத்துமீறிப் பிரவேசித்து பயிர் அழிவினை ஏற்படுத்தும் கால்நடைகள் தொடர்பாக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமென காரைநகர் பிரதேச சபையின் தவிசாளர் வே.ஆனைமுகன் தெரிவித்துள்ளார். (10)

# கலைஞர் கௌரவிப்பும் விருது வழங்கலும்

(வடமராட்சி)

வடமராட்சி வடக்கு பிரதேச செயலகத்தின் கலாசாரப் பேரவையின் எற்பாட்டில் வருடாந்தம் நடத்தப்படும் கலை இலக்கியப் பெரு விழாவின் இவ்வருடத்திற்கான நிகழ்வு எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பருத்தித்துறை ஸ்ரீ பர்வதவர்த்தனி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் 2013 ஆம் ஆண்டுக்கான கலைஞர்களின் கௌரவிப்பும்,விருது வழங்கும் நிகழ்வும் பிரதேச செயலர் ஆர்.ரி.ஜெயசீலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

வடமராட்சி வடக்கு கலாசாரப் பேரவையினால் இவ் வருடத்திற்கான விருதுபெறும் கலைஞர்களாக பின்வரும் துறை சார்ந்த மூத்த கலைஞர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக கலாசாரப் பேரவையின் செயலாளரும், கலாசார அலுவலருமான் செல்வி.செல்வசுகுணா தெரிவித்துள்ளார்.

இதன்படி சமூக நாடகம் ஜோசப் இருதயராஜா (பருத்தித்துறை), பாரம்பரியக் கலைகள் - அப்பாத்துரை சித்திர வேலாயுதம் (வல்வெட்டித் துறை), ஊடகத் துறை - சின்னத்துரை தில்லைநாதன் (புலோலி) சிற்பம்,ஓவியம்- மாரிமுத்து ஆச்சாரி ஜெயானந்தன் ஆச்சாரி. (தும்பளை) இலக்கியம் - கந்தையா சின்னராஜா (அலவாய்) ஆகிய கலைஞர்களுக்கு வழங்கப்படவுள்ளது.

இவ் விருது வழங்கும் நிகழ்வில், மாணவர்களின தும், கலை இலக்கிய மன்றங்களினதும் கலை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

# பண்டத்தரிப்பில் வழிப்பறி பயணிகள் அச்சத்தில்

வலிகாமம் பிரதேசத்தில் கடந்த சில நாட்களாக வழிப்பறிக் கொளளைச் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாக இப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபைக்குட்பட்ட சங்கானை, பண்டத்தரிப்பு மற்றும் சில்லாலை போன்ற பகுதிகளிலேயே பகல் நேரங்களில் வழிப்பறிச் சம்பவங்கள் நடைபெறுவதாகக் கூறப்படுகிறது.

குறித்த பகுதிகளில் கடந்த சில நாட்களாக வீதிகளில் செல்பவர்களது பணம், நகை மற்றும் கைத்தொலைபேசிகள் என்பன இனந்தெரியாத மர்ம நபர்களால் அபகரித்துச் செல்லப்படுவதால் மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

இப்பகுதி மக்கள் வங்கிகளில் இருந்து பணத்தை எடுத்துச் செல்வதை அவதானிக்கும் மர்ம நபர்கள் அவர்களை மோட்டார் சைக்கிளில் பின் தொடர்ந்து பணப்பையினைப் பறித்துச் சென்றுவிடுகின்றனர்.

இத்தகைய வழிப்பறிக் கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபடுவோரை அடையாளம் காணமுடியாமல் பொலிஸ் நிலையங்களிலும் முறைப்பாடு செய்யமுடியாத நிலை காணப் படுவதாகவும் இப்பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (10)



பூநகரி பிரதேச செயலர் பிரிவிலுள்ள ஜெயபுரம் தெற்கு கிராம அலுவலர் பிரிவில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் வாழ்வின் எழுச்சித் திட்டத்தின் கீழ் விதைநடுகைத் திட்டம் நடைபெறுவதனைக் காணலாம் (90)

# மீண்டும் பதற்றமா?




அமைதியை உருவாக்குவது ஒரு வகையான அரசியல். அமைதியைச் சிதைப்பது இன்னொரு வகையான அரசியல்.

அமைதியை உருவாக்குவது சாதாரணமானதல்ல. மிகக் கடினமானது.

அமைதியைச் சிதைப்பது மிகச் சுலபமானது.

நீண்ட போருக்குப் பிறகு, பேரழிவுகளையெல்லாம் சந்தித்த பின்னர், மிகக் கொடுமையான இழப்புகளின் மத்தியில் கிடைத்திருப்பதே தற்போதைய அமைதி.

இது அமைதியா என்று யாரும் கேட்கக்கூடும். ஆனால், முன்னர் இருந்த நிலைமைகளுடன் ஒப்பிட்டுப்பார்த்தால் இது அமைதி தான். இதை இன்னும் முழுமைப்படுத்த வேண்டியிருந்தாலும் தற்போது இது வளர்ந்து வரும் அமைதிச் சூழலே.

சில ஆண்டுகளுக்கு முன்னர், நாங்கள் இருந்த நிலையை ஒரு கணம் நினைத்துப் பாருங்கள். அப்போது இந்த அமைதியின் பெறுமதி விளங்கும்.

அப்பொழுது, அமைதி என்றால் என்ன என்றே யாருக்கும் தெரியாது. கொந்தளிக்கும் மனமும் எரிந்து கொண்டிருக்கும் நாட்களுமாக எங்களின் வாழ்க்கை இருந்தது.

இலங்கைத் தீவே குருதியில் குளித்து, நெருப்பில் எரிந்தது. ஊர்களும் வாழ்க்கையும் சுடுகாடாகியிருந்தன.

சனங்கள் வாழ முடியாதென்று புலம்பெயர்ந்தனர்.

ஊரை விட்டு, உறவுகளை விட்டு, நாட்டை விட்டுத் தப்பியோட வேண்டிய நிலை, அமைதி இருந்திருக்குமானால் ஏற்படுமா? இப்பொழுது அந்த நிலை இல்லை.

ஆனாலும் சிலர் மீண்டும் அந்த நிலையை உருவாக்கவே விரும்புகிறார்கள்.

சனங்களாகிய நாங்கள் இதைக் குறித்துக் கவனமாக இருக்கவேணும்.

கவனமாக இருப்பது என்பது, விழிப்பாக இருத்தல் என்று அர்த்தப்படும். விழிப்பு என்பது அவதானமாக இருத்தல், அறிவாக இருத்தல் என்பதாகும்.

அண்மையில் சில பிரதேச சபைகளிலும் நகர சபைகளிலும் சில தீர்மானங்கள் நிறைவேற்றப்படுகின்றன.

மாவீரர் நாளைக் கொண்டாட வேண்டும். மாவீரர் துயிலுமில்லங்களைத் துப்புரவு செய்ய வேண்டும் என்ற தீர்மானங்கள்.

விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு சாவைத்தழுவிக் கொண்டவர்களுக்கு நிச்சயமாக மரியாதை செலுத்தப்பட வேண்டும்.

அதற்கான பொது உடன்பாட்டை எட்டி, பொது நாள் ஒன்றைத் தெரிவு செய்து, அந்த நாளில் மரியாதை செய்வது அவசியம்.

அதை விடுத்து, எழுந்தமானமாக, அதிரடித் தீர்மானங்களை நிறைவேற்றுவதும் அதை நடைமுறைப்படுத்த முடியாமல் விடுவதும் கோமாளித்தனமானது மட்டுமல்ல, தம்மை அர்ப்பணித்துச் சாவைத் தழுவிக் கொண்ட விடுதலைப் போராளிகளைக் கொச்சைப்படுத்துவதுமாகும்.

கடந்த ஆண்டும் இதேபோல சில தூண்டுதல்கள் நடந்தன. இந்தத் தூண்டுதல்களால் சில இளைஞர்கள் கைதாகியதே மிஞ்சியது.

இறுதியில் கைதாகிய இளைஞர்களின் பெற்றோர்தான் கலங்கித்தவித்தனர்.

தற்போது துயிலுமில்லங்களைப் புனரமைப்பது என்ற தீர்மானங் கள் அந்த இடங்களில் படைமையங்களையே உருவாக்க உதவி யிருக்கிறது. இது நிலைமையை மேலும் மோசமாக்கும் முட்டாள்தனமான அணுகுமுறை.

இவ்வாறான தீர்மானங்களைச் செய்வோரைக் குறித்தும் இந்தத் தீர்மானங்கள் எதிர்காலத்தில் உருவாக்கும் நெருக்கடிகளைக் குறித்தும் வலம்புரி பத்திரிகை 18.10.2013 இல் நல்லதோர் ஆசிரிய தலையங்கம் எழுதியிருக்கிறது.

தற்போதைய சூழலில் வடமாகாணசபையோ அல்லது முதலமைச்சர் விக்கினேஸ்வரனோ அல்லது, சம்பந்தன், டக்ளஸ் தேவானந்தா, சித்தார்த்தன், சுகு சிறிதரன், சுரேஸ் பிரேமச்சந்திரன் மற்றும் புலம்பெயர் நாடுகளிலுள்ள முன்னாள் போராளிகள், நாட்டிலுள்ளவர்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரும் இணைந்து இதைப் பற்றி அரசுடன் பேசி ஒழுங்கு செய்து, அதை ஒரு பொது நாளாக்கி அனுஷ்டிக்கலாம்.

இந்தமாதிரியான விசயங்கள் உணர்வு பூர்வமானவை. அதே வேளை இதைக் கையாள்வதற்குச் சில வழிமுறைகள் உண்டு.

அந்த வழிமுறைகளைப் பின்பற்றினால், சிக்கலான விசயங்களைக் கூட மிக எளிதாகச் செய்து முடித்து விடலாம்.

உண்மையில் இப்படிச் செய்வதன் மூலம் இரண்டு சமூகங்களுக்கிடையில் இருக்கின்ற போலித்தனங்களையும் கசப்புகளையும் இடைவெளியையும் குறைக்க முடியும்.

அதை விடுத்து, பொறுப்பற்றதனமாக நடந்து, பதற்றத்தை உருவாக்கி சமூகத்தைச் சீரழிப்பது குற்றம். இந்த மாதிரியான குற்றச்செயல்களால்தான் தமிழ்ச் சமூகம் பின்னடைந்து போய்க்கொண்டிருக்கிறது.

உண்மையை எல்லாம் சொல்ல வேண்டியதில்லை. சொல்வதெல்லாம் உண்மையாக இருக்கட்டும்.

- பொன்மொழி.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## தேர்தலோடு வரும் பகை முழக்கம்!

“நாம் முடிந்தவரை அரசாங்கத்தின் ஒத்துழைப்போடு வட மாகாணத்தில் எம்மக்களுக்கான அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்போம். வெறுமனே அரசியல் காரணங்களினால் முரண்டு பிடித்துக் கொண்டு அரசாங்கத்தை பகைத்துக் கொள்வதினால் எவ்வித அர்த்தமுமில்லை. அதனால் நாம் அரசாங்கத்தை எதிர்க்கப் போவதுமில்லை”

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் தெரிவான வடமாகாண சபை முதலமைச்சர் விக்னேஸ்வரன் தெரிவித்திருக்கிறார். முன்னாள் நீதியரசர் யதார்த்தத்தைப் புரிந்து கொண்டு பேசுகிறார் என்ற பாராட்டுணர்வு தோன்றி அடுத்த கணத்திலேயே, இப்போதைக்குத் தேர்தல் எதுவும் வந்துவிடக் கூடாதே என்ற பயவுணர்வும் வருகிறது.

தேர்தல் வந்துவிட்டால் வாக்குகளைச் சேகரிக்கும் உணர்ச்சியலையை உருவாக்குவதற்காக அரச எதிர்ப்பு முழக்கத்திற்கு மாறி விடுவார்களோ என்ற பயம்தான் அது.

மனிதர்கள் உணர்ச்சிமயமாக இருக்கும்போது, வாழ்வுக்கு அவசியமான உண்மைகள் பின்னால் ஓடி ஒளிந்துவிடுகின்றன. பழிக்குப் பழி தீர்த்தே தீருவது என்ற ஆவேசத்தை மனதில் புகுத்திக் கொண்டால், சுற்றியுள்ளவர்களெல்லாம் அழிந்துபடுவதையும் அவலப்படுவதையும் நியாயமாக்கிக் கொண்டுவிடுகிறதுமனது.

நெடிய போரால் நொந்துபட்டுக் கிடக்கும் மக்களின் வாழ்க்கையைக் கட்டியெழுப்பும் கதையையெல்லாம் தூக்கியெறிந்து விட்டு மீண்டும் எதிர்ப்பும் பகையுமான விரோத மனநிலைக்கு மக்களைத் தள்ளிவிடக் கூடும் என்ற பயமே கடந்தகால அனுபவங்களிலிருந்து வருகிறது.

தேர்தல் இல்லாக் காலத்திற்கு மட்டும் என்றில்லாது, இணக்க அரசியல் வழிமுறையை நமது மக்களின் முன்னேற்ற வாழ்வுக்கென முழுமையாக நம்ப வேண்டும். வன்முறை கொதித்துக் கொண்டிருக்கும் மனங்களை நடைமுறைச் சாத்தியமற்ற ஆரவாரப் பேச்சுக்களால் தூண்டிவிடாது வாழ்வைச் செப்பம் செய்து கொள்வதற்காக அவற்றை ஆற்றுப்படுத்துதலையே மக்கள் மீது அக்கறையுள்ள தலைமை இன்று செய்ய வேண்டும்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் பிறந்த இயேசு கிறிஸ்து, ‘கண்ணுக்குக் கண்’, ‘இரத்தத்துக்கு இரத்தம்’ என்ற நியதியை மாற்றி, ‘ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தையும் காட்டு’ என்று புது நீதி வழங்கினார்.

தன் மதத்தில் இருந்த வன்முறையை உணர்ந்த சித்தார்த்தன், மனதில் கருணையைப் பொங்க விடாமல் மனிதர்க்கு வாழ்வில்லை என்று கண்டார். அகிம்சைக்கும் அன்பிற்குமே எதையும் மாற்றும் சக்தி உண்டு வன்முறைக்கல்ல என்று உணர்த்தினார்.

ஆவேசத்தில் மதியிழக்கும் நாம், வெறுப்பினாலும் வீரத்தினாலும் நீதியை உருவாக்கிவிட முடியும் என்று போலியாக நம்புகிறோம். அதனால் மேலும் மேலும் அழிவுகளைத்தான் உருவாக்கிக் கொள்கிறோம். நம்மை நாமே ஏமாற்றிக்கொண்டு விட்டில் பூச்சிகளாக வீழ்ந்து கொண்டிருக்கிறோம்.

ஆயிரம் நீதி நியாயங்களைப் பேசுகிற நாம், மனிதர்களை நீதியால் வெல்ல முடியும் என்பதில் முழுநம்பிக்கை கொள்வதில்லை. நமக்குள் இருக்கிற நீதியுணர்வு எல்லா மனிதர்களுக்குள்ளும் இருக்கத்தான் செய்யும்; அதைத் தூண்டிவிட முடியும்; எதிரிகள் என்ற நிலையிலிருந்து அவர்களை மாற்ற முடியும் என்பதையெல்லாம் நிதானிப்பதில்லை. எதிர்ப்பினால் லாபம் பெற்றுக் கொண்டிருப்பவர்கள் வலையில் விழுந்துவிடுகிறோம்.

கோபம் கொண்ட மனது விவேகத்தை இழந்துவிடுகிறது. காந்தத்தின் எதிரெதிர் துருவங்கள் ஒட்டிக்கொள்ளும்போது, வேறு வேறு கருத்துடைய வேறு வேறு கலாசாரமுடைய, இன்னும் நாம் கருதிக் கொள்ளும் பல வேறு வேறுகளையுடைய மனிதர்கள் சேர்ந்து வாழ முடியாதா?

எதற்காக இவ்வளவு குரோதங்களும் பிளவுகளும் வாழ்வுத் தொலைப்புகளும்...

- ஆசிரியர்

# பிரதி அமைச்சு பதவிக்காக பங்காளிக்கட்சிகள் ஏக்கம்

## பச்சைக்கொடி காட்டுகிறது அரசு

(கொழும்பு)

சிறுபான்மைக் கட்சிகள் அரசாங்கத்திடம் பதவிகளை கோரியுள்ளன. தமிழ், முஸ்லிம் சிறுபான்மைக் கட்சிகள் இவ்வாறு பதவிகளைக் கோரியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறைந்த பட்சம் பிரதி அமைச்சுப் பதவிகளை யாவது வழங்குமாறு சிறுபான்மைக் கட்சிகள் கோரியுள்ளன. ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும் தமிழ், முஸ்லிம் கட்சிகள் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளன.

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட இரண்டு அமைச்சரவை மாற்றங்களின் போதும் சிறுபான்மைக் கட்சிகளுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

தமது மக்கள் சமூகத்திற்கு சேவையாற்ற பிரதி அமைச்சுப் பதவிகள் தேவைப்படுவதாக கட்சிகள் கோரியுள்ளன. அரசாங்கம் அளித்த வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை என அவை குற்றம் சுமத்தியுள்ளன.

எனினும் இந்தக் கட்சிகளைத் திருப்திப் படுத்துவதற்காக மேலும் ஒரு அமைச்சரவை மறுசீரமைப்புக்கு அரசு தயாராகி வருவதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இதன்போது இத்தகைய கட்சிகளுக்கு பிரதி அமைச்சர் பதவிகள் கிடைப்பதற்கு வாய்ப்புகள் தோன்றியுள்ளன.

# கோடிக்கணக்கில் வங்கி மீதி ஆட்கடத்தல்காரர் சாதனை

## வங்கிக் கணக்கை முடக்க ஆலோசனை

(கொழும்பு)

ஆட்கடத்தல் கும்பல்களின் நடவடிக்கைகள் அதிகரித்துள்ளதாகவும், இவர்கள் மில்லியன் கணக்கில் வங்கி மீதிகளைப் பேணி வருவதாகவும் அதிர்ச்சித் தகவல் இப்போது வெளியாகியுள்ளது.

சட்டவிரோத ஆட்கடத்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்ட நபர் ஒருவரின் வங்கிக் கணக்கில 400 மில்லியன் ரூபா பணம் வைப்புச் செய்யப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டிருப்பது கண்டு பிடிக்கப் பட்டுள்ளது.

அவுஸ்ரேலியாவிற்கு சட்டவிரோதமான முறையில் ஆட்களைக் கடத்திய நபர் ஒருவரின் கணக்கில் இவ்வாறு பணம் வைப்பிலிடப்பட்டுள்ளது.

திருகோணமலையைச் சேர்ந்த முக்கிய வர்த்தகர் ஒருவரே இவ்வாறு சட்டவிரோத ஆட்கடத்தலுடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டிருந்தார்.

குறித்த வர்த்தகர் பல படகுகளைச் சட்டவிரோதமான முறையில் அவுஸ்ரேலியாவிற்கு அனுப்பி வைத்துள்ளதாகச் சந்தேகம் வெளியிடப் பட்டுள்ளது.

சட்டவிரோத புகலிடக் கோரிக்கையாளர்களிடம் இடண்டு இலட்சம் ரூபா முற்பணமாகவும், மொத்தக் கட்டணமாக பத்து இலட்சம் ரூபாவும் அறவீடு செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சந்தேக நபர்களின் வங்கிக் கணக்குகளைப் பரிசோதனை செய்ய அனுமதிக்குமாறு புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றிடம் கோரியுள்ளனர்.

# மழை பொழிவு எதிர்பார்க்கப்படுகிறது

(கொழும்பு)

நாடு முழுவதும் தொடர்ச்சியாக மழை பெய்வதுடன், அதிக காற்றும் வீசும் என்று காலநிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது. அத்துடன் இடி மின்னலின் தாக்கமும் அதிகமாகக் காணப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் பொது மக்கள் அவதானமாக செயற்படுமாறு கோரப்பட்டுள்ளது.

அதேநேரம் நாடு முழுவதிலும் உள்ள கடற் பகுதிகளிலும் பெரும்பாலும் மழை பெய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# யுத்த கால காணாமற் போனோர் உண்மை நிலை என்ன?

## மன்னார் ஆயர் கேள்வி

(மன்னார்)

போரின் இறுதி எட்டு மாதங்களில் காணாமற் போனதாகக் கூறப்படும் 146 ஆயிரத்து 679 பேர் தொடர்பில் உண்மை கண்டறியப்பட வேண்டும் என்று மன்னார் ஆயர் வணக்கத்துக்குரிய இராயப்பு ஜோசப் அண்டகை கோரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பின் ஊடகம் ஒன்று இந்தக் கோரிக்கை குறித்த செய்தியை பிரசுரித்துள்ளது. இலங்கை அரசாங்கம் தமிழர்களின் பிரச்சினைக்கு உரிய தீர்வுகளை முன்வைக்கவேண்டும். அத்துடன் தமிழர்கள் எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினைகளை மாற்றும் முயற்சியைக் கைவிடவேண்டும் என்றும் ஆயர் கேட்டுள்ளார்.

தாம் வன்முறைகளை எதிர்ப்பதாகக் குறிப்பிட்டுள்ள ஆயர், விடுதலைப் புலிகள் மேற்கொண்ட வன்முறைகளையும் தாம் கண்டித்தமையை சுட்டிக் காட்டியுள்ளார்.

விடுதலைப் புலிகள் பொதுமக்களைக் கொலை செய்தமையையும் தாம் ஏற்றுக்கொள்ளவில்லை என்றும் ஆயர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தநிலையில், இலங்கை அரசாங்கம், தமிழர்களைத் தண்டிக்கும் வகையில் அவர்களை தோல்வியடையச் செய்யும் வகையில், தமிழ்ப் பிரதேசங்களில் காணிகளை அபகரிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்கிறது.

அவர்களின் பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றங்களை மேற்கொள்கின்றது என்றும் ஆயர் குற்றம சுமத்தியுள்ளார். போரின்போது அரச பயங்கரவாதம் மற்றும் தமிழர்கள் கொலை செய்யப்படும் சம்பவங்களில் அரசாங்கம் ஈடுபட்டிருந்தது.

அரசாங்கத்தில் உள்ள சிலர் ஒரே மக்கள், ஒரே நாடு என்று கூறுகிறார்கள், இதில் ஒரே நாடு என்பதை ஏற்றுக்கொள்ள முடியும். ஆனால் தமிழர்கள் தனியான இனம், தனியான கலாசாரத்தைக் கொண்டவர்கள், அவர்களின் அரசியல் அபிலாஷைகள் வேறானவை என்று மன்னார் ஆயர் குறிப்பிட்டுள்ளார்.

# பொதுநலவாய தலைவர்களை ஐக்கிய தேசியக் கட்சி சந்திக்கும்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி, பொதுநலவாய நாடுகளின் தலைவர்களைச் சந்திக்கத் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையின் தற்போதைய நிலைமைகள் குறித்து தலைவர்களுக்கு கட்சி தெளிவுபடுத்தத் திட்டமிட்டுள்ளது.

இலங்கையில் இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் தெளிவுபடுத்தப்படும் என ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும், பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் அமர்வுகளில் தமது கட்சி பங்கேற்கப்போவதில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுபபினர் மங்கள சமரவீர கைது செய்யப்பட்டமைக்கு எதிர்ப்பை வெளியிடும் நோக்கில் இவ்வாறு அமர்வுகளை புறக்கணிக்கத் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க பணி நீக்கம் செய்யப்பட்டமை குறித்தும் தெளிவுபடுத்தத் திட்டமிட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.



**விடுதலைப்புலிகளின் கடற்படை இலங்கை அரசின் கடற்படையைவிட மிகவும் மாறுபட்டதாக காணப்பட்டது. அதாவது இலங்கை அரசின் கடற்படைக்கும் புலிகளின் கடற்படைக்கும் இடையேயான வித்தியாசங்களாக ஆரம்பத்திலேயே புலிகளின் கடற்படைப் பிரிவில் மகளிர் அணியினர் நேரடியாக களமுனையில் இறக்கப்பட்டதுடன் அவர்கள் கரும்புலிகளாகவும், பல சந்தர்ப்பங்களில் கடலில் வெடித்துச் சிதறியிருக்கிறார்கள். இதைவிட புலிகளால் மேற்கொள்ளப்பட்ட தரையிறக்க சமர்களில் கடற்புலிகள் அணியினரே பெரும் பங்கு வகித்திருந்தனர். அதுவும் குறிப்பாக மகளிர் அணியினரே முக்கிய போரின் கதாநாயகர்களாக பெருமளவில் தரையிறக்கத்தில் ஈடுபட்டனர்.**




# விடுதலைப் புலிகளை அழித்த ஊடகங்கள்

# 52

**வே.அர்ச்சுணன்**

விடுதலைப் புலிகளை அழிக்கும் நோக்கில் இலங்கைக் கடற்படை மேற்கொண்ட நடவடிக்கைகள் ஒவ்வொன்றும் தொடர்ச்சியாக தோல்விகளைச் சந்தித்துக்கொண்டிருந்த சூழ் நிலையில் இலங்கைக் கடற்படை பல நாடுகளின் உதவியுடன் வலுவான வளர்ச்சியை அடையத் தொடங்கியது. இவ்வாறு இலங்கைக் கடற்படை வலுவான வளர்ச்சிகளை எட்டிக்கொண்டிருந்த ஒவொரு கட்டத்திலும் கடற்புலிகளின் அணியினரும் மாற்றீடான போர் உத்திகளையும், இராணுவத் தளபாடக் கொள்வனவுகளையும் மேற்கொண்டு வந்தனர்.

ஆனால் இறுதி யுத்தத்தின் போது அமெரிக்கா போன்ற மேற்கத்தைய நாடுகள் வழங்கிய பேருதவிகளை அடுத்து இலங்கைக் கடற்படை புலிகளை கட்டுப்படுத்தும் வலுவான திறனை எட்டும் அளவுக்கு தன்னை வளர்த்துக்கொண்டது. அதாவது கடற்புலிகளின் விநியோகப் பாதைகளை துண்டாடியமை கடற்புலிகளின் ஆயுதக் கொள்வனவுகளை தடுத்து நிறுத்தும் வல்லமையை பெற்றமை இதில் முக்கியமான ஒரு விடயம். அதாவது புலிகள் தமக்கான ஆயுதக் கொள்வனவை மேற்கொண்டு அதனைக் கப்பல் மூலமாக எடுத்துவரும் ஒவொரு சந்தர்ப்பத்திலும் அந்தக் கப்பல்கள் தொடர்பான முழுமையான தகவல்களையும், கப்பலின் நகர்வுகளையும் சற்றலைற் ஊடாக கண்காணித்த அமெரிக்கா- அது தொடர்பிலான துல்லியமான தகவல்களை இலங்கைக் கடற்படைக்கு ஒவொரு கட்டத்திலும் வழங்கிக் கொண்டிருந்தமையாலேயே இலங்கைக் கடற்படையால் புலிகளின் கப்பல்களை சர்வதேசக் கடல் எல்லைக்குள் வைத்தே தகர்க்க முடிந்தது.

இது அமெரிக்க இலங்கை கூட்டு முயற்சி என்றே குறிப்பிடவேண்டும். அதாவது இலங்கைக் கடற்படை பரந்து விரிந்த கடற்பரப்பில் விடுதலைப் புலிகளின் கப்பல்களை துல்லியமான தகவல்கள் இன்றி உடனடியாகவே கண்டுபிடித்துவிடுவது இலேசான காரியமல்ல அதுவும் புலிகள் எத்தனையோ தந்திரோபாயங்களை கையாண்டவாறே தங்களது கப்பல்களை இலங்கைக் கடல் எல்லைக்குள் நகர்த்த முற்படுவார்கள் இந்த நிலையில் இவற்றை உடனடியாகவே நேரடியாகவே சென்று தாக்கும் அளவிற்கு துல்லியமான தகவல்களை இலங்கைக் கடற்படைக்கு அமெரிக்கா வழங்கியமையாலேயே தங்களால் போரில் விரைவாக வெல்லமுடிந்ததென இலங்கைப் பாதுகாப்பு தொர்டர்பான அமைச்சின் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஸவே ஒரு கட்டத்தில் வெளிப்படையாக ஒப்புக்கொண்டார். இந்த அளவிற்கு இறுதிப்போரில் அமெரிக்காவின் செல்வாக்கு புலிகளை அழிப்பதில் பெருமளவில் மேலோங்கி இருந்ததை எவருமே மறுத்துவிட முடியாது.

இலங்கைக் கடற்படையைப் பொறுத்த வரையில் அதனுடைய நிர்வாகத் திறன் ஆரம்பத்தில் இசகு பிசகானதாக இருந்தபோதிலும் போர் உச்சம்பெறத் தொடங்கியதை அடுத்து அதன் நிர்வாகத்திறனும் நிர்வாக எல்லைகளும் வலுவடையத் தொடங்கியது. அதாவது ஆரம்பத்தில் இலங்கைக் கடற்படையின் நிர்வாகம் பற்றிப் பார்த்தால் குற்றங்களைக் கண்டறிதல் அவற்றைத் தடுத்தலுக்கான வழிகளைக் கண்டறிதல், குற்றங்களுக்கான தண்டனைகளை வழங்குதல், கடற்படை வீரர்கள் மத்தியில் சட்டம் ஒழுங்கு ஒழுக்கம் என்பவற்றை அமுலாக்குவது என்பன முக்கியமாகக் கடைப்பிடிக்கப்பட்டது.

இலங்கைக் கடற்படை வரலாற்றில் இதுவரை 23790இற்கு மேற்பட்ட கடற்படையினர் 2009ஆம் ஆண்டிலும் அதற்கு முன்னருமான காலப்பகுதியில் போரில் கொல்லப்பட்டனர். இலங்கைக் கடற்படையில் தற்போது பெண்களும் இணைந்து கொண்டுள்ளனர். ஆரம்பத்தில் தன்னார்வப் படைகளாக உள்வாங்கப்பட்டவர்களில் மருத்துவக் கிளையே உருவாகியது பின்பு படைத்துறையிலும் பெண்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். தற்போது பல பெண் அதிகாரிகளும் உள்ளனர்.

ஆனால் விடுதலைப்புலிகளின் கடற்படை இலங்கை அரசின் கடற்படையைவிட மிகவும் மாறுபட்டதாக காணப்பட்டது. அதாவது இலங்கை அரசின் கடற்படைக்கும் புலிகளின் கடற்படைக்கும் இடையேயான வித்தியாசங்களாக ஆரம்பத்திலேயே புலிகளின் கடற்படைப் பிரிவில் மகளிர் அணியினர் நேரடியாக களமுனையில் இறக்கப்பட்டதுடன் அவர்கள் கரும்புலிகளாகவும், பல சந்தர்ப்பங்களில் கடலில் வெடித்துச் சிதறியிருக்கிறார்கள். இதைவிட புலிகளால் மேற்கொள்ளப்பட்ட தரையிறக்க சமர்களில் கடற்புலிகள் அணியினரே பெரும் பங்கு வகித்திருந்தனர். அதுவும் குறிப்பாக மகளிர் அணியினரே முக்கிய போரின் கதாநாயகர்களாக பெருமளவில் தரையிறக்கத்தில் ஈடுபட்டனர்.

ஆனால் அரசாங்கத்திற்கும் புலிகளிற்கும் இடையில் போர் இடம்பெற்ற காலப்பகுதியில் அரச- படைகள் எதிர்பார்த்த அளவிற்கு தரையிறக்க செயற்பாடுகளுக்கு கடற்படையினர் பெரியளவில் பங்காற்றவில்லை என்ற ஒரு குறைபாடு இலங்கைப் பாதுகாப்பு ஆய்வாளர்களிடமும் இராணுவ வல்லுனர்களிடமும் ஒரு பெரிய விமர்சனமாக தொடர்ச்சியாக நீடித்து வந்தது. ஆனால் இறுதிக் கட்டப் போரில் புலிகளின் கப்பல்களை ஒவ்வொன்றாக இலங்கைக் கடற்படை அழிக்கத் தொடங்கியபோது இந்த இராணுவ வல்லுனர்களும் ஆய்வாளர்களும் வாயடைத்து நின்றார்கள்.

இலங்கைக் கடற்படை தனது போரியல் வரலாற்றில் 1990ஆம் ஆண்டு புலிகள் ஆனையிறவைக் கைப்பற்றுவதற்காக போரை பல முனைகளில் ஆரம்பித்தபோது அந்த முகாமை காப்பாற்றுவதற்கான பெரியளவிலான தரையிறக்கம் ஒன்றை இலங்கைக் கடற்படை மேற்கொள்ளவேண்டிய தேவை ஒன்று உருவாகியிருந்தது. ஆனால் தரையிறக்கத்தை எங்கே மேற்கொள்வது எப்படி மேற்கொள்வது என்ற குழப்பத்தில் படை உயர் அதிகாரிகள் ஈடுபட்டிருந்த போது உடனடியாகவே பாதுகாப்பு மாநாடு கூட்டப்பட்டு அப்போதைய பாதுகாப்பு அமைச்சராக இருந்த அமைச்சர் அந்த தரையிறக்கத்திற்கான முழுப்பொறுப்பையும் இலங்கைக் கடற்படை பொறுப்பேற்க வேண்டுமெனவும் அவர்களுக்கு உதவியாக விமானப் படையினர் தொடர்ச்சியான வான் தாக்குதல்களை மேற்கொண்டு புலிகளின் நிலையை அழித்து புலிகளை பின்வாங்கச் செய்வார்கள் இதன்மூலம் இலகுவாகவே தரையிறக்கத்தை மேற்கொண்டு விடலாம் என முடிவெடுக்கப்பட்டது. இதன்படி தரையிறக்கத்திற்குரிய இடமாக முதலில் சுண்டிக்குளம் கடற்கரை தேர்வு செய்யப்பட்டு அதற்கான உடனடி நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டன. ஆனால் பின்னர் உடனடியாகவே அந்தத் திட்டம் மாற்றப்பட்டு கட்டைக்காடு வெற்றிலைக்கேணி கடற்பரப்பில் கடற்படையினரை நகர்த்தி அந்தக் கரையில் தரையிறக்கத்தை மேற்கொண்டு அங்கிருந்து படையினரை புல்லாவழி ஊடாக ஆனையிறவிற்கு நகர்த்துவதே பொருத்தமானது என முடிவெடுக்கப்பட்டு அந்த முடிவு அமுல்படுத்தப்பட்டது.

உண்மையில் இந்த தரையிறக்க சண்டையில் கடற்படையை விட விமானப் படையினரின் திறன்களும் அவர்களின் போர் உத்திகளுமே பெருமளவில் அந்த தரையிறக்கத்திற்கு கைகொடுத்ததாக இராணுவ உயர்அதிகாரிகள் கருத்துத் தெரிவித்த போதிலும் இலங்கைக் கடற்படையின் போர்க் கப்பல்களும் இந்தச் சண்டையில் கணிசமான பங்களிப்பினை மேற்கொண்டதை எவருமே மறுத்துவிட முடியாது.

இலங்கை கடற்படையின் போரியல் வரலாற்றில் இந்தச் சண்டை ஒரு மாபெரும் வெற்றிச்சண்டை என்பது மட்டுமல்ல இந்த தரையிறக்கத்தின் ஊடாகவே ஆனையிறவை புலிகளிடமிருந்து அந்தக் காலப்பகுதியல் இலங்கை அரசால் மீட்கமுடிந்தது. அந்தக் காலத்தில் ஆனையிறவு புலிகளிடம் வீழ்ந்திருக்குமானால் இலங்கை அரசியல் வரலாற்றில் வேறுவிதமான நிகழ்ச்சி நிரல்கள் அப்போது உருவாகியிருக்கும்.

அரசாங்கத்தை அந்தக் காலகட்டத்தில் பெரும் நெருக்கடியில் இருந்து காப்பாற்றியது இலங்கைக் கடற்படையின் தரையிறக்கப் போரே ஆகும். இவ்வாறு பல குறைபாடுகள் பல நிறைவான செயற்பாடுகள் என இலங்கைக் கடற்படை பல வடிவங்களில் தனது வளர்ச்சியை எட்டியவாறு இறுதியில் முள்ளிவாய்க்கால் யுத்தத்துடன் தனது இலக்கை அடைந்து கொண்டது. ஆனால் முள்ளிவாய்க்கால் யுத்த முடிவை அடைவதற்கு முன்னர் இலங்கைக் கடற்படை சந்தித்த சவால்கள் அதன் வளர்ச்சிப் பாதைகள் என்பனவற்றை மேலோட்டமாக மேலும் பார்த்தவாறு இவற்றை தமிழ் ஊடகங்கள் அறிந்து கொண்டனவா? அல்லது அறிந்தும் அறியாதது போன்று மக்களை ஏமாற்றிக் கொண்டனவா என்பதை தொடர்ந்து பார்ப்போம்.

(தொடரும்)

# பொதுநலவாய மாநாட்டில் விக்கினேஸ்வரன் முக்கிய உரை

## இது நல்லிணக்கத்தின் அடையாளம்



(கொழும்பு)

பொதுநலவாய மாநாட்டில் வடக்கில் முதலமைச்சர் சி.வி.விக்கினேஸ்வரன் முக்கிய உரையொன்றை நிகழ்த்தவுள்ளதாக கொழும்பு அரச உயர்மட்டத் தலைவர்களை ஆதாரம் காட்டி கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

மேற்படி மாநாட்டில், வடக்கு மாகாண முதல்வர் சி.வி.விக்கினேஸ்வரன் உரையாற்றுவதற்கு சந்தர்ப்பம் அளிப்பது குறித்து, இப்போது அரசாங்கம் உள்ளக கலந்துரையாடல் ஒன்றை நடத்தியுள்ளதாக கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் உயர்மட்டத் தலைவர்களின் கூட்டத்திலே, வடக்கு மாகாண முதல்வரை கொமன்வெல்த் மாநாட்டில் பொருத்தமான நிகழ்வு ஒன்றில் உரையாற்ற அல்லது ஒரு உரையை சமர்ப்பிக்க அழைப்பதற்கான சாத்தியம் குறித்துக் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இதன் மூலம், அரசாங்கத்தின் நல்லிணக்கத்துக்கான முயற்சிகளையும் வடக்கில் தேர்தலை வெற்றிகரமாக நடத்தியுள்ளதையும் வெளிப்படுத்த முடியும் என்றும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைவர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

எனினும், இதுதொடர்பான இறுதி முடிவுகள் ஏதும் எடுக்கப்பட்டதா என்பது குறித்து தகவல் வெளியிடப்படவில்லை.

# அதிவேக தபால் சேவை விரைவில் ஆரம்பம்

(கொழும்பு)

புதிதாக அதிவேக தபால் சேவையொன்று ஆரம்பிக்கப்படவுள்ளது. இந்த சேவையை பயன்படுத்தி நாட்டின் எந்தவொரு பகுதிக்கும் 24 மணித்தியாலங்களுக்குள் பொருட்கள் மற்றும் கடிதங்களை அனுப்பிவைக்க முடியும் என தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்காக புதிய தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய வேன்களை பயன்படுத்தவுள்ளதாக பிரதி தபால் மாஅதிபர் டபிள்யூ.ஏ.ஜி.விக்ரமசிங்க கூறியுள்ளார். புதிய அதிவேக தபால் சேவை நவம்பர் மாதம் முதலாம் திகதி அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

அதிவேக தபாலுக்காக ஏற்றுக்கொள்ளப்படும் பொருட்களின் எடை அதிகரிக்கப்பட்டுள்ளதாக பிரதி தபால் மாஅதிபர் மேலும் தெரிவித்துள்ளார்.

# வாகன விபத்து வழக்குகளை துரிதப்படுத்த ஏற்பாடு




(கொழும்பு)

உயிரிழப்புக்கள் இடம்பெற்ற வாகன விபத்துக்களுடன் தொடர்புடைய வழக்குகளை துரிதமாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக சட்டமாஅதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய சட்ட மாஅதிபர் ஆலோசனைகள் கோரப்பட்டுள்ள வாகன விபத்துக்கள் தொடர்பான வழக்குகளில் குற்றப் பத்திரிகைகளை தாக்கல் செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாக சட்டமா அதிபர் பாலித்த பெர்னாண்டோ கூறியுள்ளார்.

இத்தகைய மூவாயிரத்திற்கும் மேற்பட்ட வழக்குகளுக்கான குற்றப் பத்திரிகைகளை கடந்த சில வாரங்களுக்குள் தாக்கல் செய்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய சுமார் 500 வழக்குகளுக்கான குற்றப் பத்திரிகைகளை மாத்திரமே இன்னமும் தாக்கல் செய்ய வேண்டியுள்ளதென சட்டமாஅதிபர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நிலையில் உயிரிழப்புக்கள் இடம்பெற்ற விபத்துக்கள் தொடர்பான வழக்கு விசாரணைகள் இனிவரும் காலத்தில் சட்டமாஅதிபரின் ஆலோசனை கிடைக்காததால் தாமதமடைய வாய்ப்பில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது

வழக்குகளில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்வதில் தாமதம் நிலவினால் அது குறித்து எழுத்துமூலம் வினவ முடியும் என சட்டமாஅதிபர் பாலித்த பெர்னாண்டோ மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# மாகாணங்களுக்கு அதிகார பகிர்வு புதிய பொறிமுறை விரைவில்

(கொழும்பு)

மாகாணங்களுக்கு அதிகார பரவலாக்கத்தை மேற்கொள்வது எப்படி என்பது தொடர்பான புதிய பொறிமுறை தொடர்பாக ஆராயப்படவுள்ளது.

இவ்விடயம் குறித்து முதலமைச்சர்கள் மாநாட்டில் திட்டவட்டமான தீர்மானம் மேற்கொள்ளப்பட இருக்கிறது.

முதலமைச்சர்கள் • மாநாட்டுக்கு இம்முறை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமை தாங்கவிருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

வடமாகாண சபை நிறுவப்பட்டதன் பின்னர் முதன்முறையாக இந்த மாநாடு நடத்தப்படவிருக்கின்றது. மாகாண சபை நிர்வாகம் தொடர்பான தீர்மானங்களே முதலமைச்சர்கள் மாநாட்டில் எட்டப்படும்.

பிரதேச அபிவிருத்தி மற்றும் அதிகாரத்தை செயற்படுத்தல் உள்ளிட்ட விவகாரங்கள் தொடர்பில் ஆராயப்படும்.

இந்த மாநாட்டில் புதிதாக தெரிவு செய்யப்பட்ட வட மாகாண சபை முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மற்றும் வடமேல் மாகாண முதலமைச்சர் தயாசிறி ஜயசேகர ஆகியோரும் பங்கேற்கவிருக்கின்றனர்.

# வெளிநாட்டு புலனாய்வாளர் கொழும்பிற்கு படையெடுப்பு

நூற்றுக்கும் மேற்பட்ட வெளிநாட்டு புலனாய்வுப் பிரிவு உத்தியோகத்தர்கள் இலங்கை நிலைமைகள் குறித்து கண்காணிப்பு நடாத்தியுள்ளனர். எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள பொதுநல வாய நாடுகள் தலைவர்கள் அமர்வுகளை முன்னிட்டு, வெளிநாட்டுப் புலனாய்வுப் பிரிவினர் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளனர்.

அந்தந்த நாடுகளின் தலைவர்கள் அமர்வுகளில் பங்கேற்பதில் சிக்கல் கிடையாது என குறித்த புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் குறித்த நாடுகளுக்க அறிவித்துள்ளனர். மற்றுமொரு தொகுதி வெளிநாட்டுப் புலனாய்வு அதிகாரிகள் விரைவில் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு கட்டுநாயக்க பிரதான வீதி, வெளிநாட்டுத் தலைவர்கள் தங்கும் ஹோட்டல்கள், முக்கிய நிகழ்வுகள் நடைபெறும் இடங்கள் உள்ளிட்டவை சோதனையிடப்படவுள்ளன.

# வீதி விபத்துக்களால் விபரீதம் தினசரி ஆறு பேர் மரணம்

(கொழும்பு)

இவ்வருடம் ஜனவரி மாதம் முதல் செப்ரெம்பர் இறுதிவரையிலான ஒன்பது மாத காலப்பகுதில் 25 ஆயிரத்து 200 வாகன விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன.

இவ்விபத்துக்களால் ஆயிரத்து 714 போர் உயிரிழந்துள்ளதுடன் 13 ஆயிரத்து 478 பேர் காயமடைந்துள்ளனர்.

குறித்த காலப்பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்துக்களால் 4 ஆயிரத்து 349 பேர் படுகாயமடைந்துள்ளதுடன் ஒன்பதாயிரத்து 129 பேர் சிறுசிறு காயங்களுக்கும் உள்ளாகியுள்ளனர்.

2005 ஆம் ஆண்டு தொடக்கம் 2013 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் இறுதி வரையிலான ஒன்பது வருட காலப்பகுதியில் 21 ஆயிரத்து 113 பேர் உயிரிழந்துள்ளனர்.

அதேவேளையில் 2005-2293, 2006-2161, 2007-2362, 2008-2328, 2009-2413, 2010-2721, 2011-2677, 2012-2444, 2013 ஆம் ஆண்டு செப்ரெம்பர் வரையிலான காலப்பகுதியில் 1714 என்ற அடிப்படையில் வாகன விபத்துக்களால் மரணங்கள் சம்பவித்துள்ளன.

வாகன விபத்துக்களால் நாளொன்றிற்கு 6 தொடக்கம் 10 வரையிலானோர் உயிரிழக்கின்றனர். மதுபோதையில் வாகனம் செலுத்தல், போட்டித் தன்மை.

நித்திரைக்கலக்கத்தில் வாகனம் செலுத்தல் மற்றும் பாதசாரிகளின் கவனையீனம் போன்ற காரணங்களாலும் இவ்வாறான வாகன விபத்துக்கள் அதிகரிப்பதாகவும் இவ்விதம் அதிகரிக்கும் வாகன விபத்துக்களை கட்டுப்படுத்துவதற்கு சாரதிகளும் குறிப்பாக பாதசாரிகளும் அவதானமாக செயற்படவேண்டுமெனவும் பொலிஸார் கேட்டுக்கொள்கின்றனர்.

# முளைவிடும் மோசடிக் குழுக்கள் கிள்ளி எறிய நடவடிக்கை

(கொழும்பு)

தொலைபேசி, குறுந்தகவல் மற்றும் மின்னஞ்சல் மூலம் நிதி மோசடிகளில் ஈடுபடுகின்றவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன இத்னைத் தெரிவித்துள்ளார்.

சீட்டிலுப்பில் வெற்றி கிடைத்துள்ளதாகவும் அல்லது வேறு போட்டிகளில் வெற்றி கிடைத்திருப்பதாக தெரிவித்து, தொலைபேசி வாயிலாகவோ, அல்லது குறுந்தகவல் மற்றும் மின்னஞ்சல் வாயிலாக பண மோசடியில் ஈடுபடும் குழுக்கள் குறித்த விபரங்கள் கிடைத்துள்ளன.

கடந்த சில வாரங்களுக்குள் இவ்வாறான சம்பவங்கள் பல பதிவாகி இருப்பதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

# அனைத்து வீடுகளுக்கும் அடுத்த வருடம் மின்சாரம்

(கொழும்பு)

அடுத்த வருடத்திற்குள் நாட்டிலுள்ள அனைத்து வீடுகளுக்கும் மின்சாரம் பெற்றுத்தர தீர்மானிக்கப்பட்டுள்ளதாக மின் சக்தி மற்றும் மின்வலு அமைச்சு தெரிவித்துள்ளது.

குறைந்த கட்டணத்தில் மக்களுக்கு மின்சாரத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கு புதிய மின் உற்பத்தி நிலையத்தை ஆரம்பிப்பதற்கு எதிர்பார்த்துள்ளதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

நுரைச்சோலை மின் உற்பத்தி இரண்டாம் மற்றும் மூன்றாம் கட்டம் மற்றும் சம்பூர் மின் உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் குறைந்த கட்டணத்தில் மின்சாரத்தைப் பெற்றுக் கொள்ள முடியும் என அமைச்சு தெரிவித்துள்ளது.

# ஜனாதிபதித் தேர்தல் 2015 ஆம் ஆண்டில்

(கொழும்பு)

2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் பல தேர்தல்களை நடத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக நம்பகரமான வட்டாரங்களிலிருந்து தெரிய வருகின்றது.

2014 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் நவம்பர் மாதம் வரையிலும் மூன்று தேர்தல்களை நடத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தேர்தல்களை எந்தெந்த காலங்களில் நடத்துவதென்பது தொடர்பில் அரசாங்கத்தின் அரசியல் ஆலோசகர்கள் தயாரித்த அட்டவணைக்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முக்கியஸ்தர்கள் அங்கீகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்பிரகாரம் 2014 ஆம் ஆண்டு மார்ச் மாதம் மேல் மற்றும் தென் மாகாணங்களில் தேர்தல்கள் நடத்தப்படவிருக்கின்றன.

இந்த தேர்தல்களுக்காக அவ்விரு மாகாணங்களும் 2014 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் கலைக்கப்படவிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஊவா மாகாண சபை 2014 ஆம் ஆண்டு யூலை மாத இறுதியில் கலைக்கப்பட்டு ஒக்ரோபர் மாதத்தில் அந்த மாகாண சபைக்கான தேர்தல் நடத்தப்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறான நிலையிலே 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதமளவில் ஜனாதிபதி தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# சித்தாந்த சாஸ்திர நூல்களை இந்துக்கள் கற்க வேண்டும்

## –நல்லை ஆதீன முதல்வர்–



(யாழ்.நிருபர்)

சைவசமயத்திற்கு இன்றியமையாத நூல்களான பன்னிரு திருமுறைகளையும், பதினான்கு சித்தாந்த சாத்திர நூல்களையும் சைவ சமயத்தவர் அனைவரும் கற்றுத் தெளிதல் வேண்டும். அப்போது தான் சைவ வாழ்வு வாழமுடியும் என நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமச்சாரிய சுவாமிகள் தெரிவித்தார்.

அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கத்தின் பட்டமளிப்பு விழாவிலும் சைவ மாநாட்டிலும் கலந்து கொண்டு அருளுரை வழங்கியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இவ்விழாவில் அவர் மேலும் உரையாற்றுகையில், சைவசமயம் அநாதியானது அநேக மனித விழுமியங்களைச் சொல்வது மனிதன் மனிதனாக மண்ணில் நல்ல வண்ணம் வாழ வழி சொல்கிறது. இவ்வுலக வாழ்வை அறநெறி வாழ்வாக சிவபக்தி நெறி நிற்கும் வாழ்வாக வாழா விட்டால் ஒருவர் முத்தி பெற முடியாது.

நாம் தினமும் சிவாலய வழிபாடு செய்தல் வேண்டும். இயலாதவர்கள் வெள்ளி. செவ்வாய், விரத பண்டிகை காலங்களிலும் நைமித்திய உற்சவ காலங்களிலும் வழிபாடு செய்தல் வேண்டும். ஆலயங்களில் நைமித்திய காலங்களில் புராணபடனம், திருமுறைப் பஜனை மற்றும் சைவச் சொற்பொழிவுகள் நடைபெறவேண்டும்.

அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கம் ஆண்டு தோறும் தேர்வு நடத்தி புலமையாளர்களுக்கு சைவப் புலவர் பட்டம் வழங்கி வருகிறது . சைவப் புலவர்கள் ஊர்கள் தோறும் உள்ள ஆலயங்களில் சைவ சமயச் சொற்பொழிவுகளை நிகழ்த்தி வருகிறார்கள்.இப்பணி இன்னமும் வளர வேண்டும். ஊருக்கொரு சைவப்புலவராவது உருவாக வேண்டும். சைவநெறி தழைத்தோங்க சைவப்புலவர்கள் தன்னலங்கருதாது கடுமையாக உழைக்கவேண்டும். என்றார். (10)

## கைநூல் வெளியீடு

(யாழ்.நிருபர்)

அட்டாளைச்சேனை தேசிய கல்வியியற் கல்லூரி பயிலுநர் ஆசிரியர்களால் பாடசாலையும் சமூகமும் என்னும் கைந்நூல் அண்மையில் வெளியிடப்பட்டுள்ளது.

தேசிய கல்வியியற்கல்லூரி கேட்போர் கூடத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் கல்வித்துறை இணைப்பாளர் எம்.பீ.ஏ .அஸீஸ் பீடாதிபதி எம்.ஐ. எம் நவாஸிடம் முதற்பிரதியைக் கையளித்து வெளியிட்டு வைத்தார். இந்நிகழ்வில் உப பீடாதிபதிகள் ஏ.எல்.எஸ் ஏ.சத்தர் எம்.எச் எம் மன்சூர் எம்.ஐ.கலீல் விரிவுரையாளர்கள் பயிலுநர், ஆசிரியர்கள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (10)



ஜனாதிபதி செயலகத்தின் மதர் ஸ்ரீலங்கா பணிப்பாளர் ஞானகி குறூப் மற்றும் அவருடனான குழுவினர் வட மாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறியை ஆளுநரின் யாழ்.அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடிய போது..... (படம்.கே.நந்தகுமார்)

## அறிவகத் திறப்பு விழா

(கரணவாய்)

கரணவாய் விபுலானந்த சனசமூக நிலைய அறிவகத் திறப்பு விழா இன்று திங்கட்கிழமை மு.ப 10 மணிமுதல் 11 மணி வரை விபுலானந்த சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது.

விபுலானந்த சனசமூக நிலையத் தலைவர் கே.லோகேஸ்வரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கரவெட்டி பிரதேச செயலர் எஸ்.சிவஸ்ரீ, வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை தவிசாளர் பி.வியாகேசு, கௌரவ விருந்தினர்களாக வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை செயலாளர் திருமதி ரி.அன்னலிங்கம், கரணவாய் தெற்கு கிராம அலுவலர் ரி.புவனேந்திரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

## உடுவில் பிரதேச செயலகத்தில் முதியோர் தினவிழா

(யாழ்.நிருபர்)

சர்வதேச சிறுவர், முதியோர் மற்றும் மாற்றுவலுவுடையோர் தினவிழா நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு வலிகாமம் தெற்கு உடுவில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரதேச செயலர் மு.நந்தகோபாலன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் பிரதம விருந்தினராகவும். வடமாகாணசமூக சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் திருமதி.நளாயினி இன்பராஜ், வலிகாமம் கல்வி வலயக் கல்விப்பணிப்பாளர் செ.சந்திரராஜா த.கிருபாகரன் ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்கின்றனர்.

தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவர் ஆறு திருமுருகன் ஆசியுரை வழங்கவுள்ளார். (10)

## மக்களை அதிக நேரம் காக்க வைக்கும் வங்கிகள்

(யாழ்ப்பாணம்)

வங்கிகளுக்கு செல்லும் வாடிக்கையாளர்கள் நீண்ட நேரம் காத்திருக்கும் அவல நிலை சுன்னாகத்தில் தொடர்கின்றது. சுன்னாகம் நகரப்பகுதிகளில் அரச ,தனியார் வங்கிகளில் வாடிக்கையாளர்கள் நகைகளை அடைவு வைக்கச் செல்லும் போது அடைவுகளை முன்னறிவிப்பு செய்து மீட்கச் செல்லும் போதும் நீண்ட நேரம் வங்கிகளில் காத்து நிற்கும் அவலநிலை காணப்படுகின்றது.

இதனால் வாடிக்கையாளர்கள் பெரும் சிரமப்படுவதுடன் தமது ஏனைய அன்றாட நடவடிக்கைகளையும் தொழில் நடவடிக்கைகளையும் இழக்க வேண்டிய நிலை காணப்படுகின்றது.

தற்போதைய சூழலில் மக்களை மிகவிரைவாக சேவைகளை முடித்து அனுப்புவதற்கு உரிய நடவடிக்கைகளை வங்கிகள் மேற்கொள்ளவேண்டும் என பொது மக்கள் தெரிவிக்கின்றனர். (66)

## முரசின் இன்றைய பலன்



(21.10.2013 திங்கட்கிழமை)

விஜய வருஷம் ஐப்பசி மாதம் 04 ஆம் திகதி. துதியைத்திதி
மரணயோகம் நட்சத்திரம்-கார்த்திகை முழுநாளும்
இராகுகாலம 07.32- 09.02 வரை. சுபநேரம 12.02- 01.32 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | வளர்ப்பு மாடுகளால் நெற்பயிர் சேதமாவதால் கவலை, நீண்ட நாட்களாக இழுபட்ட நிலுவை வந்து சேரல். |
| ரிஷபம் | உளநலச்சீர்கேட்டால் தொழில் பாதிக்கப்படல், நண்பனைப் பாராட்டி உற்சாகப்படுத்தியதனால் வேலை சுலபமாகமுடிதல். |
| மிதுனம் | தன்னடக்கத்தைப் பேணியதால் முரண்பாடு அற்றுப் போனது, வீட்டு வேலைகளில் பங்கேறறதால் நேசிப்பைப்பெறல். |
| கடகம் | சோகபாவத்தைக் கைவிட்டு புன்னகை ததும்பும் முகமலர்ச்சியினால் பிறரைக் கவர்தல், குழப்பத்தை ஏற்படுத்தி இலாபம் பெற முயற்சித்ததால் உள்ளதையும் இழந்த தவித்தல். |
| சிம்மம் | வெளியூர் செய்தி காதினைக் குளிர வைக்கும், ஏற்கனவே எடுத்த ஒப்பந்தம் நட்டத்தை ஏற்படுத்தியதால் புதிதாக எடுப்பதற்கு மனம் வராமை. |
| கன்னி | விவாகம் பற்றி குடும்பத்தவருடன் கலந்துரையாடி முடிவெடுத்தல், எதிர்பார்ப்பு நிறைவேறியதால் ஆனந்தம். |
| துலாம் | எயிட்ஸ் நோய் தொற்று பற்றிய அச்சநிலை ஏற்படாமை, பிரச்சினை கொடுத்துக் கொண்டிருந்த வேலையாளை அதிரடியாக மாற்றுதல். |
| விருச்சிகம் | எதிர்பார்த்த உதவிப் பேறு கிட்டியதால் மகிழ்ச்சி. சகோதரர்கள் பெருந்தன்மையைப் புரிந்து கொண்டதால் பிரச்சினை விலகிவிடல். |
| தனுசு | சொத்துப்பிரச்சினைக்கு சுமுகமான தீர்வு கிடைத்தல், வியாபாரத்தில் புதிதாக முதலீடு செய்ய ஆலோசித்தல். |
| மகரம் | வியாபாரம் களைகட்டுவதால் மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதப்பீர்கள், தன்னிச்சையாக முடிவுகளை எடுத்ததில் மனநிம்மதி பிறத்தல். |
| கும்பம் | வாடிக்கையாளர்களுடன் பொறுமையைப் பேணுவதால் இலாபம் அதிகரிப்பு, வழக்கின் முடிவில் திருப்பம் உங்கள் பக்கமே வருதல். |
| மீனம் | வீண் விவாதங்களைத் தவிர்ப்பதால் பகைமை பறந்தோடிவிடும், நடக்காது என்பது நடந்துவிட்டதால் மகிழ்ச்சி நிலை தக்கவைப்பு. |

## விவசாயிகளின் நலன்கருதி வவுனியாவில் பயிர்ச்சிகிச்சை முகாம்



வவுனியா, கோவில்குளம் கமநல கேந்திர நிலையத்தில் கடந்த வியாழக்கிழமை பயிர்ச் சிகிச்சை முகாம் நடைபெற்றது.

வவுனியா மாவட்ட விவசாயிகளின் பயிர்ச்செய்கை தொடர்பான பிரச்சினைகளை தீர்த்து அவர்களது உற்பத்தியை ஊக்குவிக்கும் நோக்கில் இந்தப் பயிர்ச் சிகிச்சை முகாம் நடத்தப்பட்டது. இந்தப் பயிர்ச் சிகிச்சை முகாம் தொடர்பாக விவசாயத் திணைக்களத்தின் வவுனியா மாவட்ட பிரதிப் பணிப்பாளர் ஏ.சகிலாபானு தெரிவிக்கையில்,

விவசாயிகள் பயிர்ச் செய்கை நடவடிக்கைகளில் தற்போது நோய்த்தாக்கம் மற்றும் நவீன தொழில்நுட்ப முறைகள் தொடர்பில் பல பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

இதன் காரணமாக அவர்களது விளைச்சலின் அளவும் குறை வடைந்து அதை நம்பி வாழும குடும்பங்களின் பொருளாதாரமும் பாதிப்படைந்துள்ளது. எனவே, இப்பிரச்சினைகளை இலகுவாக தீர்க்கும் வகையில் மாதத்தின் முதலாவது வியாழக்கிழமை தொடக்கம் எமது பகுதியில் உள்ள 10 விவசாயப் போதனாசிரியர் பிரிவுகளிலும் தொடர்ச்சியாக இந்தப் பயிர்ச் சிகிச்சை முகாமினை நடத்தி வருகின்றோம்.

இதனடிப்படையில், வவுனியா கோவில்குளம் கமநலகேந்திர நிலையத்தில் பயிர்ச் சிகிச்சை முகாம் நடத்தப்படுகிறது. இதில் பல விவசாயிகள் கலந்து கொண்டுள்ளனர். இதனால் அவர்களது பிரச்சினைகளை தீர்ப்பதற்குரிய வாய்ப்புக்கள் கிடைத்துள்ளன எனக் கூறினார்.



# இலங்கை அணியின் புதிய பயிற்றுநர்?

(கொழும்பு)

இலங்கை அணியின் புதிய பயிற்றுநராக அவுஸ்ரேலிய அணியின் முன்னாள் வீரர் சப்பலை நியமிக்க அதிய வாய்ப்பிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை கிரிக்கெட் அணியின் தற்போதைய பயிற்சியாளர் தென்னாபிரிக்காவின் கிரஹாம் போர்ட் தனது ஒப்பந்தத்தை புதுப்பித்துக் கொள்ள விரும்பவில்லை என்று கூறிவிட்டார். இதையடுத்து புதிய பயிற்சியாளர் தேடுதல் வேட்டையை இலங்கை தீவிரமாக தொடங்கியுள்ளது. பயிற்சியாளரை நியமிப்பதற்கான காலக்கெடு இந்த மாத இறுதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. இலங்கை அணியின் தலைமை பயிற்சியாளர் பதவிக்கு பலர் விருப்பம் தெரிவித்து விண்ணப்பித்து இருந்தாலும், அதில் அவுஸ்ரேலிய முன்னாள் துடுப்பாட்ட வீரர் கிரேக் சப்பல் புதிய பயிற்சியாளராக நியமிக்கப்பட பிரகாசமான வாய்ப்பு உள்ளதாக இலங்கை கிரிக்கெட் சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

65 வயதான சப்பல் 2005 முதல் 2007ஆம் ஆண்டு வரை இந்திய அணியின் பயிற்சியாளராக இருந்தவர். அப்போது கங்குலி உள்ளிட்ட சிரேஷ்ட வீரர்களுடன் கருத்து வேறுபாடு, 2007ஆம் ஆண்டு உலக கோப்பையில் இந்தியா படுதோல்வி உள்ளிட்ட பிரச்சினைகளால் தனது பதவியை இராஜினாமா செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

சப்பலை தவிர இந்தியாவைச் சேர்ந்த பிரசாத், லால்சந்த் ராஜ்புத், மொகித் சோனி, அவுஸ்ரேலியாவின் ஷேன் டப், மைக்கல் ஓ சுலிவான், இங்கிலாந்தின் போல் பார்பிரேஸ், இயன் போன்ட், நியூசிலாந்தின் கிராண்ட் பிராட்பர்ன், உள்ளூர் முன்னாள் வீரர்கள் மார்வன் அத்தபத்து, கலுவிதரனா ஆகியோரும் பயிற்சியாளருக்கான போட்டியில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.



# மீள் பரிசீலனை

சூதாட்டத்தில் ஈடுபட்டதற்காக பாகிஸ்தான் அணியின் இளம் வேகப்பந்து வீரர் மொகமட் அமீருக்கு 5 ஆண்டு விளையாட தடை விதிக்கப்பட்டது. 2011ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் இந்த தடையை ஐ.சி.சி. (சர்வதேச கிரிக்கெட் சபை) விதித்தது. அமீருக்கு விதிக்கப்பட்ட தடையை மறுபரிசீலனை செய்யுமாறு பாகிஸ்தான் கிரிக்கெட் சபை நேற்று முன்தினம் ஐ.சி.சி.யிடம் வேண்டுகோள் விடுத்தது. ஐ.சி.சி.யின் ஊழல் தடுப்பு குழு சில திருத்தங்களைச் செய்துள்ளதை ஐ.சி.சி. ஏற்றுக் கொண்டுள்ளது. இதன்படி அமீரின் தடை குறித்து ஐ.சி.சி. மறு-பரிசீலனை செய்யும். ஜனவரி மாதம் நடைபெறும் கூட்டத்தில் இது குறித்து விவாதிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# வாரிக் கொடுத்த வள்ளல்



(மொகாலி)

மொகாலியில் நேற்று முன்தினம் நடைபெற்ற அவுஸ்ரேலிய அணிக்கெதிரான மூன்றாவது போட்டியில் இந்தியாவின் வெற்றி வாய்ப்பை அதன் வேகப் பந்து வீச்சாளர் இஷாந் சர்மா தாரை வார்த்துள்ளது.

கடைசி 18 பந்துகளில் அவுஸ்ரேலியாவின் வெற்றிக்கு 44 ஓட்டங்கள் தேவைப்பட்ட போது, இந்தியாவின் கை தான் ஓங்கியிருப்பது போல் தோன்றியது. ஆனால் இந்தத் தொடரில் சொதப்பி வரும் இந்திய வேகப்பந்து வீச்சாளர் இஷாந்த் சர்மா, 48ஆவது ஓவரில் ஓட்டங்களை வாரி இறைத்து ஆட்டத்தை அவுஸ்ரேலியாவுக்கு தாரை வார்த்து விட்டார். இந்த ஓவரை எதிர்கொண்ட ஜேம்ஸ் போல்க்னர் 30 ஓட்டங்கள் (4, 6, 6, 2, 6, 6) விளாசி பிரமிக்க வைத்ததுடன், ஆட்டத்தை தங்கள் பக்கம் திருப்பினார்.

# டோனி பாய்ச்சல்



இஷாந்த் சர்மாவின் மோசமான பந்து வீச்சே அவுஸ்ரேலிய அணியுடனான மூன்றாவது ஒரு நாள் போட்டியில் தோல்வியடைய முக்கிய காரணம் என இந்திய அணிக் கப்டன் டோனி தெரிவித்துள்ளார். கடைசி கட்ட ஓவர்கள் மிக மோசமாக அமைந்தன. சர்வதேச போட்டிகளில் பங்கேற்கும் பந்து வீச்சாளர்கள் தங்களது பலம் அறிந்து, அதற்கேற்ப திட்டம் வகுத்து செயற்பட வேண்டும். இவர்களுக்கு எல்லாவற்றையும் ஸ்பூன் வைத்து ஊட்டுவது போல சொல்லிக்கொடுக்க முடியாது. ஏற்கனவே பந்துவீசிய வினய் குமார் அதிக ஓட்டங்களை விட்டுக் கொடுத்தார். இதையடுத்து வேறு வழியில்லாததால், 48ஆவது ஓவரை வீச இஷாந்த் சர்மாவை அழைத்தேன். மோசமாகப் பந்துவீசிய இவரிடம் உடனடியாக எதுவும் பேச வேண்டியதில்லை. விடுதிக்குத் திரும்பிய பின் தனது செயற்பாடு குறித்து அவரே ஆய்வு செய்வது தான் நல்லது. ஒரு ஓவரில் தான் மோசமாக பந்துவீசினார். கடினமான காலக் கட்டத்தில் தான் ஒருவருக்கு ஆதரவாக இருக்க வேண்டும். நாட்டுக்காக விளையாடும் யாரும் சொதப்பலாக பந்துவீச விரும்பமாட்டார்கள்.

கிரிக்கெட்டை பொறுத்தவரை எதுவும் நடக்கலாம். சரியான முடிவை எடுக்க முயற்சிக்கும்போது சில சமயம் பலன் கிடைக்கும், சில சமயம் பலன் அளிக்காமல் போய்விடும். வீரர்களின் தேர்வு குறித்த எனது கவலையைத் தேர்வாளர்களிடம் தெரிவிப்பேன். நன்றாக வீசக்கூடிய எந்த பந்துவீச்சாளர்களில் ஒரு சில ஓவர்கள் ஆட்டத்தின் தன்மையை மாற்றிவிடும். நாங்கள் ஒரு கட்டத்தில் 76 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டை இழந்து விட்டோம். இதனால் 300 ஓட்டங்களுக்கு மேல் குவித்தது அதிர்ஷ்டமே எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# சந்தேகம்



(அபுதாபி)

தென்னாபிரிக்க அணியின் நட்சத்திர வீரர் அம்லா அவசரமாக நாடு திரும்பியதால், பாகிஸ்தானுக்கு எதிரான இரண்டாவது டெஸ்டில் பங்கேற்பது சந்தேகமாகியுள்ளது.

ஐக்கிய அரபு எமிரேட்ஸ் சென்றுள்ள பாகிஸ்தான், தென்னாபிரிக்க அணிகள் இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. முதல் போட்டியில் பாகிஸ்தான் அணி வெற்றி பெற்றது. இரண்டாவது போட்டி நாளை மறுதினம் டுபாயில் ஆரம்பமாகவுள்ளது. இந்நிலையில், தன் மனைவிக்கு இரண்டாவது குழந்தை பிறக்கவுள்ளதால், அம்லா நேற்று முன்தினம் சொந்த நாட்டிற்கு திரும்பினார். இதனால், டுபாய் டெஸ்டில் இவர் பங்கேற்பது சந்தேகம் தான். இவருக்கு பதில் மாற்று வீரரை, தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை (சி.எஸ்.ஏ.,) இன்னும் அறிவிக்கவில்லை.

# இறுதிக்கு முன்னேற்றம்

(மொஸ்கோ)

கிரெம்ளின் கோப்பை மகளிர் ரென்னிஸ் போட்டியின் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் விளையாட, அவுஸ்ரேலிய வீராங்கனை சமந்தா ஸ்டோசர் தகுதி பெற்றார்.

அரை இறுதியில் ரஷ்யாவின் ஸ்வெட்லனா கஸ்னட்சோவாவுடன் நேற்று முன்தினம் மோதிய ஸ்டோசர் 6-2, 6-4 என்ற நேர் செட்களில் வென்று இறுதிப் போட்டிக்கு முன்னேறினார். மற்றொரு அரையிறுதியில் ரோமானியாவின் சிமோனா ஹாலெப் 6-2, 6-1 என்ற நேர் செட்களில் ரஷ்யாவின் அனஸ்டேசியாபாவ்லியுசென்கோவாவை வீழ்த்தினார். இறுதிப் போட்டியில் சமந்தா ஸ்டோசர் மற்றும் சிமோனா ஹாலெப் மோதவுள்ளனர்.

கிண்ணத்தை வெல்வதே இலக்கு என சமந்தா தெரிவித்துள்ளார். இந்த ஆண்டு மிக மோசமான ஆண்டாக அமைந்தது கவலை. இருப்பினும் விரைவில் மீள்வேன் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.



# நீக்கம்



(கராச்சி)

தென்னாபிரிக்காவுக்கு எதிரான ஒரு நாள் தொடரில் பங்கேற்கும் பாகிஸ்தான் அணியிலிருந்து சிரேஷ்ட வீரர் யூனிஸ்கான் நீக்கப்பட்டார்.

ஐக்கிய அரபு எமிரேட்ஸ் (யு.ஏ.இ.,) சென்றுள்ள பாகிஸ்தான், தென்னாபிரிக்க அணிகள், ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் மோதவுள்ளது. முதல் போட்டி வரும் ஒக்ரோபர் 30ஆம் திகதி சார்ஜாவில் இடம்பெறவுள்ளது. இத்தொடருக்கான 16 பேர் கொண்ட வீரர்களை, பாகிஸ்தான் கிரிக்கெட் சபை (பி.சி.பி.,) நேற்று முன்தினம் அறிவித்தது.

இதில் சிரேஷ்ட வீரர் யூனிஸ்கான் நீக்கப்பட்டார். இவர், கடைசியாக தென்னாபிரிக்காவில் நடந்த ஒருநாள் தொடரில் விளையாடினார்.

அணி விவரம்: மிஸ்பா (கப்டன்), அகமது ஷேசாத், நாசிர் ஜாம்ஷெத், மொகமட் ஹபீஸ், ஆசாத் ஷபிக், உமர் அக்மல், உமர் அமின், மசோத், சர்பராஸ் மொகமட், அப்ரிடி, அப்துல் ரஹ்மான், சயித் அஜ்மல், மொகமட் இர்பான், யுனைட்கான், வாகாப் ரியாஸ், சோகைல் தன்வீர்.

# தன்னிகரற்ற வீரர்

(மெல்பேர்ன்)

நவீன கிரிக்கெட் சகாப்தத்தில் டெண்டுல்கர் தன்னிகரற்ற வீரர் என அவுஸ் ரேலிய அணிக் கப்டன் மைக்கல் கிளார்க் தெரிவித்துள்ளார்.

டெண்டுல்கரின் ஓய்வு கிரிக்கெட்டுக்கு மிகப் பெரிய இழப்பு என்பதில் சந்தேகம் இல்லை. எங்கள் தலைமுறையில் அவர் தான் சிறந்த துடுப்பாட்ட வீரர் என்று என்னால் உறுதியாக சொல்ல முடியும். நான் பார்த்த மற்றும் விளையாடிய வீரர்களில் டெண்டுல்கரே உலகின் சிறந்த துடுப்பாட்ட வீரர் ஆவார். கிரிக்கெட் வரலாற்றில் பிரட்மனுக்கு பிறகு 2ஆவது சிறந்த துடுப்பாட்ட வீரர் ஆவார். அப்படிப்பட்ட சிறந்த வீரரின் ஓய்வு முடிவு இரசிகர்களுக்கு மிகுந்த வலியை ஏற்படுத்தும். எல்லாவிதமான பந்து வீச்சாளர்களையும் சிறப்பாக எதிர் கொள்ளக்கூடிய திறமை டெண்டுல்கரிடம் இருக்கிறது. இதனால் அவரை யாருடனும் ஒப்பிட இயலாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.



# வளர்ச்சிக்குத் தூண்டுகோல்

சச்சின் தனக்கென தனி தர முத்திரையை நிர்ணயித்துக் கொண்டு அதைக் கடுமையாகக் கடைப்பிடித்தவர். கிரிக்கெட்டில் எனது வளர்ச்சிக்கு அவரே தூண்டுகோலாக இருந்தார் என இந்திய அணியின் முன்னாள் கப்டன் ராகுல் ராவிட் தெரிவித்துள்ளார். சச்சின் தனக்கென தனி தர முத்திரையை நிர்ணயித்துக் கொண்டு, அதில் இருந்து கொஞ்சமும் கீழே இறங்கிவிடாமல் சிறப்பான விளையாட்டை வெளிப்படுத்தியவர். கடந்த 24 ஆண்டுகளாக பல கோடி இளம் வீரர்களுக்கு முன்னுதாரண நாயகனாக விளங்கி வருகிறார். நாமும் சிறப்பாக விளையாட வேண்டும் என்ற உத்வேகத்தை என்னுள் விதைத்து தூண்டுகோலாக இருந்தவர்.அவர் இன்னும் பல ஆண்டுகள் தொடர்ந்து விளையாட வேண்டும் என்பதே எனது விருப்பம். ஆனால், இயற்கை அதற்கு ஒத்துழைக்காது என்பதையும் உணர்ந்துள்ளேன். இதுதான் வாழ்க்கை. அவரது சாதனைகளைக் கொண்டாடுவதற்கு இதுதான் சரியான தருணம். கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்ற பிறகும் அவருக்கு சிறப்பான வாழ்க்கை அமைய வாழ்த்துகிறேன். எஞ்சியுள்ள இரண்டு டெஸ்ட் போட்டிகளிலும் அவர் எந்தவித நெருக்கடியும் இல்லாமல் அனுபவித்து விளையாட வேண்டும். அவரது குடும்பத்தினருக்கும் இது அற்புதமான அனுபவமாக இருக்கும் என அவர் மேலும் தெரிவித்தார்.

கரவெட்டி நவசக்தி ஆண்டு நிறைவு கால்பந்து

# கிண்ணம் வென்றது நாவாந்துறை சென். மேரிஸ்

(நெல்லியடி)

கரவெட்டி நவசக்தி விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்பட்ட ஆண்டு நிறைவுக் கால்பந்தாட்டத் தொடரின் வெற்றிக் கிண்ணத்தை நாவாந்துறை சென். மேரிஸ் அணி கைப்பற்றிக் கொண்டது.

பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் கரவெட்டி நவசக்தி விளையாட்டுக்கழகத்தகின் 50ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ். மாவட்ட கால்பந்தாட்ட அணிகளுக்கிடையில் மாபெரும் கால்பந்தாட்டத் தொடரை நடாத்தியது.

அணிக்கு ஏழு பேர் கொண்ட இக் கால்பந்தாட்டத் தொடரில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த பல அணிகள் பங்கு கொண்டன. இருப்பினும் இப்போட்டித் தொடரின் இறுதிப் போட்டிக்கு நாவாந்துறை சென். மேரிஸ் அணியும்,மயிலங்காடு ஞானமுருகன் அணியும் தகுதி பெற்றன.

இப்போட்டித் தொடரின் இறுதி மற்றும் மூன்றாமிடத்திற்கான போட்டிகள் நேற்று முன்தினம் மாலை 4.00 மணிக்கு வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றது.

இரசிகர்களின் பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியிலும், கரகோஷ ஒலிகளுக்கு மத்தியிலும் சென். மேரிஸ் அணியும், ஞானமுருகன் அணியும் களமிறங்கின. இதில் சென். மேரிஸ் அணி முற்பாதி ஆட்டத்தில் ஆதிக்கம் செலுத்தியது. குறிப்பாக, அவ்வணியின் முன்கள வீரர் யூட்டின் வேகமான ஆட்டத்திற்கு ஈடுகொடுக்க முடியாமல் ஞானமுருகன் அணி திண்டாடியது. இதன் காரணமாக முற்பாதி ஆட்டத்தின் 9 மற்றும் 20ஆவது நிமிடங்களில் யூட் அடுத்தடுத்து இரு கோல்களைப் போட்டு அணியை முன்னிலைப்படுத்தினார். 29 ஆவது நிமிடத்தில் முறையற்ற ஆட்டம் காரணமாக ஞானமுருகன் அணி வீரர் பார்த்திபனுக்கு மஞ்சள் அட்டை காண்பிக்கப்பட்டு நடுவரால் எச்சரிக்கப்பட்டார். 2-0 என்ற கணக்கில் சென். மேரிஸ் முன்னிலை பெற்றவேளை முற்பாதி ஆட்டம் நிறைவுக்கு வந்தது.

தொடர்ந்து நடைபெற்ற பிற்பாதி ஆட்டத்தில் சென். மேரிஸ் அணி தற்காப்பு ஆட்டத்தை வெளிப்படுத்த முனைந்தது. இதனை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திய ஞானமுருகன் அணி பந்தை தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தபோதும் கோல் அடிக்கும் அரிய வாய்ப்புக்களைக் கோட்டை விட்டது. ஆக்ரோஷமாகச் செயற்பட்ட ஞானமுருகன் அணி வீரர் சயந்த னுக்கு 39ஆவது நிமிடத்தில் மஞ்சள் அட்டை காட்டப்பட்டு நடுவரால் எச்சரிக்கப்பட்டார். தொடர்ந்தும் உற்சாகமாக செயற்பட்ட ஞானமுருகன் அணிக்கு 46ஆவது நிமிடத்தில் தண்ட உதை ஒன்று கிடைத்தது. இந்த வாய்ப்பை உரிய முறையில் பயன்படுத்தி ஞானமுருகன் அணி முதல் கோலைப் பெற்றுக்கொள்ளும் என எதிர்பார்க்கப்பட்டபோதும் அது வீணாடிக்கப்பட்டது. தொடர்ந்து 48ஆவது நிமிடத்தில் ஞானமுருகன் அணி வீரர் ஜெகன் சிறப்பானதொரு கோலைப் போட்டு அணி ஆதரவாளர்களையும், சக வீரர்களையும் உற்சாகப்படுத்தினார். பின்னர் ஆக்ரோஷமாகச் செயற்பட்ட ஞானமுருகன் அணிக்கு போட்டி நிறைவடைய ஒரு நிமிடம் இருக்கும் நிலையில் மீண்டும் கோல் அடிக்கும் வாய்ப்பு கிட்டியது. அந்த வாய்ப்பை கோட்டை விட்ட ஞானமுருகன் அணி பரிதாபகரமான தோல்வியைத் தழுவியது. இறுதியில் நாவாந்துறை சென். மேரிஸ் அணி 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

தொடர்ந்து நடைபெற்ற மூன்றாமிடத்திற்கான போட்டியில் நவிண்டில் கலைமதி அணியும், மணற்காடு சென். அன்ரனீஸ் அணியும் மோதின. இதில் மணற்காடு சென். அன்ரனீஸ் அணி 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று மூன்றாமிடத்தைப் பிடித்துக் கொண்டது. கிண்ணம் வென்ற அணிக்கு 30 ஆயிரம் ரூபா பணப் பரிசும் வழங்கப்பட்டது. இரண்டாமிடத்தைப் பிடித்த அணிக்கு 20ஆயிரம் ரூபா பணப் பரிசு வழங்கப்பட்டது. இப்போட்டியின் ஆட்ட நாயகன், தொடர் நாயகன் மற்றும் அதிக கோல் அடித்த வீரர் என மூன்று விருதையும் நாவாந்துறை சென். மேரிஸ் அணி வீரர் யூட் பெற்றுக்கொண்டார். மற்றும் சிறந்த கோல் காப்பாளராக சென். மேரிஸ் அணி வீரர் அலக்ஸ், வளர்ந்து வரும் வீரருக்கான விருதை அதே அணியைச் சேர்ந்த ஜெனட் ஆகியோர் பெற்றுக்கொண்டனர். இவ்விருதுகளை பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கரவெட்டிப்பிரதேச செயலர் எஸ்.சிவஸ்ரீ. வழங்கிக் கௌரவித்தார். இப் போட்டி நிகழ்வில் கழக வீரர்கள், தலைவர்கள், செயலாளர்கள், விளையாட்டு நலன் விரும்பிகள், ஆர்வலர்கள், இரசிகர்கள் எனப் பலர் கலந்து கொண்டு போட்டியைக் கண்டு களித்தனர்.

(17)





ஆட்டநாயகன்



தொடர் நாயகன்



சிறந்த கோல்காப்பாளர்



வளர்ந்து வரும் சிறந்த வீரர்

# ஜொனியன்ஸ் வசம் கிண்ணம்

(யாழ்ப்பாணம்)

சிறிதரனின் சிறப்பான பந்து வீச்சின் மூலம் சபாரெட்ணம் வெற்றிக் கிண்ணத்தை ஜொனியன்ஸ் அணி கைப்பற்றிக் கொண்டது.

சென்றலைட்ஸ் அணிக்கும், ஜொனியன்ஸ் அணிக்குமிடையிலான சபாரெட்ணம் வெற்றிக் கிண்ண ஒரு நாள் கிரிக்கெட் போட்டி நேற்று முன்தினம் சென். ஜோண்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஜொனியன்ஸ் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய சென்றலைட்ஸ் அணி சிறிதரனின் பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இருப்பினும் மயூரன், பிரசாத் ஆகியோர் பொறுப்புடன் ஆடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை கௌரவமான நிலைக்கு இட்டுச் சென்றனர். இறுதியில் சென்றலைட்ஸ் அணி 37.2 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 116 ஓட்டங்களைப் பெற்றது. இதில் மயூரன் 25, பிரசாத் 22, கோபி 16, ஜெரிக் துசாந் 15 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சிறிதரன் நான்கு, ரஜீவ் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 117 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய ஜொனியன்ஸ் அணி 23 ஓவர்கள் நிறைவில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் அன்புஜன் 20, அகிலன் 32 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சார்ள்ஸ் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். இதன் மூலம் ஜொனியன்ஸ் அணி சபாரெட்ணம் கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது. போட்டியின் ஆட்டநாயகன் மற்றும் சிறந்த பந்து வீச்சாளருக்கான விருதை ஜொனியன்ஸ் அணியைச் சேர்ந்த சிறிதரன், சிறந்த துடுப்பாட்ட வீரராக ஜொனியன்ஸ் அணி வீரர் அகிலன், சிறந்த சகலதுறை வீரராக சென்றலைட்ஸ் அணி வீரர் மயூரன், சிறந்த களத்தடுப்பாளராக ஜொனியன்ஸ் அணி வீரர் ரஜீவன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். இப்போட்டி நிகழ்வில் யாழ். மாவட்ட முன்னாள் பயிற்றுவிப்பாளர் சண்முகலிங்கம் மற்றும் இரு அணி ஆதரவாளர்கள், இரசிகர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (எஸ்.பி.)





## திருடிய வீரருக்கு ஒரு வருடத் தடை

(கொழும்பு)

தாய்லாந்து திறந்த மெய்வல்லுநர் போட்டியில் பங்கேற்றிருந்தவேளை கையடக்கத் தொலைபேசியொன்றைத் திருடியமை தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்டிருந்த இலங்கை மெய்வல்லுநர் வீரருக்கு ஒரு வருட காலப் போட்டித் தடையை இலங்கை மெய்வல்லுநர் சங்கம் விதித்துள்ளது.

கடந்த 17ஆம் திகதி மெய்வல்லுநர் சங்கத்தின் உப தலைவர் எச். டபிள்யூ நிமல்சிறியின் முன்னிலையில் நடைபெற்ற வாய்மூல விசாரணையின்போதே குறித்த வீரருக்கு ஒரு வருடப் போட்டித் தடை விதிக்கப்பட்டது.

இவ்வாறு தண்டனையைப் பெற்றவர் சம்பத் ரணசிங்க எனும் ஈட்டி எறிதல் வீரராவார்.

ஒரு மணி நேரமாக நடைபெற்ற இந்த வாய் மூல விசாரணையின்போது குறித்த வீரர் குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்தே இலங்கை மெய்வல்லுநர் விளையாட்டு சங்கம் அவருக்கு ஒரு வருடப் போட்டித் தடை உத்தரவைப் பிறப்பித்தள்ளது.

சுட்டிக்காட்ட முயன்ற தமிழ்க் கூட்டமைப்பு எம்.பி சிறீதரனுக்கு அங்கு குடியேறு வதற்காக வந்திருந்த சிங்கள மக்கள் காட்டமாக தமது ஆட்சேபனையை

லங்கை தரப்புக்களை திருப் திப்படுத்துவதில் தீவிரமாக இருப்பதாகத் தெரிகிறது.

தேர்தலுக்குப் பின்னர் தோல்விக்கான உண்மையான காரணங்களை தமது தரப்பி லிருந்து அரசு புரிந்து

முடியாமற் போனமைக்கு கடந்த காலத்தில் முறையான அரசியல் தலைமைத்துவம் இல்லாமற் போனதையும் வடக்கிலுள்ள ஊழியர்களின் ஒரு பிரச்சினையாக 25ஆயிரத் துக்கும் அதிகமான ஊழியர்கள்

பட்டு வாக்களிப்பதை நியாய மாக நாம் இங்கே எடுத்துக் கொண்டாலும் அந்த வாக்கு களின் பெயரால் அதிகாரத் துக்கு வந்திருப்பவர்கள் அந்த மக்களின் அன்றாடப் பிரச்சினைகளை கவனத்தில்

# அரசுடன் கூட்டமைப்பு முரண்பாட்டை வளர்த்தால் மீண்டும் பாதிக்கப்படப் போவது தமிழ் மக்கள்தான்



- சாலையூரான் -

வடக்கே மத்திய அரசின் மேலாண்மையை வெளிப்படுத் தும் அடுத்த ஒரு நடவடிக்கை யாக நாவற்குழிப் பகுதியில் 80 சிங்கள குடும்பங்களை உடன் குடியேற்ற அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறது.

தமிழரசுக்கட்சியுடன் முரண் பட்டுக்கொண்டு முள்ளிவாய்க் கால் சத்தியப்பிரமாணத்தை தமிழ் கூட்டமைப்பின் ஒரு சாரார் மேற்கொள்ள தீர்மானித் ததன் எதிரொலியாக இந்தக் குடியேற்ற முயற்சி இப் போது இடம்பெற்றிருக்கிறது.

இந்தக் குடியேற்ற முயற் சியை அடுத்து அங்கு ஏற் கனவே குடியிருந்த குடும்பங் களின் மத்தியில் பல வாதப் பிரதிவாதங்கள் எழுந்துள்ள நிலையில் இது ஒரு தவறான முயற்சியென வெளியிட்டிருக்கிறார்கள்.

நிலைமை இவ்வாறிருக்க, தேர்தல் வெற்றிக்குப் பிறகு வடக்கு மாகாண சபையின் முதல் அமர்வுக்கு முன்ப தாகவே அமைச்சுப்பதவிகளை பெற்றுக்கொள்வதில் பங்கா ளிக் கட்சிகள் தமக்கிடையே முரண்பட்டுக்கொண்டு முள்ளி வாய்க்காலுக்கு செல்வதி லேயே ஒருமித்த முடிவுக்கு வர முடியாதுபோன நிலையில் நான்கு வெவ்வேறு இடங்களில் சத்தியப்பிரமாணம் செய்யு மளவுக்கு வெளியேறியவர் களின் கூட்டும் பலவீனமடைந் திருக்கிறது.

மறுபுறத்தே அரசு வடக்கு தேர்தலில் எதிர்கொண்ட தோல் விக்குப்பிறகு வடக்கை நிர்வகிக்கும் விவகாரத்தின் மத்தியில் தனக்குள்ள மேலாண்மை மூலம் தென்னி

கொண்டாலும் இதனை வெளியே கூறிக்கொள்ள முடியாத நிலையில் வடக்கே தனது மேலாண்மையை காட்டிக்கொண்டு தனக்குள் திருப்திப்பட அரசு முயற்சிப்ப தாகத் தெரிகிறது.

மறுபுறத்தில் தனது மாகாண சபையை நகர்த்திச் செல்வ தில் அரசுடன் முரண்பட்டுக் கொள்ளக் கூடாதென்பதில் முதலமைச்சர் விக்னேஸ்வரன் உறுதியாக இருக்கின்ற போதும் தனது செயற்பாட்டு விருப்பை முன் கொண்டுசெல்வதில் கூட்டமைப்புக்குள்ளே அகநிலையில் சிரமங்களை எதிர்கொண்டுள்ளார்.

பிந்தியதாக வடக்கு மாகாண சபையில் புதிதாக பொறுப்புக்களை ஏற்றுக் கொண்ட அமைச்சர்களின் சந்திப்புக்களில் அதிகாரிகள் அரசின் கடந்த கால செயற் பாடுகள் முறையாக அமைய வில்லை என்பதை சுட்டிக் காட்டி இருப்பதும் பதில் நடவடிக்கையாக இந்த அமைச்சர்கள் கூறியுள்ள கருத்துக்களும் அரசை புண்படுத்தும் நோக்கம் கொண்டவை. இவை அரசுக்கு புதிய சங்கடங்களாகும்.

தாம் சரியாகச் செயற்பட சேமலாப நிதியத்தில் இணைக்கப்படாதிருப்பதும் இந்த புதிய மாகாண அமைச் சர்கள் அதிகாரிகள் சந்திப்பில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

அரசாங்கத்துடன் நிலை மைகளை சுமுகமாக அணுக முனையும் விக்னேஸ்வரன் தனது கட்சியின் மாகாண சபை உறுப்பினர்கள் இவ் வாறு கடந்த காலத்தைக் குற்றம்சாட்டி அரசை விமர்சிக் கும் வகையில் வெளிவிடும் செய்திகளில் கவனம் செலுத்துவது அவசியம்.

ஒரே நாளில் முள்ளிவாய்க் கால் சத்தியப்பிரமாணத்தை கைவிட்டவர்கள், வேறு எங்காவது ஒரு இடத்திலாவது கூட்டாக சத்தியப்பிரமாணத்தை எடுக்க முடியாத அளவுக்கு அவர்களின் ஒற்றுமை பலவீனமடைந்திருக்கிறது.

இந்த நிலைமையானது எதிர்காலத்தில் தமிழ் கூட்ட மைப்பு இலகுவாக எந்த விவகாரத்திலும் தமக்குள்ளே முரண்பட்டுக்கொள்ளலாம் என்பதை முன்னறிவிக்கும் ஒரு பிரச்சினையாதலால் எதிர்த்தரப்புக்கே இது வாய்ப்பான நிலைமையாகும்.

ஒரு வாதத்துக்கு மக்கள் தேசிய உணர்வு தூண்டப் எடுக்காதிருப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது. நீண்ட அவலங்களுக்குப் பிறகு நமது மக்களின் இருப்பையாவது கெடுத்துக்கொள்ளாமலிருக்கும் அக்கறையை இவர்களின் நடவடிக்கைகளில் உணரக்கூடியதாக இல்லை.

தமிழ்க் கூட்டமைப்பினரின் நடவடிக்கைகள், அரசுக்கு தன்மானப் பிரச்சினைகளை ஏற்படுத்தி வடக்கில் அரசு தன் பிடியை மேலும் இறுக்கிக்கொண்டு வடக்கின் நிர்வாகத்தை நெருக்கடிக்குள் தள்ளிவிடுவதையே தமிழ்க் கூட்டமைப்பினர் எதிர்பார்த்து செயற்படுவதாக தெரிகின்றது.

அரசுக்கும் தமிழ்க் கூட்ட மைப்புக்கும் இடையே உருவாகப்போகும் முரண் பாடுகளால் வடக்கு மாகாண சபையில் பதவியேற்றிருக்கும் தமிழ்க் கூட்டமைப்பின் உறுப் பினர்களுக்கு அரசிடமிருந்து கிடைக்கும் கொடுப்பனவு களுக்கோ இதர சலுகை களுக்கோ எந்தப் பாதிப்பும் ஏற்படப்போவதில்லை.

ஆனால், இவர்களின் பதவிக் கதிரைகளுக்காக வாக் களித்த தமிழ் மக்கள் பெரும் நெருக்கடிகளை சந்திக்கவிருக் கிறார்கள் என்பதும் அதையே இவர்கள் விரும்புகிறார்கள் என்பதும்தான் கவலைக்குரியது.

# இந்திய சினிமா நூற்றாண்டு விழா




## கொண்டாட்டங்களின் பின்னுள்ள அவல நகைச்சுவை

- சுரேஷ் கண்ணன் கட்டுரையிலிருந்து.

இந்திய சினிமாவின் வயது நூறு என்பது ஒருபுறமிருக்கட்டும். தமிழ் சினிமாவை மட்டும் வைத்து உரையாடும் போது, அது சுமார் எண்பது ஆண்டுகளைக் கடந்திருந் தாலும் அதில் சில அரிதான நல்ல முயற்சிகளைத் தவிர, சர்வதேச அளவில் பிரதிநிதித்துவப்படுத்தக்கூடிய, திரைமொழியின் இலக்கணத்தில் முற்றிலுமாக பொருந்தக்கூடிய, குறைந்தபட்சம் தற்பெருமையாகச் சொல்லக்கூடிய ஒரு தமிழ் சினிமா கூட இதுவரை உருவாகவில்லை என்கிற எளிய உண்மையில் இருக்கிற அபத்தம், கொண்டாட்ட மனநிலையில் இருக்கிற எவருக்கும் உறைக்கிறாற் போல் தெரியவில்லை. வெறுமனே ஆண்டுகளை மாத்திரம் கடந்திருக்கிற வெற்றுப் பெருமையைக் கொண்டாட இத்தனை பெரிய விழா - அதனுள் பொதிந்திருக்கும் அரசியல் உட்பட - நிகழ்ந்திருப்பது அவல நகைச்சுவை





யின் உதாரணம். ஒன்றுமில்லாததற்கு கொண்டாடப்பட்ட இந்த விழாவில் சில நபர்களின் விடுபடல்கள் குறித்த முணுமுணுப்புகளும் அதிலுள்ள அரசியல்களும் இந்த நகைச்சுவையின் அபத்தத்தை இன்னமும் கூட்டுகின்றன.

இந்த விழாக் கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக சென்னை திரையரங்குகளில் சில தென்னிந்திய மொழித் திரைப்படங்கள் திரையிடப்பட்டன. அதில் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த தமிழ்த்திரைப்படங்களின் வரிசை, எல்லா நகைச்சுவைப் படங்களையும் தோற்கடிக்கும் விதத்தில் உருவாக்கப்பட்டிருந்தது. முட்டாளோ என்று சந்தேகிக்கப்படும் ஒரு நபர், "நான் ஒரு முட்டாள்" என்று அவரே அதிகாரபூர்வமாக தன் கழுத்தில் ஒரு அறிவிப்பு பலகையை மாட்டி வைத்து அதை நிரூபிக்க போட்டி போட்டால் எப்படியிருக்குமோ அப்படி யிருந்தது அந்தத் தேர்வின் வரிசை.

அடிமைப்பெண், ரிகஷாக்காரன் போன்ற காவியங்கள், பாசமலர் போன்ற மிகையுணர்வு சித்திரங்கள் போன்றவைகளால் நிரம்பியிருந்தது இந்தத் தேர்வு. பருத்தி வீரன் மாத்திரமே சற்று ஆறுதலான பெருமூச்சு. இந்த தேர்வுகளின் பின்னாலுள்ள அரசியலைப் பற்றி வெளிப்படையாக உரையாடாமலேயே நம்மால் புரிந்து கொள்ள முடிவது எப்படிப்பட்ட கோமாளித்தனமான சமூகத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக் கிறோம் என்பதை உறுதிப்படுத்துகிறது.

நாடகத்தின் நீட்சியாக இன்றளவும் தொடர்ந்து கொண்டிருக்கும் தமிழ் சினிமாவின் திரைமொழியில் குறிப் பிடத் தக்க அளவில் பாதிப்பை ஏற் படுத்தி அதன் முகத்தை சிறிதாவது நவீனமாக மாற்றியமைத்த இயக்கு நர்கள பற்றிய பேச்சே மேற்குறிப்பிட்ட வரிசையில் இல்லை. பாலுமகேந்திரா, மகேந்திரன், ருத்ரைய்யா, ஜெயகாந் தன் உள்ளிட்ட பல சிறந்த இயக்கு நர்களும் அவர்களது படைப்புகளும் இதில் நினைவு கூரப்படவேயில்லை.

இங்கு ஒரு உணவுப்பொருளை மிக கவனமாக உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்தாலே, சர்வதேச தரக்கட்டுப்பாட்டின் விதிகளை அது நிறைவேற்றவில்லையெனில் நிராகரிக்கப்பட்டு விடுகிறது. அது போல கலைப்படைப்புகள் அவற்றின் பிரதேசங்களைத் தாண்டி உலக அரங்கில் பரவலாக அறியப்படுவது அது பெறும் விருதுகளால்.

உலகிலேயே அதிகமாக திரைப் படங்களை தயாரித்துக் கொண்டிருக்கிற நாடுகளில் ஒன்று இந்தியா. இந்தியாவிலேயே அதிகமாக திரைப் படங்களை உற்பத்தி செய்யும் மாநிலம் தமிழகம். எண்பது ஆண்டுகளைக் கடந்திருக்கிற தமிழ் சினிமா, இதுவரை எத்தனை முறை "உண்மையான" சர்வதேச விருதுகளைப் பெற்றிருக் கிறது அல்லது அங்குள்ள அரங்கு களில் திரையிடப்படும் தகுதியையா வது குறைந்தபட்சம் கொண்டிருக்கிறதா என்பதை அடிப்படையாக யோசித்துப் பார்த்தாலே நாம் நின்று கொண்டிருக்கிற இடம் நமக்கு எளிதில் புரிந்து விடும்.

தமிழ்ச் சமூகத்தின் பண்பாட்டை, கலாசாரத்தை திரைப்படங்களின் வழியே அறிந்து கொள்ள விரும்பும் ஓர் மேற்கத்திய ஆய்வாளர், தமிழ்த் திரைப்படங்களில் அதனுடைய எவ்வித அடையாளத்தையும் தடயத்தையும் காண முடியாததோடு, அவருடைய நாட்டின் தெருக்களிலேயே தமிழ் கதாபாத்திரங்கள் அபத்தமான டூயட் பாடிக் கொண்டிருப்பதைக் கண்டு

# கணினியை பார்க்கும் கண்களுக்கு 18 ஆலோசனைகள்!



எந்தவொரு உடல் உறுப்பும், ரத்தம் அதிகமாக செல்லாமல் இருந்தோலோ, அதிகப்படியான வேலையை செய்யும்போதோ அதில் பாதிப்பு ஏற்படுகிறது.

**கண்களை பாதுகாக்க:**

1. உடல் உறுப்பில் மிக முக்கியமானது கண். சாதாரணமாக நாம் பார்ப்பதால் கண்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படுவதில்லை. ஆனால், கண்களுக்கு மிக அருகில் அதிக ஒளியுடன் கூடிய கணினியைத் தொடர்ந்து பல மணிநேரங்கள் பார்த்துக் கொண்டிருப்பதால் கண் பாதிக்கப்படுகிறது.

2. கண்களுக்கு ஓய்வு என்றால் கண்களுக்கு இருளைக் கொடுக்க வேண்டும். கண்களுக்கு இருளைக் கொடுப்பது மட்டுமல்லாமல், மனதின் சிந்தனையை வேறு இடத்திற்கு மாற்ற வேண்டும்.

3. கண்களுக்கு ஓய்வளிக்க பல ஆசனங்கள் உள்ளது. கண்களுக்கு அதிக ரத்த ஓட்டம் அளிக்க தலைகீழ் ஆசனம் உள்ளது. சிரசாசனம் செய்வதால் கண்களின் பார்வை அதிகரிக்கும்.

4. மேலும், கண்களுக்கு திராடகம் என்ற ஒரு பயிற்சி உள்ளது. அதாவது, ஒரு இருளான அறையில் மெழுகு வர்த்தி ஏற்றி வைத்து அதைப் பார்த்துக் கொண்டே இருந்தால் கண்களுக்கு அதிகமான சக்தி கிடைக்கும்.

7. முக்கியமான விஷயம் என்னவென்றால், தினமும் 8 மணி நேரம் நிம்மதியாகத் தூங்க வேண்டும். அதுவும் மிகவும் இருளான ஒரு அறையில் தூங்குவதே கண்களுக்கு ஒரு நல்ல ஓய்வாக அமையும்.

8. பின் தூங்கி முன் எழுதல் மிகவும் நல்லது. அதாவது சீக்கிரமாகத் தூங்கி அதிகாலையில் எழுவது உடலுக்கும் புத்துணர்ச்சி கிட்டும்.

9. அலுவலகத்தில் பணியாற்றிக் கொண்டிருக்கும் போது இடையே உங்கள் கண்களுக்கு ஓய்வு தேவைப்படும் போது, உள்ளங்கைகள் இரண்டையும், நமது கண்களில் அழுத்தி சிறிது நேரம் வைத்திருந்து மூச்சை உள்ளிழுத்து வெளிவிட்டால் நல்ல பலன் கிடைக்கும்.

10. அப்படி செய்யும்போது உள்ளங்கைகளை எடுத்துவிட்டு சிறிது நேரம் கழித்து மெதுவாக கண்களைத் திறக்க வேண்டும்.

11. மேலும், இதனை வேறு முறையிலும் செய்யலாம். அதற்கு அதிக பலன் கிட்டும். அதாவது, ஒரு ஈரத் துணியை நனைத்து பின்பக்க கழுத்தில் போட்டுவிட்டு சிறிது எண்ணெயை புருவங்களில் தடவிவிட்டு இரண்டு உள்ளங்கைகளையும் கண்களில் அழுத்தும்போது உங்களது கண்களுக்கு குளிர்ச்சியும், ஓய்வும் ஒன்றுசேர கிடைக்கும்.

12. புருவம் என்பது, கண்களுக்குத் தேவையான வெப்பத்தை சீராக வைத்திருக்க அமைக்கப்பட்ட ஒரு இயற்கை கொடையாகும். புருவங்களின் சூட்டினால்தான் கண்களின் குவியங்கள் எளிதாக சுருங்கி விரிகின்றன.

13. ஆனால், அதை விட அதிகமான வெப்பத்தை நம் கண்கள் கணினியில் இருந்து பெற்று வருகிறது. எனவே அந்த வெப்பத்தைக் குறைக்க புருவங்களில் எண்ணெய் வைப்பது கண்களுக்கு குளிர்ச்சியை அளிக்கும்.

14. பொதுவாக கண்களுக்கு ஓய்வு என்றால், எதையும் உற்று அல்லது கூர்ந்து பார்க்காமல் இருந்தாலே போதும். அதாவது சாதாரணமாக கண்களால் எந்தப் பொருளையும் பார்ப்பதால் கண்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படாது.

15. ஆனால் எதையாவது உற்றுப் பார்க்கும் போதுதான் அதற்கு பாதிப்பு ஏற்படுகிறது. சிறிது நேரம் எந்தப் பொருளையும் உற்றுப்பார்காகமல், எதைப் பற்றியும் சிந்திக்காமல் இருப்பதும் நல்ல பயிற்சிதான்.

16. அதேபோல மதியம் உணவு இடைவேளையின் போது சாப்பிட்டுவிட்டு உடனடியாக கணினி முன் அமர்வதைவிட, சாப்பிட்ட பின் ஒரு 15 நிமிடம் அமரும் நாற்காலியிலேயே தளர்வாக அமர்ந்தபடி கண் மூடி இருப்பது ஏன் 10 நிமிடம் தூங்குவது கூட மிகவும் நல்லது.

17. ஒரு நாளைக்குத் தேவையான சக்தியை இந்த 15 நிமிட தூக்கத்தில் உடல் பெற்றுவிடும். அதற்காக படுக்கையில் படுத்து தூங்கக் கூடாது.

18. அமர்ந்த படி தளர்வாக 15 நிமிடம் அமர்ந்திருந்தாலும் கூட நல்லது. இப்படி செய்வதால் மாலையிலும் நீங்கள் சுறுசுறுப்பாக இருக்க முடியும்.

---

நகைக்கவே செய்வார்.

திரைப்பட வெளியீட்டின் மீதான தடைகள் தொடர்பாக சமீபத்தில் சர்ச்சைகளில் தமிழக அரசால் மறைமுகமாக பழிவாங்கப்பட்ட நடிகர் கள் கூட இன்முகத்துடன் வந்து இந்த விழாவில் விருது வாங்கி உரையாடிச் சென்றது, 'நிழலைவிட நிஜத்தில் உண்மையில் இவர்கள் எத்தனை அற்புதமான நடிகர்கள் என்பதையும் நிழலில் மாத்திரமே இவர்கள் சூப்பர் ஹீரோக்கள் என்கிற செய்தியையும் நமக்கு தெளிவாகச் சொல்கிறது. அதிகாரத்திற்குப் பணிய மறுத்து மிக உயர்ந்த விருதுகளைக் கூட மறுத்த அசலான படைப்பாளி களின் கலக அரசியல் நம் நினைவுகளில் நிழலாடுகிறது.

"அரசியலுக்கு அப்பாற்பட்டு ஒரு கலைஞன் என்கிற வகையிலாவது கருணாநிதி அவர்கள் இந்த விழாவில் கௌரவிக்கப் பட்டிருக்க வேண்டும்" என்பது படத்தொகுப்பாளர் லெனினின் ஆதங்கம். காட்சிகள் பிரதானமாய் இயங்க வேண்டிய திரைப்பட ஊடகத்தில் வண்டி வண்டியாய் உரையாடலைக் கொண்டு வந்து நிரப்பினதில் கருணாநிதிக்கும் மிகப் பெரிய பங்குண்டு. மொழியுணர்வு என்கிற ஆயுதத் தின் மூலம் மக்களின் அறியாமையைப் பயன்படுத்தி அதிகாரத் தைக் கைப்பற்றுவது என்கிற நோக்கில் பயணித்த திராவிடக் கட்சிகள் அதற்காக திரைப்பட ஊடகத்தையும் பயன்படுத்திக் கொண்டனர். அடுக்கு மொழிகள், எதுகை மோனைகள், வார்த்தை ஜாலங்கள் என்று வசனங்களை எத்தனை செயற்கையானதாக ஆக்க முடியுமோ அத்தனை செயற்கை யாய் ஆக்கினதின் விளைவை இன்றும் கூட தமிழ் சினிமா சந்தித்து வருகிறது. இந்த வகையில் தமிழ் சினிமாவின் மேன்மைக்கு கருணாநிதி அவர்களின் பங்கு என்ன என்பதை லெனின் தான் சொல்ல வேண்டும். சினிமாவின் நூற்றாண்டு விழாவைக் கூட தனிநபர் துதி மற்றும் அரசியல் அல்லாது நம்மால் உரையாட, செயல்பட முடியவில்லை என்பது நாகரிக சமூகத்தின் முன் நாம் அடைந்திருக்கும் வீழ்ச்சியையே காட்டுகிறது.

இது போன்ற வெற்றுப் பெருமைகளைக் கொண்டாடுவதற்கு முன் நாம் அடைந்திருக்கும் உயரத்தையும் சாதனையையும் சாவகாசமாக சிந்திப்பதும் அதை அடைவதற்கான முயற்சிகளையும்தான் நாம் முதலில் செய்ய வேண்டியது. கொண்டாட்டங்களெல்லாம் பிறகுதான்.

---

# உலகின் முதலாவது நூலகம் உருவான வரலாறு!



புத்தக பொக்கிஷம் என்று அழைக்கப்படும் நூலகங்கள் பற்றி முன்னுரை எழுத வேண்டிய அவசியம் இல்லை ஏனெனில் அதன் பயன்பாடுகளும் தேவைகளும் நாம் எல்லோரும் அறிந்த ஒன்றுதான். வரலாற்று தகவல் மற்றும் அது தொடர்பான ஆவணங்கள் ஒரு தலைமுறை மக்களிடமிருந்து மற்றொரு தலைமுறை மக்களுக்கு சென்றடைவது நூலகங்களின் வாயிலாகத்தான் என்றால் மிகையில்லை.

பண்டைய மெசபடோமியப் பிரதேசம் என்பது தற்போதைய டைகிரிஸ் மற்றும் யுபிரட்டஸ் ஆகிய ஆறுகளுக்கு இடைப்பட்ட நிலப்பரப்பாகும். முன்பு மெசபடோமியா என்ற ஒரே பெயரால் அழைக்கப்பட்ட கண்டம் தற்போது ஈரான், ஈராக் மற்றும் சிரியா ஆகிய பெயர்களில் அழைக்கப்படுகிறது. இக்கண்டத்தில் குறிப்பிடத்தக்க நான்கு பேரரசுகளாக விளங்கியவை சுமேரியா, பாபிலோனியா, அசிரியா மற்றும் அக்காத்தியர் ஆகும். மிகவும் புகழ் பெற்ற நாகரிகங்களாக உலகம் அடையாளம் கண்ட பாபிலோனியா மற்றும் சுமேரியா போன்ற நாகரிகங்கள் இங்கிருந்து பிறந்ததுதான்.

ஏறத்தாழ 3300 ஆண்டுகளுக்கு முன்பு அசிரியப் பேரரசின் நிர்வாகத் துறையில் ஏற்பட்ட குளறுபடிகளை களைய அப்போதைய அசிரியப் பேரரசின் அரசரான சென்னாசெர்ப் (கி.மு.1300 - கி.மு.1200) அரசாங்கத்தின் முக்கியமான ஆவணங்கள் அனைத்தையும் களிமண் தகடுகளில் எழுதி அவற்றை சூளைகளில் சுட்டு காயவைத்து பாதுகாப்பான இடங்களில் பத்திரமாக வைக்கும்படி உத்தரவிட்டார். இதனை தொடர்ந்து அரசாங்கத்தின் ஒப்பந்தங்கள், அரசாணைகள், அரசாங்க கடிதங்கள், அரசு உளவாளிகளிடம் இருந்து பெறப்படும் உளவு அறிக்கைகள் அரசு நிர்வாகத்துறையின் கீழ் வரும் முக்கிய ஆவணங்கள் போன்றவை களிமண் தகடுகளில் எழுதி சூளைகளில் சுட்டு அரசு கருவூலங்களிலும் சில கோவில் கருவறைகளிலும் பாதுகாப்பாக வைக்கப்பட்டன.

நாளடைவில் உயிர்காக்கும் மருத்துவக் குறிப்புகள், சமய நூல்கள் போன்றவையும் எழுதி பாதுகாப்பாக வைக்கப்பட்டன. அசிரியப் பேரரசின் கடைசி அரசரான அசுர்பானிபல் (கி.மு.700 - கி.மு.600) காலத்தில் இக்களிமண் தகடுகளின் எண்ணிக்கை முப்பதாயிரத்தையும் தாண்டியது, அத்தனையையும் வெவ்வேறு இடங்களில் வைத்து பாதுகாப்பது சிரமமாக இருந்த காரணத்தினால் அனைத்தையும் அசிரியாவின் (தற்போது ஈராக்) தலைநகரான நினிவாஹ் (Nineveh - தற்போது மொசூல் (Mosul) ஒன்றிணைத்து அவற்றை துறைவாரியாக பிரித்து அடுக்க உத்தரவிட்டார்.

இதன்படி ஒவ்வொரு களிமண் தகடுகளும் துறை வாரியாக பிரித்து அடுக்கி பொதுமக்கள் பார்வைக்கு என்று விடப்பட்டது. இதுதான் உலகில் அமைக்கப்பட்ட முதல் நூலகம் ஆகும். இந்த நூலகம் The Royal Library of Ashurbanipal என்ற பெயரில் அழைக்கப்பட்டது. எனினும் பெரும்பாலான களிமண் தகடுகள் அரசாங்க ஆவணங்களாகத்தான் இருந்தது. இந்த நூலகத்தை பற்றி தற்செயலாக கேள்விப்பட்ட அலெக்ஸாண்டர் (கி.மு.356 - கி.மு.323) நேரில் சென்று பார்வையிட்டார், அதனைத்தொடர்ந்து Ashurbanipal நூலகத்தை போல் அல்லது அதனைக்காட்டிலும் பிரம்மாண்டமான ஒரு நூலகத்தை கட்ட வேண்டும் என்ற எண்ணம் அவருள் தோன்றியது.

எகிப்தியர்கள் பொப்பிரஸ் தாள்களில் எழுதி வந்த அந்தக்காலத்தை அலெக்ஸாண்டர் சாதுர்யமாக பயன்படுத்திக்கொண்டார், இதனைத் தொடர்ந்து எகிப்திலுள்ள அலெக்ஸாண்ட்ரியா நகரில் இதற்கான ஆயத்த பணிகள் துவங்கப்பட்டது. உலகம் முழுவதிலும் கல்வி, கலை, இலக்கியம், கணிதம், அறிவியல், மருத்துவம் ஆகிய துறைகளில் இருந்து சிறந்த நூல்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவை கிரேக்கத்தில் மொழிபெயர்க்கப்பட்டு பாப்பிரஸ் தாள்களில் எழுதப்பட்டன.

பணிகள் துவங்கிய சிறிது காலத்திலேயே அலெக்ஸாண்டர் இறந்து போனாலும் அலெக்ஸாண்டரின் நெருங்கிய நண்பரும் அப்போதைய எகிப்தின் அரசருமான தொலமி (Ptolemy ஐ கி.மு.305 - கி.மு.282) முன்னின்று பணிகளை மேற்பார்வையிட்டு நிறைவு செய்தார். இறுதியாக கி.மு.300இல் எகிப்தின் அலெக்ஸாண்ட்ரியா நகரில் ஏழு இலட்சத்திற்கும் அதிகமான பொப்பிரஸ் தாள்களை கொண்ட முதல் பொது நூலகம் அமைக்கப்பட்டு The Royal Library of Alexandria என்று பெயரிடப்பட்டது.

அதன் பிறகு ஒக்ஸ்போர்ட் போன்ற புகழ் பெற்ற பல்கலைக்கழகங்கள் நூலகத்தின் பயன்பாடுகளை அறிந்து தங்களது பல்கலைக்கழக வளாகங்களிலிலேயே நூலகங்களை நிறுவத்தொடங்கின. அதன் பிறகு நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக நூலகங்கள் பல்வேறு மாற்றங்களை சந்தித்து தன்னை வளர்த்துக்கொண்டு ஒரு புதிய பரிணாமத்தை அடைந்தன.



# க.நா.சு.வின் சிரிப்புச் சத்தம் கேட்கிறதா உங்களுக்கு?

உதயசங்கர்



இலக்கியம் என்றால் என்னவென்றே தெரியாமல்தான் எழுத ஆரம்பித்தேன் என்று சொன்னால் சிரிக்கமாட்டீர்கள் என்று நம்புகிறேன். இலக்கியம் என்பது தமிழாசிரியர்களின் டிபார்ட்மெண்ட் என்று நினைத்துக் கொண்டிருந்தேன். அதற்கும் காரணம் இருந்தது. எங்கள் வீட்டிலிருந்து காந்தி மைதானம் ஐம்பதடி தூரத்தில்தான் இருந்தது. கோவில்பட்டியில் நடைபெறும் அத்தனை முக்கியமான அரசியல் கூட்டங்கள், இலக்கிய கூட்டங்கள் எல்லாம் அங்கேதான் நடைபெறும். எல்லாக் கூட்டங்களிலும் மேடைக்கு முன்னால் புழுதி பரப்பியபடி சிறுவர்கள் நாங்கள் விளையாடிக் கொண்டிருப்போம்.

இலக்கியக் கூட்டங்கள் என்றால் பட்டிமன்றங்கள்தான். புலவர்கள், பேராசிரியர்கள் என்று பழந்தமிழ் இலக்கியப் பாடல்களை செந்தமிழில் பாடவும், பேசவும் செய்வார்கள். அவர்கள் பேசுகிற மொழியே எங்களுக்குப் புதியதாக இருக்கும். அப்படியே வாயைப் பிளந்தபடியே பேசுகிறவர்களின் வாயை ஆச்சரியத்துடன் பார்த்தபடியே உட்கார்ந்திருப்போம். ஆக இலக்கியம் என்றால் அது வேறு மொழியில் இருக்கும் போல என்றுதான் நினைத்திருந்தேன். ஏனெனில் நான் மற்ற சிறுவர்களுடன் பேசுகிற மொழியில் அது இல்லை. ஆனால் அந்த மேடைப்பேச்சு கவர்ச்சியாக இருந்தது. அதைப்போல தெருவில் பேசி பகடி செய்திருக்கிறேன். பள்ளிப்பருவம் முடிந்து கல்லூரியில் படிக்கும்போதுகூட எதுகை மோனையோடு எழுதப்படாத கவிதைகளைக் கவிதைகள் என்று நினைத்தும்கூட பார்த்ததில்லை. எனவே நானும் எதுகைமோனையோடு கவிதைகளை எழுதி கவிதாதேவியை அர்ச்சனை செய்து வந்தேன்.

அப்போது வித்யாஷங்கரை ஆசிரியராக கொண்டு. 'எண்ணங்கள்' என்ற பத்திரிகை வந்தது. அந்தப் பத்திரிகைக்கு என்னுடன் கூடப்படித்த பாவத்துக்காக என்னிடம் கவிதை தரும்படி கேட்டான் மாரீஸ். கவிதைகளால் நோட்டுகளை சிறு காலியிடம் கூட விடாமல் நிரப்பிக் கொண்டிருந்த நான் உடனே எதுகை மோனை உருவகம், உவமை, உவமேயம் என்று வார்த்தைகளை நெருக்கி அடுக்கி 'எண்ணங்கள் வாழ்க! வண்ணங்கள் எழுக!' என்கிற மாதிரி ஒரு மகத்தான கவிதையை அடித்தல் திருத்தல் இல்லாமல் எழுதிக் கொண்டு போய் கவிஞனுக்கேயுரிய கம்பீரத்துடன் நீட்டினேன். மாரீஸ் வாங்கிப் படித்துவிட்டு ஒரு மர்மப் புன்னகையுடன், 'சரி, ஆசிரியரிடம் கொடுக்கிறேன்.' என்று சொல்லி அனுப்பிவிட்டான். எனக்கு கொஞ்சம் ஏமாற்றம்தான். கவிதையைப் படித்தவுடன் 'கண்டேன் கவிதையை,' என்று என்னைக் கட்டித்தழுவிப் பாராட்டி, முதல் பக்கத்தில் பிரசுரித்து விடுவோம் என்று சொல்வான் என்று எதிர்பார்த்திருந்தேன். சரி. பரவாயில்லை. அவனுக்குத் தெரியாவிட்டால் போகட்டும். எப்படியும் ஆசிரியர் படித்துவிட்டு என்னைத் தேடி வருவார் என்று நினைத்தபடி வழிமேல் விழி வைத்துக் காத்திருந்தேன்.

இரண்டு நாட்களுக்குப் பிறகு 'எண்ணங்கள்' ஆசிரியர் என்னைப் பார்க்க விரும்புவதாக மாரீஸ் சொன்னான். உற்சாகமாக போனேன். அங்கே வித்யாஷங்கர் என்னைப் பார்த்துச் சிரித்தபடி என் தோளில் கையைப் போட்டு மென்மையாக, 'தம்பி, நீ எழுதியிருக்கிறது கவிதையில்லையே,' என்றார். அப்போதே கவிதைகள் நிரம்பிய என்னுடைய நோட்டுகள் என்னைச் சுற்றிக் கும்மியடிக்க ஆரம்பித்து விட்டன. அவர் கவிதையைப்பற்றி நிறையச் சொன்னார். எனக்கு அவர் பேசியது ஒரு அட்சரம்கூடப் புரியவில்லை. கடைசியில் அவர் தன் கையில் வைத்திருந்த 'மௌனத்தின் நாவுகள்' என்ற அபியின் கவிதைப் புத்தகத்தை என்னிடம் கொடுத்து படிக்கச் சொன்னார். அதற்குப் பிறகுதான் கலைகளின் அரசியான கவிதாதேவியை எவ்வளவு புண்ணாக்கியிருக்கிறேன் என்று எனக்குப் புரிந்தது. அந்தச் சமயத்தில் மட்டும் மாரீஸ் என்னிடம் கவிதை கேட்காமலோ, வித்யாஷங்கர் என்னைத் தேடிவந்து அபியின் கவிதை நூலைத் தராமலோ போயிருந்தால் என்னவாயிருக்கும் என்று ஒரு கணம் யோசித்துப் பார்க்கிறேன். உடல் நடுங்குகிறது. என் வீடு முழுவதும் நோட்டுகளில் நிரம்பிய கவிதைகள் நெருக்கடி தாளாமல் மூச்சுத் திணறி கூட்டம் கூட்டமாக செத்துப் போயிருக்கும். நானும் அவைகள் செத்தது தெரியாமல் புத்தகங்களாக அச்சிட்டு தமிழ்கூறு நல்லுலகத்தில் ஊர்வலம் போகச் செய்திருப்பேன்.

இப்படி ஆரம்பித்த இலக்கியப் பெரும்பயணத்தின் துவக்கத்திலிருந்து என்னை அரவணைத்தது இடதுசாரிகள்தான். அப்போது புரட்சிக்கு அணுவும் குறையாத கனவு இடதுசாரிகளிடம் தினசரி பூத்துக் கொண்டிருந்தது. நாங்கள் ருஷ்ய இலக்கியங்களையும், சீன இலக்கியங்களையும், வாசித்தோம். சோவியத்தின் சோசலிச இலக்கியக் கோட்பாடுகளைப் பற்றி விவாதித்தோம். தமிழில் முற்போக்கு இலக்கியப் படைப்புகளைப் படித்தோம். அந்த காலகட்டத்தில்தான் இலக்கியத்தில் இருக்கிற அரசியல் பற்றி எனக்குக் கொஞ்சம் கொஞ்சமாகப் புரியத் தொடங்கியது. கோவில்பட்டியிலேயே வேறு ஒரு இலக்கிய அணியும் இருப்பது தெரிய வந்தது. அவர்கள்தான் முதன்முதலில் க.நா.சு. என்ற பெயரை உச்சரித்தார்கள். உலகத்து சிறந்த நாவல்கள் குறித்த க.நா.சு.வின் புத்தகம் வாசிக்கக் கிடைத்தது. அந்த நாவல்களின் அறிமுகத்தில் வேறொரு உலகம் விரிந்தது.

நான் பழகிக் கொண்டிருந்த இடதுசாரிகளிடம் க.நா.சு.வைப் பற்றி கேட்டேன். அவர்கள் க.நா.சு. கலை கலைக்காக என்ற கொள்கைவாதி. அவர் ஒரு சி.ஐ.ஏ. ஏஜெண்ட். அதற்கான ஆதாரங்கள் இருக்கின்றன என்று சொன்னார்கள். நான் முதலில் நம்பினேன். பிறகும் நம்பினேன். ஆனால் இடதுசாரிகள் புதுமைப்பித்தனை அவநம்பிக்கைவாதியென்றும், பூமணியை பொலிஸ் இன்ஃபோர்மர் என்றும், கிராமஷியை ஐரோப்பிய குறுங்குழுவாத கம்யூனிஸ்ட் என்றும், புதுக்கவிதையை பெட்டி பூரஷ்வாக்களின் கலை வடிவமென்றும், வீதி நாடகங்களை தீவிரவாத வடிவமென்றும், ஒவ்வொன்றுக்கும், ஒவ்வொரு வருக்கும் ஒரு முத்திரை குத்தியபோது சந்தேகப்பட்டேன். இடதுசாரிகளின் தியாக உணர்வும், அர்ப்பணிப்பும், போராட்ட குணமும் மகத்தானது. இன்றும் எதிர்கால நம்பிக்கை அவர்கள்தான். அவர்கள் அரசியல், பொருளாதாரக் காரணிகளுக்குக் கொடுத்த முக்கியத்துவத்தை கலை, இலக்கிய, பண்பாட்டுக் காரணிகளுக்குக் கொடுக்காததனால் வந்த விளைவு இது என்று நினைத்தேன். அதனால் மாற்று கருத்துகளிடமிருந்து தங்களையும் தங்கள் ஆதரவாளர்களையும் பாதுகாத்துக் கொள்ள இந்த முத்திரைகளைப் பயன்படுத்தினர். இதை தங்களுடைய சொந்த தோழர்களிடமும் பயன்படுத்தினர் என்பது இன்னும் பெரிய சோகம்.

ஆனால் இதற்கு எதிராக உள்ளிருந்து பெரும் போராட்டம் நடந்தது என்பதும், உலகச்சூழல் மாறியதும் இடது சாரிகளின் வறண்ட பார்வை மாறுவதற்கு உதவின என்று நினைக்கிறேன்.

க.நா.சு. என்ற தனி மனிதர் இல்லையென்றால் தமிழ் இலக்கிய உலகத்துக்கு 'நிலவளம்' எழுதிய நட் ஹாம்சனைத் தெரிந்திருக்காது. 'அவமானச் சின்னம்' எழுதிய நதானியல் ஹாதர்னைத் தெரிந்திருக்காது. 'தாசியும் தபசியும்' எழுதிய அனடோல் பிரான்ஸைத் தெரிந்திருக்காது. 'மந்திரமலை' எழுதிய தோமஸ் மன்னைத் தெரிந்திருக்காது. 'சித்தார்த்தனை' எழுதிய ஹெர்மன் ஹெஸையைத் தெரிந்திருக்காது. 'விலங்குப் பண்ணை' எழுதிய ஜோர்ஜ் ஓர்வெல்லைத் தெரிந்திருக்காது. 'தேவமலர்' எழுதிய செல்மா லாகர்லவ்வைத் தெரிந்திருக்காது. இனனும் எட்கர் ஆலன்போவை, காஃப்காவை, சோல்ஸெனித்சனை, என்று உலக இலக்கியங்களை தமிழ் இலக்கியப் பரப்பில் பார்வைக்கு வைத்தவர். உலக இலக்கியவாதிகளை தமிழில் உலவவிட்டவர். நாங்கள் அவருடைய உலக இலக்கிய வரிசை நூல்களைத் தேடித்தேடிப் போட்டிபோட்டுக் கொண்டு படித்தோம். மிகப் பரந்த வாசிப்பும், மிகச் சிறந்தரசனையும் கொண்ட, இலக்கியத்துக் காகவே வாழ்ந்து தீர்த்த க.நா.சு.வை இங்ஙனம் செய்யும்படி எது இயக்கியது? கடைசி காலம் வரை அவருடைய ஒரே துணையான அந்த டைப்ரைட்டர் அவரிடம் என்ன சொல்லியிருக்கும்?. தன்னை விளம்பரப்படுத்தும் கலை நுட்பம் மலிந்த இன்றைய இலக்கிய உலகில் அவருடைய படைப்புகளின் மதிப்பீடு என்ன? காற்றில் அலையும் கேள்விகள்!

> சி.ஐ.ஏ. ஏஜெண்ட்தான் என்று நான் நம்பிய க.நா.சு, அமெரிக்க பத்திரிகையில் எழுதிய க.நா.சு., அமெரிக்க, ஐரோப்பிய இலக்கியங்களை மட்டுமே உயர்த்திப் பிடித்த க.நா.சு, ருஷ்ய, சோவியத் இலக்கியங்களைப் பற்றி பேசாத க.நா.சு, முற்போக்கு இலக்கியங்களை கலை வறட்சி மிகுந்த பிரசாரம் என்று ஒதுக்கித் தள்ளிய க.நா.சு, 1988 – ஆம் ஆண்டு எனக்கு நேரிடையாகவே ஒரு அதிர்ச்சியைத் தந்தார்.

'பொய்த்தேவு' என்ற அவருடைய நாவல் அன்று நான் முதலில் படித்த க.நா.சு.வின் படைப்பு. இப்போது யோசித்துப் பார்க்கும்போது தமிழில் அது முதல் இருத்தலியல் நாவலாக இருக்கலாம் என்று தோன்றுகிறது. சோமு என்ற மேட்டுத்தெரு ஜீவனின் வாழ்க்கைச் சித்திரம்தான் அந்த நாவல். சோமுவின் பரிணாம வளர்ச்சி எப்படியெல்லாம் அந்தந்த காலநேர சமய சந்தர்ப்பங்களுக்கேற்றபடி எல்லாம் மாறுகிறது என்பதை கவனிக்கும் போது அவன் வாழ்வில் எடுக்கும் ஒவ்வொரு முடிவுக்கும் பின்னால் எந்த தர்க்க நியாயமும் இல்லை என்றும் புரிகிறது. நாவல் வளரும் போது சோமுவின் வளர்ச்சியும் வாசகன் எதிர்பாராத திசைகளில் வளர்ந்து கொண்டே போகிறது.

சி.ஐ.ஏ. ஏஜெண்ட்தான் என்று நான் நம்பிய க.நா.சு, அமெரிக்க பத்திரிகையில் எழுதிய க.நா.சு., அமெரிக்க, ஐரோப்பிய இலக்கியங்களை மட்டுமே உயர்த்திப் பிடித்த க.நா.சு, ருஷ்ய, சோவியத் இலக்கியங்களைப் பற்றி பேசாத "க.நா.சு, முற்போக்கு இலக்கியங்களை கலை வறட்சி மிகுந்த பிரச்சாரம் என்று ஒதுக்கித் தள்ளிய க.நா.சு, எனக்கு நேரிடையாகவே ஒரு அதிர்ச்சியைத் தந்தார். 1988-ஆம் ஆண்டு என்னுடைய முதல் சிறுகதைத் தொகுதியான 'யாவர் வீட்டிலும்' வெளியானது. வெளியான ஒரு மாதத்திற்குள்ளாகவே தினமணியில் தமிழ்ச்சிறுகதை வளம் என்ற தலைப்பில் க.நா.சு. என்னுடைய சிறுகதைத் தொகுதி பற்றியும், கௌதம சித்தார்த்தன் எழுதிய 'மூன்றாவது சிருஷ்டி' என்ற சிறுகதைத் தொகுதி பற்றியும் பாராட்டி எழுதியிருந்தார். எப்படியிருக்கும் பாருங்கள்! என்னால் இன்னமும் நம்பவே முடியவில்லை. க.நா.சு. பற்றிய என்னுடைய பழைய மதிப்பீடுகள் தகர்ந்த தருணம் அது.

'தமிழிலக்கியத்தில் க.நா.சு. என்ற ஆளுமை மட்டும் இல்லாதிருந்தால் என்ன நடந்திருக்கும்?" என்ற கேள்விக்கு ஒரு நண்பர் பதில் சொன்னார், 'ஒரு ஐம்பது வருடங்கள் பின் தங்கியிருக்கும்'

நான் ஒரு தோழரிடம் க.நா.சு. எழுதிய கட்டுரையைப் படிக்கக் கொடுத்திருந்தேன். படித்து முடித்த அவர் தீவிரமான முகபாவத்துடன் அருகில் வந்தார். 'தோழர் ஜாக்கிரதையா இருங்க.. சி.ஐ.ஏ. உங்களை குறி வைச்சிட்டாங்க,' என்று சொல்லி விட்டுப் போனார்.

க.நா.சு.வின் சிரிப்புச் சத்தம் கேட்கிறதா உங்களுக்கு?.

# யாழ். விவசாயிகளுடன் விவசாய அமைச்சர் சந்திப்பு

(யாழ்.நிருபர்)

வடமாகாண விவசாய கமநலசேவைகள், கால்நடை அபிவிருத்தி மற்றும் நீர்ப்பாசன சுற்றாடல் துறை அமைச்சர் பொ. ஐங்கரநேசன் இன்று காலை 9.30 மணிக்கு விவசாயிகளைச் சந்திக்கவுள்ளார்.

திருநெல்வேலியில் உள்ள யாழ்.மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ள இச்சந்திப்பு தொடர்பாக கமக்காரர் அமைப்புக்கள், விதை உற்பத்தியாளர் சங்கங்கள் பழ உற்பத்தியாளர் சங்கங்கள், வாழைக்குலை உற்பத்தியாளர் விற்பனைக் கூட்டுறவுச்சங்கம் ஆகியவற்றின் தலைவர் செயலாளர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

யாழ் மாவட்டத்தில் உள்ள விவசாய சார் தேவைகள் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்வதற்காக குறிப்பிட்ட சங்கங்களின் பிரதிநிதிகள் உரிய நேரத்தில் இச்சந்திப்பில் கலந்து கொண்டு கலந்துரையாடலைப்பயனுள்ள வகையில் நடத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு பிரதி விவசாயப்பணிப்பாளர் கி.சிறிபாலசுந்தரம் வேண்டுகோள் விடுத்துள்ளார். (10)

# களை கட்டியது கசூரினா கடற்கரை

(யாழ்.நிருபர்)

காரைநகர் கசூரினா கடற்கரையில் அமைந்துள்ள சுற்றுலாமையத்திற்கு வருகைதரும் சுற்றுலாப்பயணிகளின் எண்ணிக்கை கடந்த வாரத்தில் என்றுமில்லாத அளவிற்கு அதிகரித்துக்காணப்பட்டது.

கடந்த 16ஆம் 18ஆம் திகதிகளில் அரச விடுமுறைதினங்கள் மற்றும் 19ஆம் 20ஆம்திகதி சனி, ஞாயிறு விடுமுறை தினங்களைப் பயன்படுத்தி பெருமளவிலான சுற்றுலாப்பயணிகள் வடபகுதிக்கு வருகை தந்திருந்தனர்.

நாட்டின் பல பாகங்களிலிருந்தும் வருகை தந்த இவர்கள் நல்லூர் கந்தசுவாமி கோவில், நயினாதீவுநாகபூஷணி அம்பாள் முதலிய ஆலயங்களுக்கும் கீரிமலை, கந்தரோடை புதைபொருளாய்வு மையம் மற்றும் சாட்டி, கசூரினாசுற்றுலா மையம் என்பவற்றிற்கு வந்து சென்றுள்ளனர்.(10)

## தொழில் முயற்சிக்கு உற்சாகம் தரும் நிதி முகாமைத்துவ சேவை வடக்கு மக்களுக்கு வாய்ப்பு

DFCC BANK

அபிவிருத்தி வங்கியான DFCC தனது நடவடிக்கைகளை 1956ஆம் ஆண்டிலிருந்து முன்னெடுத்து வருகின்றது.இது வர்த்தகர் சமூகத்தினருக்கு பெறுமதி மிக்க சேவையை வழங்கிய நீண்டதும் வெற்றிகரமானதுமான பயணமொன்றாகும். வெறுமனே ஒரு நிதிவழங்குநராக மட்டுமன்றி சிறிய மற்றும் நடுத்தர அளவுடைய வர்த்தக முயற்சிகளை பெரும் வர்த்தக நிலையங்களாக வளர்ந்து விட்ட கடந்த கால வரலாற்றையும் இந்த வங்கி கொண்டுள்ளது.

காலப்பகுதி ஒன்றில் வங்கியானது நாட்டின் சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில் நிறுவனங்களின் உள்ளக செயற்திறன்களை விருத்தி செய்வதற்கான செயற்திட்டமொன்றினை முன்னெடுத்து வந்தது. வங்கியின் கிளை வலையமைப்பினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த இப்பணித்திட்டம் குறிப்பாக வெளியூர்களின் சுமார் 8300 சிறிய நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு பெரும் பயன்களை ஈட்டித் தந்தது. சிறிய நடுத்தர நிறுவனங்கள், முக்கியமாக வெளியூர்களில் பொருளாதார வளர்ச்சி சமூக அபிவிருத்தி, வறுமை ஒழிப்பு என்பவற்றில் பெரும் பயன்களை ஈட்டித்தரும் ஒரு பிரிவு ஆகும்.

DFCC யின் நீண்டகால உறுதிப்பாடானது நிதி வழங்கலுக்கு அப்பாலும் சென்று இத்துறையை அபிவிருத்தி செய்வதாகும். சிறிய நடுத்தர நிறுவனங்களுக்கு குறிப்பாக வெளியூர்களில்செயற்படும் நிறுவனங்களுக்கு சேவை புரிவதற்கென அர்ப்பணம் மிக்க துறைசார் நிபுணர்களை கொண்டபிரிவொன்றினை வங்கி 1988இல் ஆரம்பித்திருந்தது. அதன் பின்னர் வங்கியினால் உதவப்படும் குறித்த நிறுவனங்களுடன் நெருக்கமான உறவுகளை பேணும் பொருட்டும் தொழிற்துறைக்காக தனிஇயல்புகளை வளர்க்கும் பொருட்டுமே முக்கிய மாகாணங்களின் நகரங்களில் பிரிவின் கிளைகளையும் தொடக்கி வைத்தது. தொழில் முயற்சியாளர்கள் DFCC வங்கியினை வெறுமனே வங்கியாளர்களாக்க மட்டும் கருதாமல் எமது வங்கியின் அதிகாரிகளின் ஆலோசனைகள் வழிகாட்டல்களை பெரும் மதிப்புடன் ஏற்றுக்கொண்டனர். அத்தகைய உறவு நிலைகள் இன்றும் தொடர்வதுடன் அந்தந்த வர்த்தக நிறுவனங்கள் சிறப்புடன் வளர்ந்து நிலைபெற்றுள்ளதையும் வங்கி பெருமையுடன் நோக்குகிறது. எனவே, வங்கியின் வாடிக்கை நிறுவனங்களுடனான ஈடுபாடானது கடன் வழங்குவதற்கு அப்பாலும் ஆழமாக செல்கிறது. என்று கூறுவது பொருத்தமானதாகும்.

யுத்தத்திற்கு முந்திய காலத்தில் மிகவும் சிறப்பான தொழில் முயற்சியாளர்கள் சிலர் வடக்கு, கிழக்கிலிருந்து வந்தவர்களாக இருந்தனர் அக்காலத்தில் DFCC வங்கியின் சேவைகள் அப்பகுதிகளின் முயற்சியாளர்களுக்கு கிடைத்தன. இப்பொழுது மீண்டும் DFCC வங்கி தனது அன்றாட வங்கிச் சேவைக்காக வர்தன வங்கியுடனும் இணைந்து வடக்கு கிழக்கின் பிரதான நகரங்களில் பன்னிரெண்டு கிளைகளையும் நான்கு சேவை நிலையங்களையும் திறந்து சிறிய நடுத்தர நிறுவனங்களுக்கு மீள உயிர்ப்பூட்டுவதில் ஈடுபட்டுள்ளது. DFCC வங்கியின் கிளைகள் சிறிய நடுத்தர நிறுவனங்களின் தேவைகளை நன்கு புரிந்து கொள்ளக்கூடிய அதிகாரிகளை கொண்டு இயங்குகின்றன.

ஆண்டுகள் பலவற்றிற்கு சாதாரணமான ஒரு இயக்கத்தை மட்டும் கொண்டிருந்த நிறுவனங்க ளின் நிர்வாகத்தினரின் மனோநிலைகளை தொழில்சார் நிபுணத்துவங்களின் பால் ஈர்த்து அதன் வழியே பெரிய சவாலினை வெல்வதற்கு DFCC வங்கி பாடுபடுகின்றது. வெற்றிக்கான பாதை இலகுவானதன்று. இத்துறையில் ஒரு தொழில் முயற்சியில் இறங்கவிருப்பவர் கடந்து செல்ல வேண்டிய தடைகள் ஏராளம் சிறிய நடுத்தர நிறுவனங்களை பொறுத்த வரையில் யதார்த்த சூழலைப் புரிந்து கொள்ளுதல், பொருத்தமான தீர்வுகளை வழங்குதல், நெருக்கமான வழிகாட்டல்கள் என்பன இன்றியமையாதவை . ஆரம்பத்தில் வர்த்தகத்தின் பிரதான செயற்பரப்புகளின் போதுமான பயிற்சியை பெறுதல் அவசியம்.

வடக்கு கிழக்கில் வங்கி கருத்தரங்குகள், பயிற்சிப்பட்டறைகள் என்பவற்றை கிரமமான முறையில் நடாத்தி வந்தது. ஆரம்பத்தில் செயலூக்கம் மற்றும் தலைமைத்துவம் பற்றியும் தொடர்ந்து தொழில் முயற்சியின் அடிப்படைகள், வர்த்தக வளர்ச்சியில் அவற்றின் பிரயோகம் நிறுவன கட்டமைப்பும் நிதிமுகாமைத்துவமும் பாதீடு, கிரயத்தினை கட்டுப்படுத்தல், விலையிடல் செயன்முறைநிதிக்கூற்றுக்களைப்பகுப்பாய்வு செய்தல்), திறன்கள் விற்பனை, மாற்றங்களை முகாமைப்படுத் தல், விரிமதிப்பீடு என்பன பற்றியும் பயிற்சிப் பட்டறைகள் நடாத்தப்பட்டன.

வங்கியின் நிகழ்ச்சி திட்டங்கள், இலாபகரமான வர்த்தக நடவடிக்கைகளை விளைவிப்பதற்கு உதவக்கூடிய கருத்துக்களை கொண்டிருக்கக் கூடிய பலபிரிவினரையும் கவரக்கூடியதாக அமைந்தது. நிகழ்ச்சித்திட்டங்கள் ஆர்வமூட்டும் வகையில் வழங்கப்பட்டன. நாட்டின் ஏனைய பகுதிகளைச் சேர்ந்த வெற்றிகரமான தொழில் முயற்சியாளர்கள் கருத்தரங்குக்கு அழைக்கப்பட்டிருந்தனர். கருத்தரங்குகளில் பொதுமக்களும் கலந்து கொள்ள அனுமதிக்கப்பட்டதுடன் கட்டணங்கள் அறவிடப்படவில்லை. கடன் அதிகாரிகளால் இலவச ஆலோசனைகளும் வழங்கப்பட்டன.

சிறிய நடுத்தர முயற்சிகள் பொதுவாகவே தாக்குப்பிடிப்பதில் சிக்கல்களை எதிர்கொள்ள கூடியன. வர்த்தக வழிப்படுத்துகை, முறையற்ற முகாமைத்துவம், உபாயத்திட்ட வகுப்பு போன்றனவற்றில்குறைபாடுகள் காரணமாக பாதிப்புகளுக்கு உள்ளாகும். வாய்ப்புக்கள் கொண்டவை. இலாபத்தை அளவிட்டு செயற்படுத்துவற்கு ஏற்ற கண்க்கீட்டு பதிவுகள் அவசியம் இவை போன்ற காரணங்களால் நிலைத்த தன்மை பாதிப்புக்கு உள்ளாகும். வாய்ப்பு அதிகம்.

எனவே எமது முயற்சிகளால் பல சிறிய, நடுத்தர நிறுவனங்கள் பாரிய நிறுவனங்களாக இன்று உருவெடுத்துள்ளன. துணை நிறுவனமான வர்தன வங்கியுடன் கூட்டாக செயற்படும் DFCC வங்கி நிதிசார்ந்த உதவிகளுடன் ஏனைய இணைந்த சேவைகளையும் தமது 133 கிளைகள் கொண்டவலையமைப்பினூடாக வங்கி சிறியு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் நிலைத்த தன்மைக்கு உறுதிப்பாட்டினை வழங்குகின்றோம். என்றும் மேற்படி வங்கியின் முதுநிலை முகாமையாளர் தெரிவித்தார். (54)

# வேலை வாய்ப்புச் செய்திகள்

இலங்கையில் அனைத்துப் பிரதேசங்களிலும் இணைத்துக் கொள்ளப்படுவீர்கள் எம்மிடம் பல வெற்றிடங்கள் ஆண், பெண் இருபாலருக்கும் பிரதான தொழிற்சாலைகளான ஜேம்,பிஸ்கட், காபன், அலுமினியம், பால்மா, யோகட், சொசேஜஸ் புத்தகம் போன்ற தயாரிப்புக்கள் உற்பத்தி. பொதியிடல் பிரிவுக்கு தேவை. (வயது 17-50) வயதினர்) தொடர்புக்கு 0770224156.

---

இந்தியாவிலிருந்து வந்திருக்கும் சிறிய தமிழ் குடும்பத்தினருக்கு பணிப்பெண் தேவை. தொடர்புக்கு 0113288333, 0729533679.

---

டாக்டர் ஒருவருக்கு குறைந்தது 50 வயதுக்கு மேற்பட்ட 10 வருட அனுபவமுள்ள கார் சாரதி தேவை. மாதச் சம்சளம் 20 ஆயிரம் ரூபா தொடர்புக்கு 0112433325.

---

சர்வதேச புகழ்பெற்ற பாதுகாப்பு நிறுவனத்துக்கு ஆண்,பெண், பாதுகாப்பு உத்தியோகஸ்தர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர். வயது 18-65 வரை 0.T யுடன் சம்பளம் 23500-35000 வரை Bank Hospital Hotel Airport Horbour,School vip வீடுகள் காரியாலயங்கள் ஆகிய இடங்களுக்கு வெற்றிடங்கள் உண்டு. தமிழில் தொடர்பு கொள்ளவும் தொடர்புக்கு 0778835567.

---

20 வயதிற்கு மேற்பட்ட வீட்டுப் பணிப்பெண் தேவை தொடர்புக்கு 0777764915.

---

இருபாலாருக்கும் நிதி ஆலோசகர் மற்றும் விற்பனை மேற்பார்வையாளருக்கான வெற்றிடம் முன்னணி நிதி நிறுவனம் ஒன்றில் போதுமான அளவுக்கு வருமானத்தை ஈட்டிக்கொள்ளக்கூடியது. தகமை கணிதம் உட்பட 6 பாடம் சித்தி தொடர்புக்கு 0777490444.

---

இலங்கையில் முன்னணி வாய்ந்த 200இற்கு மேற்பட்ட தொழிற்சாலைகளில் 1000இற்கு மேற்பட்ட வெற்றிடங்கள் இன்றே பதிவுக்கு முந்துங்கள் மாத வருமானமாக 18 ஆயிரம் 38ஆயிரம் வரை ஜேம், கோடியில், சோயா, நூடில்ஸ் Brush.,Printing காமென்ட், பிளாஸ்டிக் மெட்ரஸ், சப்பாத்து போத்தல், டயர் சவர்க்காரம் போத்தல், டயர், சொக்லேட் Paint Seat. எல்மட் Tile, சீமெந்து கார் போட் பிரிவுக்கு தயாரிப்பு, பொதியிடல் ioading unloading Delieung க்கு ஆண், பெண் தேவை. சாப்பாடு, தங்குமிடம் வசதி செய்து கொடுக்கப்படும் தொடர்புக்கு 0778430179.

---

ஓரளவு சிங்களம் தெரிந்த தமிழ்பெண்வீட்டுவேலைக்கு தேவை. தொடர்புக்கு 0757281696.

---

அலுவலகம், பாடசாலை ஸ்டேசனரி பொருட்கள் இறக்குமதி கம்பனிக்கு ஓடர்ஸ் எடுப்பதற்கு 45 வயதுக்கு குறைந்த வேலையாட்கள் தேவை. பெட்டா கடைகளில் 2 வருடங்கள் இத்துறையில் வேலை செய்த அனுபவமுள்ள யாழ்ப்பாணம், வவுனியா, பாதைகளில் பரிச்சயம் உள்ளவர் தேவை. சம்பளம் 20 ஆயிரம் அத்துடன் கமிஷன் தொடர்புக்கு 0112348721.

---

ஜேம், பிஸ்கட், பால்மா உற்பத்தி நிறுவனங்களுக்கு ஆண், பெண் இணைத்துக் கொள்ளப்படுவர் தொடர்புக்கு 0774283019, 0717929917.

---

தனியார் சேவையில் உயர் பதவியிலிருந்து ஓய்வு பெற்ற 60 வயது நிரம்பியவர் பொருத்தமான வேலை தேடுகிறார். இவர் கணனி அனுபவமும் கடிதத்தொடர்புகள் தன்னிச்சையாக செய்யக்கூடிய திறனும் உடையவர் மும்மொழிகளும் நன்கு பேசக்கூடியவர் தொடர்புக்கு 0756874052.

---

துறைமுகம் விமானநிலையம், வேறு நிறுவனங்களுக்கு வெல்டர் சாரதி, மேசன், பாதுகாப்பு அதிகாரிகள் ஆண், பெண் இருபாலாரும் தேவை. 50,ஆயிரம் பெறலாம் உணவு, தங்குமிடம் இலவசம். 0779909604, 0813759903.

---

மட்டக்களப்பில் உள்ள உணவகத்திற்கு உணவு பரிமாற ஆண்கள் (வயது - 18 - 25) தேவை, உணவு தங்குமிடம் வழங்கப்படும் தொடர்புக்கு 0771140359.

# பொலிஸ் அதிகாரிகள் சொத்து குவிப்பு இரகசியம் அறிய விசாரணை ஆரம்பம்

(கொழும்பு)

பொலிஸ் அதிகாரிகள் தீடீரென கோடீஸ்வரர்களாகும் மர்மம் என்ன என்பது குறித்து துரித விசாரணை ஒன்றை நடாத்துவதற்கு அரசு இப்போது திட்டமிட்டுள்ளது. அண்மையில் பெரும் எண்ணிக்கையிலான பொலிஸ் உத்தியோகத்தர்கள் திடீரென பாரியளவு செல்வந்தர்களாக மாறியுள்ளனர்.

இது தொடர்பில் சட்டம் ஒழுங்கு அமைச்சு விசாரணைகளை ஆரம்பித்து ள்ளது.ஊழல் மோசடிகளில் ஈடுபட்டு குறித்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் பணம் சம்பாதித்துள்ளனர்.

குற்றச் செயல்களில் ஈடுபட்டமை குறித்து விசாரணைகள் மூலம் கண்டறியப்பட்டால், உடனடியாக அவர்கள் பணி நீக்கம் செய்யப்படுவார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சாதாரண சம்பளத்திற்கு பொலிஸ் சேவையில் இணைந்து கொண்ட உத்தியோகத்தர்கள் பஸ், கடைகள் உள்ளிட்ட பல்வேறு சொத்துக்களுக்கு சொந்தக்காரர்களாக மாறியுள்ளனர். இவர்கள் குறுகிய காலத்தில் எவ்வாறு செல்வந்தர்களாக மாறினார்கள் என்பது குறித்து பொலிஸ் திணைக்களத்திலும் சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# புகையிரத இணைப்பு சேவை இடை நிறுத்தப்படும் அபாயம்

(யாழ்.நிருபர்)

பருத்தித்துறை- கிளிநொச்சி புகையிரத இணைப்பு பேருந்து சேவை போதியளவு பயணிகள் இன்மையால் இடைநிறுத்தப் படவுள்ளதாக பருத்தித்துறை இ.போ.ச. சாலை முகாமையாளா எஸ்.கந்தசாமி தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் இருந்து கொழும்புக்கு இடம்பெறும் கடுகதி ரயில் மற்றும் தபால் புகையிரத சேவைகளுக்கென பருத்தித்துறையில் இருந்து கிளிநொச்சி புகையிரத நிலையம் வரை பேருந்து சேவை நடத்தப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் இச்சேவைகளை முன்னெடுப்பதில் போதியளவு பயணிகள் இல்லாததால் எந்த நேரமும் இச்சேவை இடை நிறுத்தப்படலாம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (10)

# டீசல் நிரப்புனரை தாக்கிய பேருந்து சாரதி பணி நீக்கம்

இலங்கை போக்குவரத்து சபை பருத்தித்துறை சாலையில் பேருந்து டீசல் நிரப்புபவர் பேருந்து சாரதியால் தாக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது, பருத்தித்துறை சாலையில் கடந்த வியாழக்கிழமை இரவு பேருந்து ஒன்றுக்கு டீசல் நிரப்பியபோது. நிரப்பிய அளவினைவிட கூடிய கணக்கினை நிரப்புனர் பதிவில் பதிந்தார். எனக் கூறி குறித்த பேருந்தின் சாரதி நிரப்புனருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளார்.

இந்த வாக்குவாதம் முற்றி கைகலப்பாக மாறி பேருந்து சாரதி டீசல் குழாயினால் நிரப்புவரின் தலையில் தாக்கினார். இதில் காயமடைந்த டீசல் நிரப்புவரான ஐ.குகந்தன்(வயது-50) என்பவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். இது தொடர்பாக பருத்தித்துறைச் சாலை முகாமையாளரைத் தொடர்பு கொண்டு கேட்டபொழுது பேருந்துக்கு டீசல் கணக்குப் பதிவதில் குளறுபடிகள் இடம்பெற்றமை தொடர்பாக விசாரணைகள் மேற்கொண்டு உரியவர்களுக்கு தகுந்த தண்டணை அளிக்கப்படவுள்ளதோடு விசாரணை முடியும் வரையும் குறித்த சாரதியினை தற்காலிகமாக பணிநீக்கம் செய்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த விடயம் பருத்தித்துறை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதையடுத்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# அழகியல் போட்டிகள் மாணவர்களுக்கிடையில்

(யாழ்.நிருபர்)

யாழ்ப்பாணம் கல்வி வலயத்தின் ஏற்பாட்டில் பாடசாலை மாணவர்களுக்கிடையிலான அழகியற் போட்டிகள் நடைபெறவுள்ளன.

இவ்அழகியற் போட்டிகளில் யாழ்ப்பாணம் நல்லூர் மற்றும் கோப்பாய்க் கோட்டமட்டப் போட்டிகள் எதிர்வரும் 26ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணி முதல் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

கோட்டமட்டப் போட்டிகளில் முதல் இரண்டு இடங்களைப் பெறும் வெற்றியாளர்களுக்கான வலயமட்டப் போட்டி எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ். இ[illegible] மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

இப்போட்டிகள் தரம் 10, 11 மற்றும் 12, 13 என இரு பிரிவாக சங்கீதம், நடனம் மற்றும் சித்திரம் ஆகிய பாடங்களில் நடைபெறவுள்ளதாக யாழ்.கல்விவலய பிரதிக்கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (10)

## பரமர் சங்கமம்



"மக்கள் சக்தி மகோன்னதசக்தி" எனச் சொல்லிய தீர்க்க தரிசனக்கூற்று மற்றுமொரு தடவை நிரூபிக்கப்பட்டுள்ளது.

அதாவது நடந்து முடிந்த வட மாகாணசபைத் தேர்தலில் மக்களின் ஒன்றுபட்ட எழுச்சியை தேர்தல் முடிவுகள் பட்டவர்த்தனமாக எடுத்தியம்பியுள்ளது. தேர்தல் வரலாற்றில் என்றைக்குமே நடந்திராத விதத்தில் அரசு மற்றும் அரசு சார்புக் கூட்டணிக் கட்சிகள் ஒன்றிணைந்து பணத்தை பெருமளவில் கொட்டிச் செலவு செய்து பிரசாரக் கூட்டங்களை நடத்தியதுடன் அக் காலங்களில் வடபகுதியில் பல வேலைத்திட்டங்களையும் செய்திருந்தனர்.

பத்திரிகை விளம்பரங்கள், துண்டுப்பிரசுரங்கள், சுவரொட்டிகளில் கோடிகள் புரண்டு எழும்பின. சட்டத்தரணிகள் சட்டவிரோதமான முறைகளில் பிரசாரங்களை மேற்கொண்டிருந்தனர்.

எனினும் யாழ்– மாவட்டத்தில் இரண்டே இரண்டு பிரதிநிதிகளையும், வடமாகாணம் அடங்கிலும் ஆறே ஆறு உறுப்பினர்களையுந்தான் வென்றெடுக்க முடிந்திருந்தது. இதனால் தானோ என்னவோ புரட்சிகர மாவோஸ்டுகள் கூட மக்கள் புரட்சி வெடிக்கட்டும் எனக் கோஷம் போட்டனர்.

அவ்வகையில் மக்களின் ஆணை மகத்தான ஒன்றாக மதிக்கப்படுகின்றது. 30 வருடகாலமாக அரசுடன் எதிர்வினை புரிந்த புலிகள் இயக்கச் செயற்பாடுகளையேமக்களே வழிநடத்தி வந்ததும் மறந்து விடமுடியாத ஒன்று.

அக்காலங்களில் புலிகள் சிந்தித்தே இருந்திராத படை முகாம்களை தாக்குவதற்கான ஆணை மக்களிடம் இருந்தே கசிந்து அவர்களை வழிநடத்தி இருந்ததை அதிகமான அரசியல் விமர்சகர்கள் குறிப்பிடுவார்கள். ஆகவே தான் 3 தசாப்தகாலங்கள் புள்ளடி இடுவதில் நம்பிக்கை விட்டிருந்த மக்கள் அறுபது சதத்திற்கும் மேற்பட்ட விழுக்காட்டை வாக்களிப்பில் தெரிவித்துள்ளனர்.

இதனிடையே மக்கள் எதிரில் வருவதற்கு முன்பாக இழுபறிப்பட்டு இடங்களைப் பெற்றுக் கொண்டவர்கள் மக்களது தெரிவின் பின்பாகவும் பதவிப்பிரமாணம் செய்து கொண்டதும் உலகெங்கும் நடந்திராத புதுமையாகவே நடந்து முடிந்துள்ளது. யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வை விட்டு வட்டுக்கோட்டை. முள்ளிவாய்க்கால் முதலமைச்சரின் கொழும்பு வாசஸ்தலம் எனப் பதவிப்பிரமாணம் நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் நடந்தேறியதும் விந்தையன்றோ? சர்வதேசம் தேர்தலில் நடைமுறையை மட்டுமா பார்த்துக் கொண்டிருக்கும்; கூட்டமைப்பின் கூத்துக்களையும் தானே!

வடமாகாணசபைத் தேர்தலில் தமிழர் தோல்வி அடைந்த இனமாக இல்லை என்பதை நிரூபித்து விட்டமை அரசு முள்ளிவாய்க்காலில் பெற்றிருந்த வெற்றியை ஒருபுறம் தள்ளி விட்டதென்றால் மிகையில்லை. அதனாலேயே அரச தரப்பில் இருந்து நல்ல சில சமிஞ்சைகள் கிடைத்து வருகின்றன. "காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்ளவேண்டும்"என்பதற்கேற்ப தமிழ் மக்களின் ஆணையைப் பெற்றுள்ள தமிழ்த் தேசிய கூட்டமைப்பு ஆட்சி, அதிகாரங்களை "வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவது போல்" செயல்பட்டு கொண்டு நடத்தவேண்டும். இல்லையேல் தமிழ்மக்கள் இவர்களையும் ஓரங்கட்டுவதற்கு காலங்கள் காத்திருக்கும் மகோன்னத சக்தியாக மாறக்கூடும், இல்லையே பின்னை சொல்லுங்க பாப்பம்.......

# "இவன் தான் மனிதன்" சிறுகதை வெளியீடு

(யாழ்.நிருபர்)

சூசை எட்வேட்டின் 'இவர் தான் மனிதன் என்னும் சிறுகதை நூல் வெளியீட்டு விழா அண்மையில் திருகோணமலை நகரசபை மண்டபத்தில் நீங்களும் எழுதலாம் வாசகர் வட்டத்தின் ஏற்பாட்டில் எஸ் ஆர். தனபாலசிங்கம் தலை மையில் நடைபெற்ற இந்நிக ழ்வில் நூலின் அறிமுக வுரையை கவிஞர் சுசீலா ஞானராசா வழங்கினார்.

கவிஞர் ஷெல்லிதாசன் நூலின் மதீப்பீட்டுரையை வழங்கினார். நூலின்முதற்பிரதி சிரேஷ்ட சட்டத்தரணியும் இலக்கிய ஆர்வலருமான ஆ.ஜெகசோதிக்கு வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் க. பகிரதன் வரவேற்புரை நிகழ்த்த ச.திருச்செந்தூரன் நன்றி நவின்றார். நூலாசிரியர் சூசை எட்வெட் ஏற்புரை வழங்கினார். (10)

# மாகாணசபை முறையை ஒழிக்க கோரும் பிரதமர்

மாகாணசபை முறைமையை இல்லாதொழிக்க வேண்டுமென பிரதமர் டி. எம்.ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

மாகாணசபையை நடத்துவதற்கு பெரும் தொகைப் பணம் செலவாகுவதாகவும் ஆனால் இதன் மூலம் எதிர்பார்ப்பார்க்கும் பலனை பெற்றுக்கொள்ள முடிவதில்லையெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தேர்தலுக்கு செலவாகும் பணத்தில் மக்கள் நலன் தொடர்பிலான விடயங்களை மேற் கொள்ள முடியுமெனவும் அ[illegible] சுட்டிக்காட்டியுள்ளார்.

மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்துவதற்கும் அரசு பெருந்தொகையான பணத்தை செலவிடுவதாகவும் அதே போல் தேர்தலில் களமிறங்கும் வேட்பாளர்களும் பெருந்தொகையில் பணத்தை செலவிடுவதாகவும் பிரதமர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# வர்த்தக வங்கியின் சலுகைத் திட்டம்

## வாகனங்கள் கொள்வனவுக்கு வாய்ப்பு

(யாழ்.நிருபர்)

வாகனங்கள் மற்றும் உபகரணங்கள் வாங்குவதற்கு கவர்ச்சிகரமானதோர் தெரிவு முறையாக லீசிங் முறையை ஊக்குவிக்கும் வகையில் கொமர்ஷல் வங்கி 2013 ஒக்ரோபர் மாதத்தை லீசிங் மாதமாக மீண்டும் பிரகடனம் செய்துள்ளது.

2011 இல் முதல் தடவையாக இந்தத் திட்டம் அமுல் செய்யப்பட்டபோது கிடைக்கப்பெற்ற பெறுபேறுகளைக் கருத்திற் கொண்டு கொமர்ஷல் வங்கி மிகக்குறைவான குத்தகைத் தொகை, வ்ாடிக்கையாளர்களுக்கான சிறந்த காப்புறுதித் திட்டம் என்பவற்றை உள்ளடக்கிய பல நன்மைகளைக் கொண்டதாக இந்தத்திட்டத்தை அமுல் செய்யவுள்ளது.

நாடு முழுவதிலுமுள்ள கொமர்ஷல் வங்கிக் கிளைகளில் இந்த மாதகாலப்பகுதியில் குத்தகைத் திட்டத்தில் இணைந்து கொள்பவர்கள் இந்த நன்மைகளை அனுபவிக்கமுடியும்.

ஒக்ரோபர் மாதத்தில் புத்தம் புதிய அல்லது மீள்புதுப்பிக்கப்பட்ட வாகனங்களுக்கான குத்தகைகளைப் பெற்றுக்கொள்பவர்கள் ஒரு இலட்சம் ரூபாவுக்கு 2350 ரூபாவை மட்டுமே லீசிங்காக செலுத்தவேண்டியிருக்கும்.

இதன்மூலம் ஐந்தாண்டு காலப்பகுதியில் கணிசமான தொகையைச் சேமிக்கக்கூடியதாக இருக்கும் என்றும் இதற்கு மேலதிகமாக இந்த மாத காலப்பகுதியில் வாகனங்களுக்கும் உபகரணங்களுக்கும் குத்தகை பெற்றுக் கொள்பவர்களுக்கு விசேட காப்புறுதிச் கட்டண வசதிகளும் செய்து கொடுக்கப்படுமென வங்கி அறிவித்துள்ளது. (10)

தமிழ்மொழியும் இலக்கியமும்

# க.பொ.த.(சாதாரணதர) மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

# கல்வி முரசு

32 | T | I

Grade - 11

**01 - 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் சரியானதும் மிகப் பொருத்தமானதுமான விடையைத் தெரிவு செய்க.**

1) "பெருந்தடங்கட் பிறை நுதலார்க்கெலாம்..." என்பதில் வந்த "நுதல்" என்பதன் பொருள்
1) வதனம் 2) தாமரை
3) தவளை 4) நெற்றி

2) "காவலரைத் தன் சேடி காட்டக் கண்டீரிருவர்..." என்பதில் வந்த "சேடி" என்பதன் ஒத்தசொல்
1) தோழி 2) போர்வீரன்
3) சேவகன் 4) வண்ணமகள்

3) "......கொண்டானின் துன்னிய கேளிர் பிறரில்லை...." இதில் வந்த "கேளிர்" என்பதன் ஒத்தசொல்
1) தெய்வம் 2) உறவினர்
3) பகைவர் 4) அரசன்

4) "ஊழி திரண்டதோ கங்குல்...." என்பதில் வந்த "கங்குல்" என்பதன் எதிர்ப்பதம்
1) உலகம் 2) திங்கள்
3) பகல் 4) இரவு

5) "ஒட்டக் கூத்தர் மீது குலோத்துங்கன் நம்பிக்கை கொண்டிருந்தான்" இதிலுள்ள "நம்பிக்கை" என்பதன் எதிர்ச்சொல்
1) தும்பிக்கை 2) அவநம்பிக்கை
3) நாணயம் 4) கோரிக்கை

6) "விதவைகள் ஒன்று கூடி சங்கம் அமைத்தனர்" இதில் வந்த "விதவை" என்பதன் எதிர்ப்பாற்சொல்
1) பாணன் 2) நிபுணன்
3) தனயன் 4) தபுதாரன்

7) "காளமேகம் ஒரு இசை இரசிகனாவான்" இதில் வந்த "இரசிகன்" என்ற வடசொல்லுக்குரிய தமிழ்ச்சொல்
1) சுவைஞன் 2) கலைஞன்
3) காலன் 4) பாடகன்

8) "ஒரே சமயத்தில் பதினாறு விடயங்களை அவதானிக்கும் ஆற்றலுடையவன்" என்ற தொடர்மொழிக்குரிய ஒரு சொல்
1) சதாவதானி 2) அட்டாவதனி
3) சோடசாவதானி 4) தசாவதானி

9) "உயிர் துறக்கும் துணிவுடன் வடதிசையை நோக்கி ஊணின்றி இருத்தல்" என்பதன் ஒரு மொழி
1) வடக்கிருத்தல் 2) மானியம்
3) ஏகபோகம் 4) பிதிர்க்கடன்

10) "ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம்" ஆகியவற்றின் தொகைச்சொல்
1) நான்கு உபாயம் 2) நான்மறை
3) நாற்பயன் 4) நாற்கவி

11) "ஐந்து பணத்துக்கு குதிரையும் வேண்டும் அது ஆறு கடக்கப் பாயவும் வேண்டும்" என்ற பழமொழியால் உணர்த்தப்படுவது
1) பணவலிமை 2) பேராசை
3) வறுமையின் செம்மை 4) முயற்சி

12) "குடிப்பது கூழ் கொப்பழிப்பது பன்னீர்" என்ற பழமொழியின் கருத்தைத் தரும் பிறிதொரு பழமொழி
1) அப்பன் அருமை மாண்டால் தெரியும்
2) ஆடு கொழுக்கிறது இடையனுக்கு இலாபம்
3) பேச்சுப் பல்லிக்கு தம்பி கால்நடை
4) இமைக் குற்றம் கண்ணுக்குத் தெரியாது

13) "மாசிலாப்பூங்குழலாள் மற்றவரைக் காணாநின்று" என்பதில் வந்த "பூங்குழலாள்" என்பது
1) இருபெயரொட்டுப் பண்புத்தொகை
2) வேற்றுமைத் தொகை
3) 2 ஆம் வேற்றுமைத்தொகை புறத்தே பிறந்த அன்மொழித்தொகை
4) வேற்றுமைத் தொடர்

14) "கண்மணி கண்வளர்ந்தாள்" இதில் வந்த கண்வளர்தல் என்ற மரபுத்தொடரின் பொருள்
1) நித்திரை செய்தல் 2) பருவமடைதல்
3) அழகுண்டாதல் 4) களைப்படைதல்

15) "கல்வியில் பெரியன் கம்பன்" என்பதில் உள்ள வேற்றுமைப் பொருள்
1) இடப்பொருள் 2) எல்லைப்பொருள்
3) ஏதுப்பொருள் 4) ஒப்புப்பொருள்

16) "இலங்கை ஒரு ஜனநாயக சோசலிச குடியரசாகும் என்பது
1) கலப்பு வாக்கியம் 2) தனி வாக்கியம்
3) வினா வாக்கியம் 4) செப்பு வாக்கியம்

17) பின்வருவனவற்றுள் ஆக்கப்பெயர் அல்லாதது
1) அறிவியல் 2) மருத்துவம்
3) ஆசிரியர் 4) கொடையாளி

18) பின்வருவனவற்றுள் இயல்புப் புணர்ச்சியாக அமைவது
1) நூலகம் 2) பாற்கடல்
3) பைந்தமிழ் 4) மரமேசை

19) தமிழில் மொழிக்கு முதலில் வரத்தக்க எழுத்துக்களின் எண்ணிக்கை
1) 22 2) 102
3) 216 4) 30

20) பின்வருவனவற்றுள் கூட்டொலியமைப்புடைய எழுத்துக்கள்
1) ஓ, ஆ 2) உ, ஊ
3) ஐ, ஔ 4) ஏ, ஈ

21) கீழ் உள்ளவற்றுள் புறச்சுட்டுக்கு உதாரணமாக அமையாதது
1) இவன் 2) அம்மலர்
3) இக்குதிரை 4) உப்பிள்ளை

22) சொல்லின் முதலிலும் இறுதியிலும் வரத்தக்க வினா எழுத்து
1) எ 2) ஆ
3) யா 4) ஏ

23) "தூமம் கால்வன வீரன் சுடுசரம்" என்பதில் வந்த சுடுசரம்
1) உவமைத்தொகை 2) பண்புத்தொகை
3) அன்மொழித்தொகை 4) வினைத்தொகை

24) பின்வருவனவற்றுள் பெயராகவும் வினையாகவும் வழங்காத சொல்
1) நரி 2) ஆள்
3) எண் 4) மதி

25) கீழுள்ள உவமைத்தொடர்களுள் மாறுபாடான பொருளைத் தருவது
1) பாசிமூடிய பவளத்தின் நிறம்
2) கூடை கவிழ்ந்த விளக்கின் ஒளி
3) குன்றின் மேல் வைத்த தீபம்
4) முத்துச் சிப்பியில் உள்ள முத்தின் ஒளி

26) பின்வருவனவற்றுள் திணை வழுவமைதிக்கு உதாரணமாக அமைவது
1) நாயார் வந்தார்
2) இரு கண்ணுஞ்சிவந்தது
3) இவன் ஆண்மையில்லாப் பெண்
4) தங்கள் வரவு நல்வரவாகுக

27) "மன்னன் அந்தப்புரம் புக்கான்" இதில் வந்த புக்கான் என்ற சொல்லின் காலம் உணர்த்துவது
1) இடைநிலை 2) விகுதி
3) பகுதி 4) சாரியை

28) "மன்னர் விழித்தாமரை பூத்த மண்டபம்" என்பதில் இடம்பெற்றுள்ள அணி
1) உவமை 2) உருவகம்
3) தன்மை நவிற்சி 4) தற்குறிப்பேற்றம்

29) ஐ, ஒ, ஔ ஆகிய எழுத்துக்களின் இன எழுத்துக்கள் முறையே அமைந்த தொகுதி
1) ஓ, ஒ, ஈ 2) ஆ, ஓ, உ
3) எ, ஈ, ஊ 4) இ, ஓ, உ

30) பின்வருவனவற்றுள் நான்காம் வேற்றுமை சொல்லுரு அல்லாதது
1) கொண்டு 2) பொருட்டு
3) நிமித்தம் 4) ஆக

**பின்வரும் வாக்கியங்களில் புள்ளிக்கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க**

31. இந்தோனேசியாவில் ஏற்பட்ட .................................. கரையோர மக்கள் பலரது உயிர்களைக் காவுகொண்டது.
1) கால்கோள் 2) கடல்கோள்
3) எடுகோள் 4) ஊர்கோள்

32. குலோத்துங்க சோழனின் புகழ் .................................. எங்கும் பரவியது
1) ஆண்டி முதல் அரசன் வரை 2) உணர்மொழி காலம்
3) வெள்ளிடைமலை 4) குமரிமுதல் இமயம் வரை

33. சேர மன்னவன் வீதியுலா வருகிறார் என .................................. பொதுமக்களுக்கு அறிவித்தான்
1) நாடகன் 2) கூத்தன்
3) கட்டியக்காரன் 4) நிபுணன்

34. மருந்தே .................................. விருந்தோடு உண்
1) ஒழிய 2) இருந்தாலும்
3) ஆனால் 4) ஆயினும்

35. வேட்பாளர்கள் தேர்தல் காலங்களில் .................................. எல்லாம் நுளைந்து வாக்குக் கேட்பாகள்
1) பட்டி தொட்டி 2) வீடுவாசல்
3) குளம் குட்டை 4) தோட்டம்துரவு

**பிறமொழிக் கலப்பற்ற வாக்கியத்தை இனங்காண்க**

36. 1) அனுஜன் கும்பாபிஷேகத்துக்குப் போனான்
2) ரமேஸ் அலுமாரிக்குள் பொருட்களை வைத்தான்
3) இலக்கியன் கவிதை பாடினான்
4) பரந்தாமன் கலண்டர் வாங்கினான்

37. 1) அத்தர் வாசனை மூக்கைத் துளைத்தது
2) பாண் விலை அதிகரிப்பை கண்டித்து ஆர்ப்பாட்டம் நடைபெற்றது
3) காணாப்பாடகனை பொலிஸ் கைது செய்தது.
4) விண்மீன்கள் ஒளி வீசின

**எழுத்துப்பிழைகளற்ற வாக்கியத்தை இனங்காணுங்கள்.**

38) 1) பெண்கள் மொட்டாக்கிட்டுச் சென்றார்கள்
2) அவன் இப்ப மெத்தக் கெட்டுப் போனான்
3) சிறுகதை என்பது ஓர் உரைநடை ஆக்க இலக்கியம்
4) கண்ணன் கூட்டத்துக்கு சமூகமளிக்கவில்லை

39. 1) நான் என் வீட்டைப் பனையோலையால் மேய்ந்தேன்.
2) அவனுடைய குடும்பி குலைந்து விட்டது.
3) எங்களூரில் மூன்று பண்டசாலைகள் உள்ளன.
4) ஆராச்சி இல்லாத படிப்பு அதிக பயனைத் தராது

40 கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்குபடுத்தினால் கட்டுக்கோப்பான பந்தி உருவாகும். அதற்கான சரியான வைப்பு முறையைத் தெரிவு செய்க.

அ) கல்லூரிகளிலும் நகரங்களிலும், ஊர்களிலும் ஒவ்வோர் நூல் நிலையம் விளங்க வேண்டும்
ஆ) உயர்ந்தாற்றான் மக்களினம் மாட்சி மிக்கதாகும்.
இ) கல்விக்குத் துணையான நூல்நிலையங்களும் யாண்டும் செவ்வையுற அமைந்து
ஈ) இவ்வித விளக்கம் உள்ள நாடுதான் அறிவிலும் பண்பாட்டிலும் மேம்பட்ட நாடு என்று அழைக்கப்படும்.
உ) கால்கள் நான்கும் நேராக அமைந்தாற்றான் நாற்காலி நேராக நிற்கும்.

1) இ, ஆ, அ, ஈ, உ 2) உ, எ, அ, ஆ, இ
3) அ, உ, ஆ, ஈ, உ 4) உ, இ, ஆ, அ, ஈ

## தமிழ்மொழியும் இலக்கியமும் II

**01. பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை தருக**

1) சுவரொட்டி ஆக்கத்தின்போது கவனிக்கவேண்டிய இரண்டு விடயங்களைக் குறிப்பிடுக.

2) உரையாடலில் ஈடுபடுவதன் மூலம் ஏற்படத்தக்க நன்மைகள் இரண்டினை எழுதுக

3) செவ்வி காண்பவரிடம் இருக்கத்தக்க முக்கியமான தகைமைகள் இரண்டினைக் குறிப்பிடுக.

4) வில்லுப்பாட்டுக்கு வழங்கத்தக்க மறுபெயர்கள் எவை?

5) வியங்கோள் வினை விகுதிகள் எவை?

6) சினை அடிப்படையில் பிறந்த குறிப்பு வினைக்கு இரண்டு உதாரணம் தருக

7) விழுந்திலன் என்ற சொல்லை ஆக்க உறுப்புகளாகப் பிரித்துக் காட்டுக.

8) "சோணாடு" என்ற மரூஉ வழக்கின் இயல்பு வழக்கினை எழுதுக.

9) இடுகுறிப்பெயர் என்றால் என்ன?

10) இலக்கியன் மிகச் சிறந்த மேடைப் பேச்சாளர்
அவர் எனது நண்பர்
இவ் வாக்கியங்களைக் கூட்டு வாக்கியமாக்குக.

**02 பின்வருவனவற்றுள் ஒன்று பற்றி 250 சொற்களில் அமையுமாறு எழுதுக.**

1) மனிதனது நாளாந்த நடவடிக்கைகளில் தொடர்பாடல் மிகவும் முக்கியமான தாகும். ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கோ ஒருவரிடமிருந்து இன்னொரு வருக்கோ தகவல்கள் கடத்தப்படும்போது தொடர்பாடல் பண்புகளை பின்பற்றுவது அவசியமாகும். பண்டைக் காலங்களில் ஓலைகள், தூதுவர்கள், புறாக்கள் மூலமாக செய்திகள் அனுப்பப்பட்டன. "அதன் பின்னர் கடிதம், தந்தி, தொலைப் பிரதி, தொலைபேசி, வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகை, சுவரொட்டி, கணினி வலையமைப்பு என்பன தொடர்பாடலுக்குப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. தகவல் தொடர்பு சாதனங்களின் துரிதவளர்ச்சியினால் அதீத நன்மைகள் இருக்கும். அதேநேரம் பல தீங்குகளும் உள்ளமையை அவதானிக்க முடிகிறது. எனவே இக் கருத்துக்களை விளக்கும் வகையில் ஒரு கட்டுரை.

2) நமக்கு என்றும் இனியவர் தாய் தந்தையரே. அவர்களை விடச் சிறந்தவர் நமக்கு யாருமில்லை. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம், தாயிற் சிறந்த கோவில் இல்லை. தந்தை சொல் மிக்க மந்திரமில்லை என்றெல்லாம் முன்னோர் கூறிய முதுமொழிகள் இவ்வுண்மையைப் புலப்படுத்தும். ஆனால் முதுமைக் காலத்தில் தாய் தந்தையரை பராமரிக்காதிருக்கும் மனிதர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். இக் கருத்துக்களை விளக்கும் வகையில் பொது அரங்கொன்றில் நீர் ஆற்றும் சொற்பொழிவு.

3) தமிழ்மொழி மிகவும் தொன்மையானது. தமிழர்கள் தம் தாய்மொழியை மிக அருமையாகப் போற்றி வந்தனர். தம்பிள்ளைகளுக்கு தமிழ் மரபினை வெளிப்படுத்தும் பெயர்களைச் சூட்டி பண்பாட்டுக்கு இலக்கணமாக வாழ்ந்தனர். ஆனால், காலத்தின் போக்குக்கு ஏற்ப தமிழ்மொழியும் தூய்மையிழந்து தவிக்கிறது. தமிழர்களாக வாழ்வோர் தமக்குச் சூட்டும் பெயர்களுக்கு பொருள் தேடினும் புலப்படாத வகையில் எங்கும் எதிலும் அன்னிய மோகம் சூழ்ந்து கொண்டுள்ளது. இவ்விடயத்தைக் கருவாகக் கொண்டு மொழிப் பற்றாளர்க ளுக்கிடையே நடைபெறும் உரையாடல்.

4) தொலைக்காட்சியில் சுவாரசியமாக இடம்பெற்றுக் கொண்டிருந்த "பாட்டும் பரதமும்" நிகழ்ச்சியை பார்த்துக் கொண்டிருந்த ஆரணியின் மனம் கல்லாகக் கனத்தது. போரினால் இடம்பெற்ற செல் தாக்குதலில் தன் வலது காலை இழப்பதற்கு முன்னர் பல மேடைகளில் பாராட்டுப் பெற்ற ஆரணி இன்று ஏதிலியாய் ஆதரவின்றி, தனிமையில் கூடிழந்த பறவையாகி..... இதனைத் தொடர்ந்து இடம்பெறும் விடயங்களை விளக்கி ஒரு சிறுகதை

**03. கீழே தரப்பட்டுள்ள உரைப்பகுதியை வாசித்து அதன் சாராம்சத்தை மூன்றில் ஒரு பகுதியாகச் சுருக்கி எழுதுக.**

மாடுகளைக் கொண்டு எண்ணெய் ஆட்டலாம். கவலை இறைக்கலாம். ஆனால் அடிமைகள் ஏராளமாக இருக்கும் பொழுது மாடுகள் எதற்கு? இந்தக் கொடுமைகளை இழைத்தாலும் அவர்களைத் திருத்தும் நோக்கம் இருக்குமானால் பாதகமில்லை. ஆனால் அந்த நோக்கம் மட்டும் கிடையாதென்பது மட்டுமன்று, கைதிகளை எந்தவிதத்திலும் திருத்த முடியாது என்பதே சகல சிறை அதிகாரிகளும் மேற்கொண்டுள்ள கொள்கையாகும். கைதிகளின் ஆன்மாவை விழிக்கச் செய்யவோ அல்லது அவர்களுடைய உயர்ந்த உணர்ச்சிகளைப் பயன்படுத்தவோ எவ்வித முயற்சியும் செய்யப்படுவதில்லை. கைதிகளுக்கு ஆன்மாவோ உயர்ந்த உணர்ச்சிகளோ உண்டு என்று யாரும் நம்புவதாகத் தெரியவில்லை. எவ்வளவு குறைவாக உணவு கொடுக்கலாமோ அவ்வளவு குறைவாகக் கொடுத்து எவ்வளவு அதிகமாக வேலை வாங்கலாமோ அவ்வளவு அதிகமாக வாங்கும் சிறைச் சாலையை, அதனாலே தான் அடிமைகளை வைத்து வேலை வாங்கும் ஒரு யந்திரசாலை என்று கூறுகிறோம். அடிமைகளைச் சொந்தமாக வாங்காமல் குறிப்பிட்ட காலத்துக்கு வாடகைக்கே பிடிக்கிறார்கள். அதனாலே தான் அவர்களுடைய ஆரோக்கியத்தைப் பற்றியும் ஒழுக்கத்தைப் பற்றியும் சிந்திப்ப தில்லை. முதலாளியினுடைய சேமத்துக்கு வேண்டிய அளவு ஆரோக்கியமும் ஒழுக்கமும் இருந்தால் போதும் என்றே எண்ணுகிறார்கள். தவறுகள் செய்தால் தண்டிக்கிறார்களேயன்றித் திருத்துவதில்லை. திருத்தும் வேலை கஷ்டமானது சீக்கிரமாகவும் பயன் தராது. ஆகவே கைதிகள் அடிமைகளாகவும், அதிகாரிகள் அடிமைகளை வேலை வாங்குகிறவர்களாகவும் இருக்கிறார்கள். இத்தகைய நிலையில் எப்படி அவர்கள் சீர்திருத்தம் அடைய முடியும்?

**04. கீழே தரப்பட்டுள்ள உரைப்பகுதியை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

அப்பொழுது தான் பனிக்காலம் முடிவடைந்தது. பனியின் கொடுமையால் வாடிய மக்கள் வேனிலின் வரவை எதிர்பார்த்தனர். சோலையெங்கணும் வசந்தனை வரவேற்பதுபோல் மரங்களும், செடிகளும் வண்ண மலர்களைக் கொத்துக் கொத்தாகத் தாங்கி நின்றன தடாகத்திலுள்ள தாமரையும் அல்லியும் மலர் முகம் காட்டி மகிழ்ந்திருந்தன. முல்லையும், மல்லிகையும் பல்லைக்காட்டி மெல்ல மருட்டுவன போன்றன. தேமாவும் வாழையும் தீம்பழங்களைப் பரிசிலாக ஏந்தி நின்றன. தென்றல் செல்வன் மன்னர் மகளிரைப் போல் மெல்ல நடந்தான். அதைக் கண்ட அன்னங்கள் ஆனந்தங் கொண்டன. போல் அணிநடை பயின்றன. வெண்கதிர்ச்செல்வன் தெள்ளிய பால் நிலவை அள்ளி வீசினான். காதற் செல்வர் காலம் இது என இருவர் இருவராய்க் கைபிரியாது உலவினர். மாநிலமெங்கும் கழிபேருவகையோடு உளமிக்கூர, வசந்தன் என்னும் மணம் புணர் வேந்தனது ஆட்சிக்காலம் தொடங்கியது.

1) வேனில் காலத்தில் நிகழும் இயற்கை மாறுதல்கள் எவை?

2) மேற்கண்ட பந்தியிலுள்ள உவமைகளைக் குறிப்பிடுக.

3) இங்கு, வசந்தன், வேனில் எனக் குறிப்பிடப்படுவது யாது?

4) தென்றல் செல்வன், வெண்கதிர்செல்வன் ஆகியவற்றால் நீர் விளங்கிக்கொள்வது யாது?

5) உரைப்பகுதியிலுள்ள உரிச்சொல்லினை இனங்காட்டி விளக்குக.

05. வீதி புனரமைக்கப்படாமையாலும் போக்குவரத்துச் சேவை சீரின்மையாலும் மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைச் சுட்டிக்காட்டி பத்திரிகை ஒன்றுக்கு கடிதம் எழுதுக.

**பின்வரும் வினாக்களுக்கு சுருக்கமான விடை எழுதுக.**

1) "ஊருணி நீர் நிறைந்தற்றே உலகவாம் பேரறிவாளன் திரு" இக்குறட்பாவை கொண்டு கூட்டி எழுதுக.

2) முத்தொள்ளாயிரச் செய்யுட்கள் எந்நூலில் திரட்டித் தரப்பட்டுள்ளன?

3) "குறித்த நேரத்தைச் சற்றுக் கடந்தாலும் என் உயிர் துடித்துப் போய்விடும் என்று உனக்குத் தெரியாதா?" இக் கூற்று யாரால் யாருக்கும் கூறப்பட்டது?

4) "மஞ்சம் அஞ்சும் கை...." எனும் பாடலில் அஞ்சும் என்ற சொல் எவ்வெப் பொருளில் பயன்படுத்தப்படுகிறது?

5) கசாப்புக்காரன் சந்நியாசிக்குக் கூறிய உபதேசங்கள் எந்நூலாக உருப் பெற்றது?

6) மீன்பிடிகாரர் பாடலில் ஆசிரியர் எதனை விளக்க முற்படுகின்றார்?

7) ஒண்ணும் இருக்காது நமக்கேன் அப்படியெல்லாம் வராது? நாம் ஒருத்தருக் கும் ஒண்ணும் கெடுதல் எண்ணல்லே" இக் கூற்றில் வெளிப்படுத்தப்படும் மனவுணர்வு யாது?

8) "காலப் பெருநதியின் கால்நடையும் அப்படித்தான்..." இங்கு காலப் பெருநதி என்பதில் கையாளப்பட்டுள்ள அணி யாது?

9) கலித்துறைக்கோவை என்னும் நூலை இயற்றியவர் யார்?

10) நிழலின் நினைவு எனும் கவிதையில் கையாளப்பட்டுள்ள குறியீட்டுச் சொற்கள் எவை?

11) யாருடைய வாழ்க்கை நிலைப்பாட்டைக் கூறுவதனூடாக ஆசிரியர் மீனவத் தொழிலின் சிறப்பை விளக்குகின்றார்?

12) "ஐயனே நாம் இருவரும் கானகம் சென்றது முதல் இதுவரையும் நிகழ்ந்த செயல்களைப் பார்த்தாயா?" இக்கூற்று யாரால் யாருக்கும் கூறப்பட்டது?

13) "கைப்புடி லேஞ்சி கண்டு எங்கள்ளமனம் துள்ளுதையா...." எனும் பாடலடியில் பெண்ணின் எம்மனவுணர்வு வெளிப்படுத்தப்படுகிறது?

14) கடற்புறம் எனும் கவிதையின் ஆசிரியர் யார்? இது எக்கவிதைத் தொகுதி யில் இடம் பெறுகிறது?

15) ஒரு பதிவிரதையின் சரித்திரம் எனும் கதையினூடாக நீர் அறிந்து கொண்ட படிப்பினைகள் இரண்டு தருக?

# நிகழ்வுகளின் பதிவுகள்....





கரவெட்டி பிரதேச செயலகத்தின் சர்வதேச சிறுவர் முதியோர் தின நிகழ்வின் பதிவுகள்... (116)




கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலகப் பிரிவின் சர்வதேச முதியோர், மாற்றுவலுவுடையோர் தின நிகழ்வு அண்மையில் இடம்பெற்றபோது.... (எஸ்.பி.)



அச்சுவேலி இராணுவத்தினரால் பொதுமக்களின் தேவைகளுக்காக வர்த்தக நிலையம் திறந்து வைக்கப்பட்டது. (15)



கரவெட்டி தெற்கு மேற்கு பிரதேச சபை மண்டபத்தில் நடைபெற்ற முன்பள்ளி ஆசிரியர்தின விழாவின் பதிவு.... (18)



பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலத்தில் இடம்பெற்ற பரிசளிப்பு விழாவின் போது... (66)




கிளிநொச்சி செஞ்சிலுவைச்சங்கத்தொண்டர்களால் நடத்தப்பட்ட முதலுதவி பயிற்சி ஒத்திகை நிகழ்வு... (90)




பாழ். இந்துக் கல்லூரியின் ஆசிரியர்தின நிகழ்வின் பதிவு....



உலக உளநலநாள் நிகழ்வு அண்மையில் யாழ். இந்துமகளிர் கல்லூரியில் நடைபெற்றபோது....

# விலை போகாத மனிதர் மோடி

## சுதர்சன நாச்சியப்பன் கூறுகிறார்



குஜராத் மாநிலத்தில் விலை போகமுடியாமல் தான் பல்வேறு மாநிலங்களில் தம்மை விளம்பரப்படுத்தி வருவதாக நரேந்திர மோடி மீது மத்திய அமைச்சர் சுதர்சன நாச்சியப்பன் கடுமையாக சாடியுள்ளார். அவரது பேச்சை வேடிக்கை மட்டுமே பார்க்க வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

சென்னை வர்த்தக மையத்தில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்ட பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய சுதர்சன நாச்சியப்பன்,

பாஜக பிரதமர் வேட்பாளரான நரேந்திர மோடி, தமது சொந்த மாநிலத்தில் கூட விலை போகாத மனிதராக இருக்கிறார். பிரச்சாரம் என்ற பெயரில் பல்வேறு மாநிலங்களில் தமக்கு விளம்பரம் தேடிக்கொள்கிறார். அவரது பேச்சை யாரும் பொருட்படுத்தக் கூடாது. வேடிக்கை மட்டுமே பார்க்க வேண்டும். எந்த மாநிலங்களில் சென்று தனது பிரச்சாரத்தை மேற்கொண்டாலும், மோடி மீது மக்களுக்கு நம்பிக்கை ஏற்படாது என்றார்.

## மாணவர்களுக்கு எச்சரிக்கை

## 21 போலி பல்கலைக்கழகங்கள்

இந்தியாவில், 21 போலி பல்கலைக்கழகங்கள் கண்டறியப்பட்டுள்ளதாக, பல்கலைகழக மானியக்குழு அறிவித்துள்ளது. பல்கலை மானியக்குழு விதிகளின்படி, மத்திய, மாநில அரசால் நிறுவப்பட்டுள்ள பல்கலைகள் மட்டுமே, யுனிவர்சிட்டி என்ற வார்த்தையை பயன்படுத்த வேண்டும்.

வேறு எந்த கல்வி நிறுவனமும், யுனிவர்சிட்டி என்ற வார்த்தையை பயன்படுத்தி, இளங்கலை, முதுகலை பட்டப் படிப்புகளை நடத்தி, அதற்கென பட்டங்களை வழங்குவது, யு.ஜி.சி., சட்ட விதியின்படி, தடை செய்யப்பட்டுள்ளது. மீறும் கல்வி நிறுவனங்கள் மீது, இந்திய தண்டனை சட்டம் பாயும் எனவும், அது எச்சரித்துள்ளது.

இந்தியா முழுவதும், யு.ஜி.சி., சார்பில், நடத்தப்பட்ட ஆய்வில், 21 பல்கலைகள் போலியானது என, கண்டறியப்பட்டு, அதன் அதிகார பூர்வ வெப்சைட்டில் வெளியிடப்பட்டுள்ளது.

உத்தரபிரதேசத்தில் 9, டில்லி 5, பீகார், கர்நாடகா, கேரளா, மத்திய பிரதேசம், மகாராஷ்டிரா, மேற்கு வங்கம், தமிழ்நாடு ஆகியவற்றில், தலா ஒன்று என, போலி பல்கலைகள் கண்டறியப்பட்டு உள்ளன. மாணவர்கள் இதில் சேர்ந்து ஏமாற வேண்டாம் எனவும் எச்சரித்துள்ளது.

உலகச் செய்திகள்

## தர வரிசையின் கீழ் நோக்கிசெல்லும் இந்திய விமான நிலையங்கள்



2013ஆம் ஆண்டின் உலக அளவில் மிகமோசமான விமான நிலையங்ளின் வரிசையில் கொல்கத்தா, சென்னை, மும்பை விமான நிலையங்கள் உள்ளதாக ஒரு கணக்கெடுப்பு தெரிவிக்கிறது. இதுகுறித்து சமீபத்தில் ஒன்லைன் கணக்கெடுப்பு ஒன்று நடத்தப்பட்டது.

இந்தகணக்கெடுப்பில் இஸ்லாமாபாத் விமன நிலையத்தையும் சேர்த்து மிக மோசமான விமானநிலையங்களாக கொல்கத்தா, சென்னை, மும்பை விமான நிலையங்களும் இடம்பெற்றுள்ளது என கூறப்படுகிறது. மேலும் கொல்கத்தாவின் நேதாஜி சுபா' சந்திரபோஸ் விமான நிலையம் 3ஆவது இடத்திலும் இஸ்லாமாபாத் விமான நிலையம் 4 ஆவது இடத்திலும் மும்பை சத்ரபதி சர்வதேச விமான நிலையம் 8ஆவது இடத்திலும் சென்னை சர்வதேச விமான நிலையம் 6 ஆவது இடத்திலும் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இணையதளம் நடத்திய கணக்கெடுப்பில் விமான நிலையத்தின் வசதி, தூய்மை, வாடிக்கையாளர் சேவை,. மகிழ்ச்சி போன்ற கேள்விகள் முன்வைக்கப்பட்டு அதன் அடிப்படையில் இந்த கணக்கெடுப்பு வெளியிடுப்பட்டுள்ளது.

## 30இலட்சம் தொன் சீனி எரிந்தது அதிகரிக்குமா சீனி விலை?

பிரேசிலீல், சீனி கிடங்கில் நேற்று முன்தினம் நிகழ்ந்த பாரிய தீ விபத்தில், 3 இலட்சம் தொன் சீனி தீக்கிரையானது. இது குறித்து அந்நாட்டு அரசு அதிகாரி கூறுகையில், "சான் டோஸ் துறைமுகத்தில் உள்ள மிகப்பெரிய சீனி உற்பத்தி மைய கிடங்கில் இந்த விபத்து நேரிட்டது. விற்பனை மையத்தில் கன்வேயர் பெல்ட்டில் தீப்பொறி ஏற்பட்டு வெடித்துச் சிதறியதில் அத்துடன் இணைக்கப்பட்டிருந்த 6 விற்பனை மையங்களிலும் தீ பரவியது. கடும் போராட்டத்துக்குப் பின் தீ கட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. இச்சம்பவத்தின் போது, அங்கு பணியில் ஈடுபட்டிருந்த 4 தொழிலாளர்கள் காயம் அடைந்தனர். விற்பனை மைய அறைகள் பெரும் சேதமடைந்தன என்றார்.

இந்த தீ விபத்து காரணமாக



ஊக வணிகத்தில், ஓராண்டுக்கு சர்க்கரை விலை 6 சதவீதம் உயரும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

## இரகசியம் காக்க தயாரில்லை சுவிஸ் வங்கி தீர்மானம்



சுவிஸ் வங்கியில் பணத்தை பதுக்கி வைத்திருக்கும் வெளிநாட்டவர்களின் விபரங்களை, சம்மந்தப்பட்ட நாட்டு அரசுகளுக்கு தெரிவிக்கும் முடிவு ஒன்றை எடுத்துள்ளது சுவிட்சலாந்து. சுவிட்சலாந்தில் பணம் பதுக்கி வைத்திருப்பவர்கள் பற்றிய விபரங்கள் மொத்தம் 58 நாடுகளுடன் பகிர்ந்து கொள்ளப்படவுள்ளன.

அந்த 58 நாடுகளில், இந்தியாவும் ஒன்று என்பதுதான், நம்மூர் கோடீஸ்வரர்களை கதிகலங்க வைக்கும் விஷயம்! (ஆனால், அதிலும் ஒரு கேட்ச் உண்டு)

வெளிநாடுகளில் கணக்கு காட்டாமல், சுவிட்சலாந்து நாட்டில் பணம் சேர்த்து வைத்திருப்போர் பற்றிய விபரங்களை சம்மந்தப்பட்ட நாடுகள் கேட்பதும், சுவிட்சலாந்து மறுப்பதும் அடிக்கடி நடந்து வந்தன. இந்த நிலையில் சுவிஸ் அரசு, OECD-d; (Organisation for Economic Cooperation and Development) பண விபரங்களை பகிர்ந்து கொள்ளும் திட்டம் ஒன்றை ஏற்றுக் கொண்டு, கையெழுத்திட்டுள்ளது. Mutual Administrative Assistance in Tax Matters என்பதே அந்த திட்டம்.

மொத்தம் 58 நாடுகள் இந்த திட்டத்தில் இணைந்துள்ளன. அந்தந்த நாடுகளில் கணக்கு காட்டாமல் வரி ஏய்ப்பு செய்துவிட்டு வெளிநாட்டில் பணம் பதுக்கும் நபர்கள் பற்றிய விபரங்கள், இந்த 58 நாட்டு அரசுகளிடையே பகிர்ந்து கொள்ளப்படும்.

இதுவரைக்கும் நல்ல சேதிதான். ஆனால், இதில் உள்ள கேட்ச் என்ன தெரியுமா?

இந்திய மத்திய அரசு விபரம் கேட்டால்தான் சுவிஸ் தகவல் தரும். டில்லியில் இருந்து கேள்வி போகாவிட்டால், சுவிஸில் இருந்து பதில் வராது!

## கோட்டையில் தங்கப்புதையல் சாமியார் தரும் அதிர்ச்சி

உத்தர பிரதேசத்தில், மற்றொரு கோட்டையிலும், தங்கம் உள்ளதாகவும், இதன் மூலம், 2,500 தொன் வரை தங்கம் கிடைக்கும், என, ஷோபன் சாமியார் தெரிவித்துள்ளார். உன்னாவ் மாவட்டத்தில், தாண்டியா கேரா கிராமத்தில், 19ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த, கோட்டை உள்ளது. ஆங்கிலேயர்கள், இந்தியாவை ஆண்டபோது, இப்பகுதியில், குறுநில மன்னராக இருந்தவர், ராஜா ராவ் ராம் பக்ஸ் சிங். இவர், ஜான்சி ராணி, லட்சுமி பாயுடன் இணைந்து, ஆங்கிலேயர்களுக்கு எதிராக, கலகம் செய்ததால், 1857ஆம் ஆண்டு தூக்கிலிடப்பட்டார்.

"ராஜா ராவ் ராம் பக்ஸ் சிங், தாண்டியா கேரா கிராமத்தில் உள்ள கோட்டையில், 1,000 தொன் தங்கத்தை புதைத்து வைத்துள்ளார். அதை அவர், என் கனவில் வந்து சொன்னார்" என, ஷோபன் சர்கார் என்ற சாமியார், சில வாரங்களுக்கு முன், பிரதமருக்கு கடிதம் எழுதியிருந்தார். அந்தப் பகுதியில் பிரபலமான ஷோபன் சர்கார் சாமியார் இவ்வாறு சொன்னதால், உன்னாவ் கோட்டையில், தங்கம் இருக்கிறதா என, ஆய்வு செய்ய, மத்திய அரசு, தொல்பொருள் துறைக்கு உத்தரவிட்டது. தொல்பொருள் துறையினர் மேற்கொண்ட ஆரம்ப கட்ட விசாரணையில், "கோட்டையை சுற்றி பூமிக்கடியில், ஏதோ உலோகம் இருக்க வாய்ப்பு உள்ளது" என, தெரிவித்தது.

இதையடுத்து, உன்னாவ் கோட்டையை, அகழ்வாராய்ச்சி செய்ய, மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது. இதையடுத்து, தாண்டியா கேரா கிராமத்தில், கடந்த வெள்ளி தொல்பொருள் துறை அதிகாரிகள், கோட்டையை சுற்றி பள்ளம் தோண்டும் பணியை துவங்கினர். அகழ்வாராய்ச்சி பணி காரணமாக, அப்பகுதிக்குள், பொதுமக்கள் நுழைய தடை விதிக்கப்பட்டுள்ளது. நேற்று வரை, 30 சதுர அடிக்கு பள்ளம் தோண்டப்பட்டுள்ளது. 20க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள், பள்ளம் தோண்டி கொண்டிருக்கின்றனர். இதுவரை புதையலுக்கான எந்த தடயமும் கிடைக்கவில்லை.

## விடுதலை பெற்ற கைதிகள் தீவிரவாத குழுவில் இணைவு

பாகிஸ்தானில் பல்வேறு வழக்குகளில் கைது செய்யப்பட்டு போதிய ஆதாரமின்றி 2007ஆம் ஆண்டு முதல் நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்ட சுமார் 2000 பேரில் 722 பேர் மீண்டும் தீவிரவாதக் குழுக்களில் இணைந்துள்ளதாக அதிர்ச்சியூட்டும் தகவல் வெளியாகியுள்ளது.

இதுதொடர்பாக வெளியாகி உள்ள பத்திரிகை செய்தியில், தீவிரவாதிகள் என சந்தேகப்படும் குற்றவாளிகளில் நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்ட 1,964 பேரில் 722 பேர் மீண்டும் தீவிரவாத குழுக்களில் இணைந்துள்ளதாகவும், எஞ்சிய 1,197 பேர் அரசுக்கு எதிரான செயல்களில் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மனித மூளையை சுத்தம் செய்ய வழிபிறந்துள்ளது இப்போது

அதிக நேரம் தூங்குவது உடல் நலத்துக்கு மிகவும் நல்லது என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். அமெரிக்காவின் ரோசெஸ்டர் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானி மைகென் நெதர் கார்டு தலைமையிலான குழுவினர் மனிதர்கள் தூங்குவது ஏன்? என்பது குறித்து ஆய்வு மேற்கொண்டனர்.

அதில், நன்றாக தூங்கும் போது தான் மூளை சுத்தம் செய்யப்படுவது கண்டறியப்பட்டது. தூங்கும போது பெருமூளையின் தண்டு வட திரவம் மூளையை சுற்றி பீச்சி அடிக்கப்படுகிறது.

அப்போது மூளைக்கு வெளிப்புறம் படிந்திருக்கும் மூலக்கூறுகளின் சிதைந்த பொருட்களும், நச்சு புரோட்டீன் களும் அப்புறப்படுத்தப்படுகின்றன. இதனால் உடல் நலத்திற்கு கெடுதல் ஏற்படாமல் பாதுகாக்கப்படுகிறது.



இந்த ஆய்வுக்கு விஞ்ஞானி மைகென் நெதர் கார்டு குழுவினர் சுண்டெலிகளை பயன்படுத்தியது குறிப்பிடத்தக்கது.

# இரு மொழிக் கொள்கை அமுல்; பாடசாலை மட்டத்தில் நடவடிக்கை

பாடசாலை மாணவர்களுக்கு இடையில் விவாத போட்டிகளை நடத்தி அதன் மூலம் இரு மொழிக் கொள்கையினை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என அரச கருமமொழிகள் ஆணைக்குழுவின் தலைவர் நிமல்.ஆர். ரணவக்க தெரிவித்துள்ளார்.

அரச மொழிக் கொள்கைத் திட்டத்தினை வட மாகாணத்தில் அமுல்படுத்துவது தொடர்பான ஊடகவியலாளர்கள் மாநாடு நேற்று முன்தினம் இடம்பெற்றது. இந்த மாநாட்டில் அரச கரும மொழிகள் ஆணைக்குழுவின் நிர்வாக அதிகாரி ஏ.எம்.ஜீ.யு. அபேகோன், யாழ்ப்பாண பல்கலைக்கழக முன்னாள் உபவேந்தர் பி. பாலசுந்தரம்பிள்ளை உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

இதன்போதே நிமால்.ஆர். ரணவக்க மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர்,

நாடளாவிய ரீதியில் 72 பிரதேச செயலகங்களில் இரு மொழிக்கொள்கை நடைமுறையிலுள்ளதுடன், வர்த்தமானியில் 42 பிரதேச செயலகங்களின் பெயர்கள் வெளியிடப்பட்டது.

வடமாகாணத்தில் இரு மொழிக் கொள்கையினை நடைமுறைப்படுத்துவதற்கு 4 சிங்கள மாணவர்கள் மற்றும் 4 தமிழ் மாணவர்கள் என பாடசாலை ரீதியாக தெரிவு செய்து அவர்களுக்கிடையில் விவாதப் போட்டிகள் நடத்தவுள்ளோம்.

இதன் மூலம் தமிழ் மாணவர்கள் சிங்களம் கற்பதற்கும் சிங்கள மாணவர்கள் தமிழ் கற்பதற்கும் உறுதுணையாகவிருக்கும். கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் இரு மொழிக் கருமபீடங்கள் அமைக்கப்படவுள்ளன. அத்துடன் போக்குவரத்து மற்றும் மருத்துவத் துறையில் இரு மொழி கொள்கைகள் கடைப்பிடிக்கப்படுகின்றனவா என்பது தொடர்பாக ஆய்வும் மேற்கொள்ளப்படவுள்ளது என்றார். (25)




## அழுத்தத்தால்...

கள் மற்றும் கட்டாயங்களுக்காக விசாரணைகளைத் துரிதப் படுத்த முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். கடந்த இரண்டு ஆண்டுகளாக இந்த வழக்கு விசாரணைகள் நடத்தப்பட்ட போதிலும், அண்மையில் குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்களுக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

தங்காலை பிரதேச சபையின் தலைவரும், ஆளும் கட்சி முக்கியஸ்தருமான சம்பத் விதாரண பத்திரண என்பவர் உள்ளிட்ட ஏழு பேருக்கு எதிராக குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் அமர்வுகளை இலக்கு வைத்து இந்த விசாரணை நடத்தப்படவில்லை என சட்ட மா அதிபர் தெரிவித் துள்ளார்.

அரசியல் ரீதியாகவோ அல்லது நிறுவன ரீதியாகவோ அழுத்தங்களைப் பிரயோகித்து வழக்கு விசாரணைகளை துரிதப்படுத்த முடியாது எனவும் அதற்குச் சந்தர்ப்பம் கிடையாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விடயமாகக் கருதி இந்த வழக்கு விசாரணை நடத் தப்பட்டதாகத் தெரிவித்துள்ளார்.

## பொதுநலவாய...

மக்களையும் ஏமாற்றி தமது அரசியல் சுயலாபங்களுக்காக நாட்டை படுபாதாளத்திற்கு இட்டுச் செல்வதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது.

நாட்டில் இன்று சட்டமும் ஒழுங்கும் சீரழிந்து, ஜனநாயகம் கேள்விக்குறியாகியுள்ளது. சுயாதீன செயற்பாடுகளை முன் னெடுக்க முடியாத துர்ப்பாக்கிய நிலை தோன்றியுள்ளது.

எனவே, சுயாதீன ஆணைக்குழுக்களை அமைத்து சட்ட ஒழுங்கை சீரமைக்க வேண்டும். அதுவே கட்டாய தேவையாகவுள்ளது என அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

நாட்டை அழகுபடுத்த வேண்டும். அபிவிருத்தி செய்ய வேண்டும். அதை நாங்கள் எதிர்க்கவில்லை. ஆனால், சர்வதேசத்தை ஏமாற்றுவதற்காக இப்படி அவசரம் அவசரமாக நகரை அழகுபடுத்துவதானது அவர்களின் போலித்தனத்தை தெட்டத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## இந்திய மீனவரின்...

சா டக்ளஸ் தேவானந்தாவிற்கு அழைப்பு அனுப்புவதை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறும் ஜனாதிபதி அமைச்சர் ராஜிதவிடம் தெரிவித்தார். கடற்றொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகள், வடக்கு மாகாண கடலோரக் கிராமங்களின் கிராம அலுவலர்களும் இந்தக் கூட்டத்தில் பங்கேற்கும் வகையில் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, வடக்கு கடற்பகுதியில் கடந்த இரண்டு வாரகாலப் பகுதியில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட நூற்றுக்கும் மேற்பட்ட இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்ட மையும் இந்திய மீனவர்களின் அத்துமீறலால் வடக்கு கடற்றொழிலாளர்களே அதிகளவில் பாதிக்கப்படுவதாகவும் இதற்குத் தீர்வு காண்பதற்கு இரண்டு நாட்டு கடற்றொழில் சங்கங்களும் கலந்துரையாடல் களை மேற்கொள்ள வேண்டுமென அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## திருமண...

வந்து கொண்டிருந்த இவர் யாழ்.பிரதான வீதியில் முதலாம் குறுக்குத் தெருச் சந்தியில் இருந்து வீதியைக் கடக்க முற்பட்ட சமயம் யாழ்.நகர் நோக்கி திருமண வீடு ஒன்றுக்கு பயணிகளை ஏற்றி வந்த தனியார் பயணிகளின் பஸ் வண்டி இவர் மீது மோதியதன் காரணமா கவே இவ்விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்த விபத்தில் படுகாயமடைந்த அவர், யாழ். போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்ட போதும் அங்கு சிகிச்சை பலனின்றி அவர் மரணமானதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தச் சம்பவத்தை அடுத்து குறித்த பயணிகள் பஸ்வண்டியின் சாரதி யாழ்.பொலிஸாரினால் விசாரணைக்கெனத் தடுத்து வைகக்கப்பட்டிருப்பதாகவும் யாழ்.பொலிஸார் தெரிவித்தனர். (பா)

# வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு வல்வெட்டித்துறையில் இலக்கியப் போட்டிகள்

மாணவர்களினதும், பொது மக்களினதும் வாசிப்புத் திறன் மற்றும் நூலகப் பயன்பாட்டை மேம்படுத்தும் நோக்கில் முன்பள்ளி ஆசிரியர்கள், பாடசாலை மாணவர்கள், மற்றும் பொது மக்களுக்கான பின்வரும் போட்டிகள் வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்தினால் நடத்தப்படவுள்ளன. வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்தின் எல்லைக்குட்பட்ட பாடசாலைகள், சனசமூக நிலையங்கள் மற்றும் முன்பள்ளிகளின் ஆசிரியர்கள் கலந்து கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பாடசாலை மாணவர்களுக்கிடையே பின்வரும் போட்டிகள் நடத்தப்படவுள்ளன:

கீழ்ப்பிரிவு : தரம் 3 - தரம் 5 வரையான மாணவர்களுக்கு 'எனது கிராமம்' என்ற தலைப்பிலான சித்திரப் போட்டிகள்.

மத்திய பிரிவு : தரம் 6-தரம் 9 வரையான மாணவர்க ளுக்கு மாதிரி சுவரொட்டி தயா ரித்தல்

மேற்பிரிவு : தரம் 10, தரம் 11, ஆகிய மாணவர்களுக்கு பொது அறிவுப் போட்டியும், தரம் 12,13 மாணவர்களுக்கு குறுக்கெழுத்துப் போட்டியும் நடத்தப்படவுள்ளன.

சனசமூக நிலையங்களினூடாக பொதுமக்களுக்கு, 'தொலைக்காட்சிப் பாவனை இன்றைய மனித வாழ்வில் ஏற்படுத்தும் தாக்கம்' என்ற தலைப்பிலான சிறுகதைப் போட்டி. மேற்படி போட்டிகள் யாவும் நாளை நடத்தப்படவுள்ளது. நகராட்சி மன்றத்தின் புதிய மண்டபத்தில் நடத்தப்படவுள்ளது.

பாடசாலை அதிபர்கள் ஒவ்வொரு பிரிவில் இருந்தும் தெரிவு செய்யப்பட்ட இரு மாணவர்களையும், சனசமூக நிலையங்கள் ஒவ்வொன்றும் தலா இருவர் வீதமும் மேற்படி போட்டிகள் நடைபெறும் நாளன்று தவறாது அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

அதேவேளை முன்பள்ளி மாணவர்களுக்கான கதை சொல்லும் நேரம் நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் முன்பள்ளிகள் ஒவ்வொன்றும் தமது முன்பள்ளிகளில் இருந்து தலா ஐந்து மாணவர்கள் வீதம் அழைத்து வருமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர் இவை தொடர்பான அறிவித்தல்கள் சகல பாடசாலைகளுக்கும் ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளதால் தமது மாணவர்களின் வாசிக்கும் ஆற்றலை மேம்படுத்துவதற்காக குறித்த பிரிவு மாணவர்களைத் தவறாது அனுப்பி வைக்குமாறு வல்வெட்டித்துறை நகரசபை தவிசாளர் நடராஜா அனந்தராஜ் சகல அதிபர்களையும் கேட்டுக் கொள்கின்றார். கடந்த வருடமும், இவ் வருடமும் நடைபெற்ற போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கான பரிசுகளும் சான்றிதழ்களும் நிறைவு நாளன்று நடைபெறும் விழாவில் வழங்கப்படவுள்ளது.

## பிரதமரின்...

இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் உள்ள தமிழ் மக்களுக்கு மறுவாழ்வு, பாதுகாப்பு போன்றவற்றை கருத்தில் கொண்டு பொதுநலவாய மாநாட்டில் பிரதமர் பங்கேற்பது பற்றி முடிவு செய்யப்படும் என் றார்.

எனினும், நடைபெறவுள்ள இந்திய நாடாளுமன்ற பொதுத் தேர்தலை கருத்திற்கொண்டு, பொதுநலவாய மாநாட்டை இந்தியப் பிரதமர் புறக்கணிப் பார் என இந்திய ஊடகங்கள் ஆரூடம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## முழங்காவில்...

ஆகவே இது தொடர்பாக மக்கள் அச்சமடையத் தேவையில்லை எனவும் உண்மைநிலை தொடர்பான விபரத்தை விரைவில் பிரதேச மக்களுக்கு தாம் தெளிவுபடுத்தவுள்ளதாகவும் சம்பந்தப்பட்ட தரப்பினர் தெரிவித்தனர்.

போரின் காரணமாக நீண்ட காலமாக வன்னிப் பிரதேசத்தில் மேற்கொள்ள முடியாதிருந்த ஆய்வுகள் தற்போதைய சூழலில் தான் மேற்கொள் ளப்படுகின்றன. இத்தகைய ஆய்வுகள் பரவலாக எல்லாப் பிரதேசங்களிலும் நடைபெற்று வருகின்றன. இந்த ஆய்வுகளின் மூலம் மக்களுக்கான அபிவிருத் தித் திட்டங்களை உருவாக்க முடியும். அதேவேளை இய ற்கை வளங்களைப் பேணவும் முடியும் என்று அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

# கொமன்வெல்த்தில் பங்கேற்கும் இந்தியக் குழுவினர் தங்க விடுதி அறைகள் பதிவு

கொழும்பில் அடுத்த மாதம் நடக்கவுள்ள கொமன்வெல்த் உச்சி மாநாட்டில் பங்கேற்கும் குழுவினர் தங்குவதற்காக, இந்தியா விடுதி அறைகளைப் பதிவு செய்துள்ளதாக, வெளிவிவகார அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள விடுதி ஒன்றில் இந்தியா அறைகளைப் பதிவு செய்துள்ள போதிலும், இந்தியக் குழுவின் முழுவிபரம் தொடர்பாக தெளிவாகத் தெரியவரவில்லை என்றும் அந்த அதிகாரி கூறியுள்ளார்.

இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித், தாம் இந்த மாநாட்டில் பங்கேற்கவுள்ளதாக உறுதிப்படுத்தியுள்ள போதிலும், இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங், இந்தியக் குழுவுக்குத் தலைமை தாங்குவாரா என்று இன்னமும் உறுதிப்படுத்தப்படவில்லை என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

## கடற்றொழிலாளர்களுக்கு...

காலங்களில் இடம்பெற்ற அனர்த்தங்களைக் கருத்திற்கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2008 ஆம் ஆண்டு முதல் மீனவர்கள் பாதுகாப்பு அங்கிகளை அணிவது குறித்த சட்டம் அமுல்ப்படுத்தப்பட்டபோதிலும் மீனவர்கள் இதனை நடைமுறைப்படுத்தவில்லையென வும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை பைலின் சூறாவளியால் ஏற்பட்ட கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட யாழ்ப்பாணம் மற்றும் முல்லைத்தீவில் பாதிப்பிற்குள்ளான படகு உரிமையாளர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக கடற்றொழில் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## இராஜதந்திர..

துரதிஷ்டவசமாக தமிழகத்தைச் சேர்ந்த சில பிராந்திய மற்றும் ஜாதி அடிப்படையி லான கட்சிகள் குழப்பங்களை விளைவிக்கும் நோக்கில் செயற்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார்.

இந்தக் கட்சிகளின் நடவடிக்கைகளினால் அரசாங்கத்திற்கு மட்டுமன்றி நாட்டுக்கே நெருக்கடி நிலைமை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழ் மக்கள் சுயகௌரவத்துடனும் அமைதியாகவும் வாழக்கூடிய சூழ்நிலை ஏற்படுத்தப்படும் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

வெறுமனே கடுமையான சொற்களைப் பயன்படுத்தி உரைகளை ஆற்றுவதனால் தமிழ் மக்களுக்கு நியாயம் கிட்டப்போவதில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# ஆட்லறி குண்டு வெடித்து மாதம்பையில் ஒருவர் காயம்



மாதம்பை, சுதுவெல்ல பகுதியில் ஆட்லறி குண்டு ஒன்றின் பகுதிகள் வெடித்ததனால் ஒருவர் படுகாயமடைந்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

நேற்று முற்பகல் குறித்த பகுதியில் இருந்த பழைய இரும்பு சேகரிக்கும் நிலையம் ஒன்றில் ஏற்பட்ட வெடிப்புச் சம்பவத்தால், ஒருவர் படுகாயமடைந்த நிலையில் சிலாபம் வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவர் அந்த நிலையத்தின் உரிமையாளர் என தெரியவந்துள்ளது. இதேவேளை பாவனையில் இருந்து அகற்றப்பட்டதாக நம்பப்படும் மேலும் பல ஆட்லறி குண்டுகளும் குறித்த இடத்தில் இருந்து பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. இந்த நிலையத்திற்கு அருகில் பழைய இரும்புகளை உருக்கி இரும்புப் பொருட்களை தாயாரிக்கும் தொழிற்சாலை ஒன்று உள்ளது.

பழைய இரும்புகளுடன் கொண்டுவரப்பட்ட குறித்த ஆட்லறி குண்டுகளை அவ்வாறே, அந்த தொழிற்சாலைக்கு விற்க முடியாது என்பதால் அவற்றை வெட்டி விற்க இந்த நிலையத்திற்கு கொண்டுவரப்பட்டதாக கூறப்படுகின்றது. இந்தநிலையில் இதனை வெட்ட முற்பட்ட போதே வெடித்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

# ஐ.தே.க. தலைவர் பதவியிலிருந்து ரணில் விலகியே ஆகவேண்டும்

## ஐக்கிய பிக்குகள் முன்னணி மீளவும் வலியுறுத்து



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவத்தில் இருந்து ரணில் விக்ரமசிங்க விலக வேண்டும் என்ற நிலைப்பாட்டில் எவ்வித மாற்றமும் இல்லை என ஐக்கிய பிக்குகள் முன்னணியின் தலைவர் மீட்டியாகொட குணரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியை வெற்றிப் பாதையில் வழிநடத்துவதற்காக ஐக்கிய பிக்குகள் முன்னணி முன்வைத்த 8 அம்ச யோசனைத் திட்டத்திற்கு ரணில் விக்ரமசிங்க இணக்கம் தெரிவித்ததாக தேரர் குறிப்பிட்டுள்ளார்.

ஆகையால் வேறொரு யோசனைத் திட்டத்திற்கான எவ்வித தேவையும் இல்லை என ஐக்கிய பிக்குகள் முன்னணியின் தலைவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எதிர்காலத்தில் ஆட்சிக்கு வரவேண்டிய தேவையே ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த எமக்கு உள்ளது. இதன் காரணமாகவே மகா சங்கத்தினர் முன்வந்து இத்தகைய யோசனைகளை முன்வைத்தார்கள். கட்சியின் தலைமைத்துவமும் அதனை ஏற்றுக்கொண்டது. அதற்கு இரண்டு வார கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. வேறு யோசனைகள் முன்வைக்கப்படவுள்ளதாக எமக்கு தற்போது தகவல் கிடைத்துள்ளது. அவை அநாவசியமானவை. காரணமற்றவை. கபீர் ஹசீம் இத்தகைய யோசனைகளை முன்வைக்கவுள்ளதாக பத்திரிகைகள் மற்றும் வேறு வட்டாரங்கள் ஊடாக எமக்குத் தகவல் கிடைத்துள்ளது. இதற்காக கபீர் ஹசீமுக்கு உள்ள உரிமை என்ன? எவ்வித உரிமையும் இல்லை. மகா சங்கத்தினருக்கும் ரணில் விக்ரமசிங்கவுக்கும் இடையிலான கொடுக்கல் வாங்கலே இங்கு உள்ளது. ஆகையால் அந்த யோசனைகள் அவ்வாறே அமுல்படுத்தப்படவேண்டும். நாடும் அதனையே எதிர்பார்க்கின்றது. அதனைவிடுத்து வேறு நபர்களின் யோசனைகளை செயற்படுத்த வேண்டிய தேவை இல்லை. அதேபோன்று அனைவரும் குழப்பமடைந்துள்ளனர். நாடு முழுவதும் குழப்பம் ஏற்பட்டுள்ளது. மகா சங்கத்தினரின் வேண்டுகோள் 14 நாட்களுக்குள் செயற்படுத்தப்பட வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும். அதனையே கூற வேண்டியுள்ளது. வேறு நபர்கள் குழப்பமடையத் தேவையில்லை. எவரும் இதில் தலையிட வேண்டாம். அநாவசியமானவர்கள் உள்ளே நுழையக் கூடாது. அதனை தெளிவாகக் கூறுகிறோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

# மாநாட்டில் கலந்துகொள்ளாதீர் கமரூனுக்கு மீண்டும் அழுத்தம்

இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டில் கலந்துகொள்ள வேண்டாம் என பிரித்தானியாவின் பொதுச் சபை வெளியுறவுக் குழு, பிரதமர் டேவிட் கமரூனிடம் கோரிக்கை விடுத்துள்ளது .

பொதுநலவாயத்தின் கொள்கையும் எதிர்காலமும் என்ற தலைப்பில் பிரித்தானியாவின் பொதுச்சபை வெளியுறவுக் குழு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

இலங்கையில் பாரிய மனித உரிமை மீறல் சம்பவங்கள் இடம்பெறுகின்றன. இந்தநிலையில் 2013 ஆம் ஆண்டு பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாடு நடாத்தப்படுகின்றமை பிழையான விடயம். எனினும் இவ்வாறு பிரித்தானியப் பிரதமர் மாநாட்டில் பங்கேற்க எடுத்த தீர்மானம் குறித்து பகிரங்கமான அறிக்கை ஒன்றை வெளியிட வேண்டும்.

2011 ஆம் ஆண்டு பேர்த்தில் நடைபெற்ற பொதுநலவாய நாடுகளின் மாநாட்டின் பின்னர், பொதுநலவாய நாடுகளின் ஆலோசனை சபை, மனித உரிமை மீறல்கள், போர்க்குற்றங்களை காரணம் காட்டி, இலங்கையில் 2013 ஆம் ஆண்டு மாநாட்டை நடத்துவது குறித்து எச்சரிக்கையை விடுத்திருந்தது.

இதேவேளை, டேவிட் கமரூன் மாநாட்டில் கலந்து கொள்வது உறுதியென பிரித்தானியாவில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகரகம் தெரிவித்துள்ளது . அத்துடன் மாநாட்டுக்காக வருகை தரும் கமரூன், வடக்கில் போரினால் பாதிக்கப்பட்ட முக்கிய இடங்களுக்கும் பயணம் மேற்கொள்வார் என தகவல்கள் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நுகர்வோர் சட்டமீறல் 84 மில்லியன் அபராதம்

(கொழும்பு)

இந்த வருடம் இதுவரையான காலப் பகுதியில் நுகர்வோர் சட்டத்தை மீறிய வர்த்தகர்களிடமிருந்து 84 மில்லியன் ரூபாவுக்கும் மேற்பட்ட அபராதம் அறவிடப்பட்டுள்ளது.

நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட 36 ஆயிரத்திற்கும் அதிகமான சுற்றிவளைப்புக்கள் ஊடாக அபராதம் அறவிடப்பட்டதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

விலைப்பட்டியலை காட்சிப்படுத்தாமை, காலாவதியான உணவு வகைகளை விற்பனை செய்தமை, அதிக விலைக்கு பொருட்களை விற்பனை செய்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளின் பேரில் வர்த்தகர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

நுகர்வோர் சட்டத்தை மீறும் வர்த்தகர்களை கைது செய்வதற்கான சுற்றிவளைப்புக்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படவுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபை அறிவித்துள்ளது.

# உணவு நிலையங்கள் மீது நாடளாவிய ரீதியில் சோதனை

நாடளாவிய ரீதியில் உணவு தயாரிப்பு நிலையங்கள், உணவு விற்பனை நிலையங்கள், குடிபானங்கள் விற்பனை மற்றும் தயாரிப்பு நிலையங்களை பரிசோதனை செய்வதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதேவேளை குடிநீர் தயாரிப்பு மற்றும் விற்பனை நிலையங்களையும் பரிசோதிக்கவுள்ளதாக அந்த அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இன்று முதல் எதிர்வரும் 27 ஆம் திகதி வரை உணவு பாதுகாப்பு வாரம் அனுஷ்டிக்கப்படவுள்ளது. இதனைத் தொடர்ந்து இந்த உணவுப் பரிசோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

ஒக்டோபர் மாதம் 16 ஆம் திகதி அனுஷ்டிக்கப்பட்ட உலக உணவு தினத்தை முன்னிட்டு இந்த உணவுப் பாதுகாப்பு வாரம் கடைப்பிடிக்கப்படவுள்ளது.

நாட்டின் பல பாகங்களில் உணவு விஷமாகியமை, குடிபானங்கள் விற்பனை நிலையங்கள் சுத்தமின்மை போன்ற பல சம்பவங்கள் குறித்த தகவல்கள் வெளியாகியுள்ளமையைத் தொடர்ந்து இந்த பரிசோதனை நடவடிக்கையை மேற்கொள்ள சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

மனித பாவனைக்கு ஒவ்வாத வகையில் உணவு தயாரிக்கும், விற்பனை நிலைங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு சுகாதார அமைச்சு உரிய அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளது.

# அடையாள அட்டை பெறும் வயதெல்லை குறைப்பு

(கொழும்பு)

15 வயதுக்கு மேற்பட்ட அனைத்துப் பிரஜைகளுக்கும் தேசிய அடையாள அட்டைகளை வழங்குவதற்கு ஆட்பதிவுத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளதால் இதற்கு ஏற்ப புதிய சட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக ஆட்பதிவு ஆணையாளர் நாயகம் ஆர்.எம்.எஸ். சரத்குமார தெரிவித்துள்ளார்.

புதிய இலத்திரனியல் அடையாள அட்டைகளின் அறிமுகத்தோடு புதிய நடைமுறையும் அமுலுக்கு வரவுள்ளதாக சுட்டிக்காட்டிய அவர் தற்போது இலங்கையில் 16 வயது நிரம்பியவர்களுக்கே தேசிய அடையாள அட்டை விநியோகிக்கப்படுவதாகவும் குறிப்பிட்டார்.

என்வே இதற்கமைய 15 வயது நிரம்பிய அனைத்துப் பிரஜைகளுக்கும் இலத்திரனியல் தேசிய அடையாள அட்டைகளை பெற்றுக்கொடுப்பதற்குத் தேவையான சட்டங்களை வகுத்து வருவதாக தெரிவித்தார்.

## முல்லை - இரணைப்பாலையில்

# 168 குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகள் இல்லை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட இரணைப்பாலைக் கிராமத்தில் மீள்குடியேறியவர்களில் 168 குடும்பங்களுக்கு இன்னமும் நிரந்தர வீடுகள் கிடைக்காமையால் இம்மக்கள் பல்வேறு பாதிப்புக்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

கடந்த 2011 ஆம் ஆண்டு 417 குடும்பங்கள் குறித்த கிராமத்தில் மீள்குடியேறியுள்ள நிலையில் இன்னமும் நிரந்தர வீடுகள் கிடைக்காமையால் பலர் பல்வேறு பாதிப்புக்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இங்கு 209 குடும்பங்களுக்கு 5.5 இலட்சம் ரூபா செலவில் நிரந்தர வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. இதே போல் யுத்தத்தால் சேதமடைந்த 40 வீடுகள் புனரமைக்கப்பட்டு வருவதாகவும் வீட்டுத்திட்டங்களுடன் தொடர்புடைய அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை இப்பகுதியில் 168 குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகள் எவையும் வழங்கப்படாமையால் இம்மக்கள் சொல்லொணாத் துயரங்களுடன் அரசாங்க அதிகாரிகளிடம் நிரந்தரமான வீடுகளை வழங்குமாறு கோரி வருகின்றனர்.

இப் பகுதியில் ஐ.ஓ.எம். நிறுவனத்தின் நிதி அனுசரணையுடன் 175 தற்காலிக வீடுகளும் டி.ஆர்.சி. நிறுவனத்தின் ஏற்பாட்டில் 51 தற்காலிக வீடுகளும் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. 40 குடும்பங்களுக்கு இன்னமும் தற்காலிக வீடுகள் கூட வழங்கப்படவில்லை .

இதனால் இம்மக்கள் தமது ஆதனங்களுக்குள் ஓலைக் குடிசைகளை அமைத்து பல்வேறு கஷ்டங்களுடன் வாழ்ந்து வருகின்றனர் . மூன்று அங்கத்தவர்களைக் கொண்ட பெண்கள் தலைமை தாங்குகின்ற பல வறிய குடும்பங்களுக்குக் கூட இன்னமும் வீடுகள் வழங்கப்படவில்லை.

இதேபோல் இங்கு 275 குடும்பங்களுக்கு மலசலகூட வசதிகளும் இன்னமும் கிடைக்கவில்லை. எனவே மழைக்காலம் ஆரம்பிக்கவுள்ள நிலையில் மழைக்கு முன்னதாக தமக்கும் வீடுகளை வழங்குமாறு இம்மக்கள் அதிகாரிகளிடம் கோருகின்றனர்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 ஒக்ரோபர் 21 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.